www.tamilarangam.net

# இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம்

## எம்.என்.ராய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம்

எம்.என்.ராய்

தமிழாக்கம் :

வெ. கோவிந்தசாமி

விடியல் பதிப்பகம்

கோவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம் |
| ஆசிரியர் பெயர் | : | எம்.என்.ராய் |
| பொருள் | : | சமூக ஆய்வு |
| தமிழாக்கம் | : | வெ. கோவிந்தசாமி |
| முதற்பதிப்பு | : | அக்டோபர் 1999 |
| ஒளியச்சு | : | தமிழோசை ஒளி அச்சகம்<br>கோவை |
| அச்சாக்கம் | : | மணி ஆஃப்செட்<br>சென்னை – 5. |
| விலை | : | ரூ. 25 |
| வெளியீடு | : | விடியல் பதிப்பகம்<br>3, மாரியம்மன் கோயில் வீதி<br>உப்பிலிபாளையம்<br>கோவை – 641 015<br>தொலைபேசி : 0422 – 576772 |

| | | |
|---|---|---|
| Title of the book | : | The Historical role of Islam |
| Author | : | M.N.Roy |
| Subject | : | A social study |
| Tamil translation | : | V. Govindasamy |
| First Edition | : | Oct 1999 |
| Laser printing | : | Tamilosai laser printers Coimbatore |
| Off-set printing | : | Mani Off-set Chennai -5. |
| Price | : | Rs. 25-00 |
| Publishers | : | Vidiyal Pathippagam<br>3, Mariamman koyil veethi<br>Uppilipalayam<br>Coimbatore - 641 015.<br>Ph : 0422 - 576772 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NORWAY
SEELAN BOOKS
SIGNATURE

# பதிப்புரை

இசுலாமை இன்று "சர்வதேசப் பயங்கரவாதமாக" அமெரிக்கா முன்னிறுத்திவருகிறது. இந்தியாவிலும் இந்துத்துவா சக்திகள் இசுலாமியரை எதிரியாகக் காட்டிவருகின்றன. சராசரி மனிதனிலிருந்து, "அறிவுஜீவிகள்" வரை இசுலாம் குறித்தும், இசுலாமியர்கள் குறித்தும் தவறான தப்பெண்ணங்களே நிலவிவருகின்றன. இசுலாமியர் குறித்து ஒரு பொய்யான பொதுப்புத்தி மக்களிடையே நிலவிவருகிறது. இசுலாம் – எதிர்ப்புச் சக்திகள் இந்தப் பொதுப்புத்தியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. இசுலாமியர்கள் குறித்த தவறான எண்ணங்களைப் போக்குவது இன்று சனநாயக வாதிகளின் முக்கியக் கடமைகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்தப்பின்னணியில் வைத்துப்பார்க்கும் போது ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூல் இன்றும் கூட காலப்பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இசுலாம் தோற்றத்திற்கானச் சமூகப் பின்னணி, அதன் வரலாற்றுப் பங்களிப்பு ஆகியன குறித்து இந்நூல் வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துரைக்கிறது. இசுலாம் குறித்து இசுலாம்–அல்லாதவர்கள் மத்தியில் நிலவிவரும் தவறான கருத்துக்களை மாற்றாமல், அடிப்படையில் ஒரு சமூக நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியாது என இந்நூல் ஆசிரியர் உறுதியாகக் கருதுகிறார். அந்த வகையில் இந்துக்கள் மத்தியில் நிலவிவரும் தப்பெண்ணங்களை நீக்க இந்நூல் பெருமளவு உதவும் என்பதே எங்கள் எண்ணம்.

இசுலாமை உயர்த்திப்பிடிப்பது எங்கள் நோக்கமல்ல. மாறாக ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள தவறான கருத்துக்களைக் களைந்தெறிய உதவுவது சனநாயக வாதிகளின் கடமை என்ற முறையில் இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளோம்.

**விடியல் பதிப்பகம்**
கோவை.

www.tamilarangam.net

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆங்கில பதிப்புரை | 5 |
| ஆசிரியர் குறித்து ஒரு முன்னுரை | 7 |
| முன்னுரை | 13 |
| இசுலாமின் இலட்சியப்பணி | 17 |
| இசுலாமின் சமூக வரலாற்றுப் பின்னணி | 28 |
| வெற்றிக்கான காரணங்கள் | 36 |
| முகம்மதுவும் அவரது போதனைகளும் | 45 |
| இசுலாமியத் தத்துவம் | 53 |
| இசுலாமும் இந்தியாவும் | 69 |

www.tamilarangam.net

# ஆங்கிலப்பதிப்பாளர் குறிப்பு

இந்தியாவை ஆண்டு வந்த பேரரசரின் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்த "அரச குற்றத்திற்காக" 1930 களின் தொடக்கத்தில் பன்னிரெண்டு ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, பின் அது ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு சிறையில் இருந்த காலத்தில் எம்.என். ராய் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல், முதன்முதலாக 1939 இல் வெளியிடப்பட்டது. இந்நூலின் முதல் அத்தியாயத்திலும், இறுதி அத்தியாயத்தில் ஒரு சில இடங்களிலும், அன்று நடந்த சமகால நிகழ்ச்சிகளைப் பற்றிய சில மதிப்புரைகளை இவர் முன்வைத்துள்ளார். இந்நூல் வெளிவந்ததற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளைப் பின்னோக்கிப் பார்க்கும்போது நாடு விடுதலை அடைவதற்கும் அதையொட்டி நடந்த பிரிவினைக்கும், ஒரு பத்தாண்டுகள் முன்பே, இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தப் புத்தகம் மிக விரிவாகப் படிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே ஒருவர் விரும்பக்கூடும். இசுலாம் வரலாறு குறித்த ஒரு நல்ல அறிவும்,உளச்சாய்வற்றப் புரிதலும் முசுலீம்கள், முசுலீம் – அல்லாதவர்கள் மத்தியில் இருந்திருந்தால், பிரிவினையின் போது நடந்திருந்த அவலமான நிகழ்ச்சிகளையும், மனித இழப்புக்களையும் தவிர்த்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.ஆனால், அவ்வாறான அறிவும், புரிதலும் இல்லாததால் ஏற்பட்ட தீங்கினைப் புரிந்து கொள்ள இன்னும் கூட காலம் கடந்துவிடவில்லை. ஆகவே, கிழக்கிலும், மேற்கிலும் இசுலாம் ஆற்றிய வரலாற்றுப் பாத்திரம் குறித்த இச்சிறுபுத்தகம், மனிதகுல வரலாற்றின் ஒரு கவர்ச்சிகரமான அத்தியாயம் குறித்து மிக அழகாக எழுதப்பட்டுள்ளதோடு ஒரு புலமை வாய்ந்த ஆய்வுக்கட்டுரையாகவும் விளங்குகிறது. இத்தகைய உள்ளார்ந்த மதிப்புகளைக் கொண்டுள்ள இந்நூல் தன்னளவில் ஒரு வரலாற்றுப் பாத்திரத்துக்கான பணியை ஆற்றக்கூடும்

எஸ். பல்வந்த்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# ஆசிரியர் குறித்து ஒரு முன்னுரை

பல வழிகளிலும் எம்.என். ராய் ஒரு தனிச்சிறப்பான மனிதராவார். ஒரு நடைமுறைப் போராளி, ஒரு சிந்தனையாளன் என்ற இரு அம்சங்களிலுமே இவர் தன்னை வேறுபடுத்திக் காட்டியிருந்தார். ஒரு நடைமுறைப் போராளி என்ற முறையில் இவர் அர்ப்பணிப்பும், பற்றார்வமும் கொண்ட புரட்சிக்காரராக விளங்கினார். ஒரு சிந்தனையாளன் என்ற முறையில் ஒரு ஆழமான சுயமான சமூகத் தத்துவவாதியாக தன்னை வளர்த்தியிருந்தார். இவரது அரசியல் வாழ்க்கையை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒரு தீவிரத் தேசியவாதியாக தன் அரசியல் வாழ்க்கையைத் துவக்கிய இவர், அதே தீவிரத்தோடு ஒரு கம்யூனிஸ்டாக மாற்றம் பெற்று, பின் இறுதியில் ஒரு ஆக்கபூர்வமான தீவிர மனிதநேயவாதியாக விளங்கியிருந்தார். இவரால் நிர்மாணிக்கப்பட்டு, பின் ஆழமாக்கப்பட்ட தீவிர மனிதநேயத்தத்துவமானது எதிர்காலத்தில் ஒரு மிகப் பொருத்தமான தத்துவமாக வரவேற்கப்படலாம்.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு பார்ப்பனக் குடும்பத்தில் 1887 –ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் நாளன்று எம்.என்.ராய் பிறந்தார். நரேந்திரநாத் பட்டாச்சார்யா என்பதே இவரின் உண்மையான பெயர். பதினான்கு வயதிலேயே இவர் தலைமறைவுப் புரட்சிப் பணிகளில் பங்கெடுக்கத் துவங்கிவிட்டார். பற்பல அரசியல் குற்றச்செயல்களிலும், சதி வழக்குகளிலும் பங்கெடுத்திருந்தார். ஆங்கிலேயர் ஆட்சியைத் தூக்கியெறிவதற்காக ஜதீன் முகர்ஜி தலைமையில் இவரும், இவரின் தோழர்களும் ஒரு ஆயுத எழுச்சிக்கான தயாரிப்பிற்குத் திட்டமிட்டிருந்தனர். முதல் உலகப் போர் துவங்கியவுடன், இந்தியப் புரட்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்குவதாக, குறிப்பிட்ட சில ஜெர்மனி முகவர்கள் உறுதியளித்திருந்தனர்.ஜெர்மனியர்களிடமிருந்து ஆயுதம் வாங்க 1915 ஆம் ஆண்டு ஜாவாவிற்கு ராய் பயணம் மேற்கொண்டார். அத்திட்டம் தோல்வியடைந்ததால், மீண்டுமொரு முறை இதே நோக்கத்திற்கு அவர் ஜாவாவுக்குப் பயணம் செய்திருந்தார். அதற்குப் பிறகுதான், அவர் ஜெர்மனியர்களிடமிருந்து ஆயுதம் பெறும் தன் திட்டத்தைச் செயல்படுத்த ஒவ்வொரு நாடாகப் பயணம் செய்தார். பல்வேறு பெயர்களிலும்,போலி கடவுச்சீட்டுகளைக்(பாஸ்போர்ட்) கொண்டும், அவர் ஜாவாவிலிருந்து ஜப்பானுக்கும், ஜப்பானிலிருந்து சீனாவிற்கும், பின் சீனாவிலிருந்து மீண்டும் ஜப்பானுக்கும் பயணம் செய்து பின் 1916 சூன் மாதம் சான்பிரான்சிஸ்கோவைச் சென்றடைந்தார். அத்தருணத்தில், அமெரிக்காவும், உலகப் போரில் பங்கெடுத்திருந்ததால், ராய் மீதும் வேறு சில இந்தியர்கள் மீதும் சான்பிரான்சிஸ்கோவில் ஒரு சதி வழக்குப் போடப்பட்டிருந்தது. அமெரிக்கக் காவல் துறையை ஏமாற்றிவிட்டு, ராய் மெக்சிகோவுக்குத் தப்பிச் சென்றார். அத்தருணத்தில் அவர் சோசலிசம், கம்யூனிசம் குறித்து அடிப்படைப் புத்தகங்களைப் படித்து ஒரு சோசலிசவாதியாக மாறியிருந்தார்.

www.tamilarangam.net

மெக்சிகோ சோசலிசக் கட்சியில் இணைந்து அதன் அமைப்புச்செயலராகப் பொறுப்பு வகித்தார். கட்சி அமைப்பை வளர்த்திய இவர், அதன் பொதுச்செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு சிறப்பு மாநாட்டை நடத்தி அதன் மூலம், அச்சோசலிசக் கட்சியை, மெக்சிகோ கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றியமைத்தார். இவ்வாறாக அவர் சோவியத் ருசியாவிற்கு வெளியில் அமைந்த முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர் என்ற பெயர் எடுத்தார்.

1920 இல் சூலை–ஆகஸ்ட் மாதங்களில் மாஸ்கோவில் நடைபெறவிருந்த கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் மாநாட்டில் பங்கெடுக்க இவர் அழைக்கப்பட்டிருந்தார். மாநாட்டிற்கு முன்னமே மாஸ்கோ சென்றடைந்த அவர் அங்கு லெனினுடன் இந்தியா, சீனா போன்ற காலனிய நாடுகளில் நடந்துவரும் தேசிய விடுதலை இயக்கங்கள் குறித்து ஆலோசனை நடத்தியிருந்தார். தேசிய விடுதலை இயக்கத்தில், காலனிய முதலாளி வர்க்கத்தின் பங்கு குறித்து சில விசயங்களில் அவர் லெனினுடன் கருத்து மாறுபாடு கொண்டிருந்தார். லெனினின் கருத்துரையின் பேரில், தேசிய, காலனியச் சிக்கல்கள் குறித்து லெனினால் தயாரிக்கப்பட்டிருந்த ஆய்வுக் கட்டுரையும், ராயால் தயாரிக்கப்பட்டிருந்த ஆய்வுக் கட்டுரையும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் மாநாட்டில் அதன் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டன. மாநாடு இரண்டு ஆய்வுக் கட்டுரைகளையுமே ஏற்றுக் கொண்டது.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் கொள்கை முடிவெடுக்கும் அனைத்துக் குழுக்களிலும், ராய் ஒரு உயர்ந்த இடத்தைப் பிடித்திருந்தார். இந்தியாவில் ஒரு கம்யூனிஸ்ட் இயக்கத்தை வளர்த்துவதே அத்தருணத்தில் அவர் முக்கியப் பணியாக இருந்தது. இந்தியாவிற்குள் கம்யூனிஸ்ட் ஒற்றர்களையும் அதன் புத்தகங்களையும் இரகசியமாக அனுப்பி வந்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனராக இவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

1927 ஆம் ஆண்டு வாக்கில் கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்தும் ருசியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் சுயமாக சிந்திக்கும் அனைத்து நபர்களையும் ஒழித்துக்கட்ட அல்லது அவர்களை வெளியேற்ற ஸ்டாலின் தனக்கே உரித்தான நுட்பமான தந்திரங்களைக் கையாளத் துவங்கினார். அந்தத் தந்திரங்களுக்குப் பலியானவர்களில் ராயும் ஒருவர். கம்யூனிஸ்ட் அகிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த சில கொள்கைகளை விமர்சனம் செய்து ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப்பு என அழைக்கப்பட்ட சில கட்டுரைகளை ராய் பத்திரிக்கையில் எழுதியிருந்தார். இந்தக் குற்றத்திற்காக அவர் 1929 இல் கம்யூனிஸ்ட் அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்தியாவிற்குச் சென்றால் அங்கு தான் கைது செய்யப்பட்டு, நீண்ட கால சிறைத் தண்டனைக்கு உட்பட நேரிடும் என்பதை ராய் அறிந்திருந்தும், நாடு திரும்ப இப்போது முடிவெடுத்தார். கான்பூர் சதி வழக்கில் (1924) முதல் எதிரியாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த போதிலும், அத்தருணத்தில் இவர் வெளிநாட்டில் இருந்ததால் இவர் மீது விசாரணை மேற்கொள்ள முடியவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கெடுப்பதற்காக நீண்ட கால சிறை வாழ்க்கைக்கு ராய் அணியமாகி விட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1930 ஆம் ஆண்டு டிசம்பரில் ராய் மாறுவேடத்தில் இந்தியா வந்தடைந்தார். 1931 ஆம் ஆண்டு சூலையில் கைது செய்யப்பட்டு வெள்ளையர் அரசாங்கத்தைத் தூக்கியெறியச் சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் பன்னிரெண்டு ஆண்டு சிறைத்தண்டனைக்கு உள்ளானார். மேல் முறையீட்டில் தண்டனைக்காலம் ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

தனது தண்டனைக் காலத்தை முடித்த இவர் 1936 நவம்பர், 20 ஆம் நாளன்று சிறையிலிருந்து விடுதலையானார். அதற்குப் பின் மக்கள் பெருமளவில் இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர வேண்டுமென உடனடியாக ஒரு அறைகூவல் விட்டார். அதே நேரத்தில் ஒரு தீவிரமான அடிப்படை மாற்றத்திற்கும், சனநாயகப்படுத்துலுக்கும் உட்படுத்தாமல், தேசிய இயக்கத்தை வலுப்படுத்த முடியாது என்றும் தெளிவு படுத்தியிருந்தார்.

கிராமம் , தாலூக்கா போன்ற அடிப்படை மட்டங்களிலிருந்து காங்கிரஸ் குழுக்களைக் கட்டுவதன் மூலமும். சனநாயக விடுதலைக்கான சமூக, பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையிலும், தீவிரமான நிலச் சீர்திருத்தக் கொள்கை அடிப்படையிலும், அக்குழுக்களை விரியப்படுத்துவதன் மூலமும் இந்தியத் தேசிய காங்கிரஸ் அமைப்பைக் கட்ட வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தார். கிராம, தாலூக்கா அளவிலான குழுக்களின் வலைப்பின்னலில் ஊடாக இந்தியத் தேசிய காங்கிரசை ஒரு அரசாங்கத்திற்குள் அரசாங்கமாக வளர்த்தெடுப்பதே இவரது திட்டமாக இருந்தது. மாற்று அரசாங்கம் என்ற முறையில், சுதந்திர இந்தியாவிற்கு ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு அரசியல் நிர்ணய அவையைக் கூட்ட வேண்டுமென பொருத்தமான நேரத்தில் காங்கிரஸ் ஒரு அறைகூவலை விட வேண்டுமென்பதே இவரின் திட்டமாக இருந்தது. சனநாயக விடுதலைக்காக ஒரு இந்தியப் புரட்சியைத் தொடங்குவதற்கான ஒரு அறிகுறியாக இந்த அறைகூவல் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே இவரின் திட்டமாக இருந்தது.

இந்தத் தீவிரமான அரசியல் திட்டத்தின் அடிப்படையில் ராயின் தொண்டர்கள் நாடு முழுக்க கிராம, நகர மையங்களில் பணிகளைத் தொடங்கி, இரு ஆண்டுகளுக்குள் புறக்கணிக்க முடியாத ஒரு அரசியல் சக்தியாக வளர்ச்சி அடைந்தார்கள். இருப்பினும், இரண்டாம் உலகப் போரில் இந்தியாவின் பங்கெடுப்பு குறித்த பிரச்னையில் காங்கிரசோடு கொண்ட கருத்து மாறுபாடு காரணமாக 1940 இல் ராயும், அவரது தொண்டர்களும் காங்கிரசிலிருந்து விலக வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் "போலி"க் கட்டம் முடிந்தவுடன் , 1940 ஆம் ஆண்டு நாசிப்படைகள் பிரான்சை ஆக்கிரமித்தன. இந்தப் போர், பாசிச – எதிர்ப்புப் போராக மாற்றம் அடைந்து விட்டது என்றும், உலகம் முழுக்க சனநாயகம் தழைக்க வேண்டும் என்ற அவசியத்திற்காகவாவது எந்த விலை தந்தேனும், நேச சக்திகளின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு தர வேண்டுமென்றும் ராய் அறிவித்தார். " பாசிசம் வெற்றி பெற்று அய்ரோப்பா முழுக்க தன் ஆதிக்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைநிறுத்தி விட்டால் அதன் பின் புரட்சிக்கும், இந்திய விடுதலைக்கும் விடை கொடுக்க வேண்டி வரும்,'' என ராய் வெளிப்படையாக அறிவித்தார். ''பாசிசத்தின் தோல்வி ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தி விடும்'' என்றும் சனநாயக விடுதலை என்ற லட்சியத்தின் அருகே அது இந்தியாவைக் கொண்டு சேர்த்து விடும் என்றும் அவர் நம்பிக்கையோடு கூறினார்.

ஆனால், காங்கிரஸ் தலைவர்கள் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தனர். பாதுகாப்பு, வெளியுறவுத்துறை ஆகிய விசயங்களில் முழுத்தன்னாட்சியுரிமை கொண்ட ஒரு தேசிய அரசை அமைத்துக் கொள்ள அனுமதித்தால் மட்டுமே போர் முயற்சிகளுக்கு இந்திய மக்களின் ஆதரவு கிடைக்கும் என அவர்கள் அறிவித்தார்கள். நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால், அரசின் போர் முயற்சிகள் எதிர்க்கப்படும் என்ற தொனி இதில் இருந்ததால், ராய் இந்த நிபந்தனை அடிப்படையிலான ஆதரவை ஒப்புக் கொள்ளவில்லை. இந்திய சனநாயக விடுதலைக்குப் பாசிச – எதிர்ப்பின் வெற்றி அவசியமாகும் என்பதால் நம் உதவிகளை நிபந்தனை அடிப்படையில் வைக்கக்கூடாது என அவர் வாதிட்டார். இந்தப் பிரச்னையின் காரணமாக ராயும் அவரது நண்பர்களும், காங்கிரசிலிருந்து விலகி 1940 டிசம்பரில் தீவிர சனநாயகக் கட்சி என்ற பெயரில் ஒரு புதுக்கட்சியைத் தொடங்கினார்கள்.

இந்தப்போரில் பாசிசச்சக்திகள் தோற்றுப் போவார்கள் என்றும் பாசிச எதிர்ப்புப் போராட்டத்தினால் பிரிட்டனிலும், நேசநாடுகளிலும் ஏற்படும் சமூக, பொருளாதார மாற்றங்களினால், இந்தியா தேசிய விடுதலை பெறும் என்றும், 1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே ராய் கருத்துச் சொல்லியிருந்தார். ராயின் எதிர்பார்ப்புகள் சரியென மெய்ப்பிக்கப்பட்டன. சர்வதேசப் பாசிசத்தின் தோல்வியினால் உருவாயிருந்த விடுதலைச் சக்திகளின் விளைவாகத்தான் முக்கியமாக இந்தியா விடுதலை பெற்றது என வரலாற்றாசிரியர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்தப்போரில், பாசிசச்சக்திகள் தோல்வியுறப் போவது உறுதி என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்த ராய், போருக்குப் பிந்திய இந்தியாவின் மறு நிர்மாணம் குறித்துத் தம் கவனத்தைத் திருப்பினார். 1943 , 1944 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கான "மக்கள் திட்டம்" "சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புத் திட்ட நகல்" என்ற பெயர்களில் , இரு அடிப்படை ஆவணங்களை ராய் தயாரித்திருந்தார். நாட்டின் பொருளாதார , அரசியல் சிக்கல்களுக்கு ராய் முன்வைத்த சுயமான தீர்வுகள் இந்த ஆவணங்களில் அடங்கியிருந்தன. அன்றைய நேரத்தில் நடப்பிலிருந்து பொருளாதாரச் சிந்தனைக்கு நேர்மாறாக, இவர், விவசாயம், சிறு தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தனது மக்களுக்கான திட்டத்தில் முன்னுரிமை தந்திருந்தார். இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் உற்பத்தியானது, பயன்பாட்டுக்குத் தானே தவிர லாப நோக்கத்திற்கு அல்ல. உணவு, உடை, கல்வி, மருத்துவம் ஆகிய அடிப்படைத் தேவைகளை அளிப்பதே

www.tamilarangam.net

பொருளாதாரத் திட்டமிடலின் லட்சியமாக இருந்தது. இந்திய அரசியலமைப்புத் திட்ட நகலின் கருத்துப்படி சட்ட உருவாக்கம், நிலுவையில் உள்ள மசோதாக்கள் மீது கருத்து கூறுதல், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல், முக்கிய தேசியச் சிக்கல்கள் மீது நேரடி வாக்கெடுப்பு போன்ற அதிகாரங்களைக் கொண்ட மக்கள் குழுக்களை நாடு முழுவதும் உருவாக்கி அதனடிப்படையில் , இந்திய அரசாங்கம் அமைக்கப்படும். பின்னால், ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களால் பிரபலப்படுத்தப்பட்ட மக்கள் குழுக்கள் என்ற கருத்தானது ராயின் "சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புத் திட்டநகலிலிருந்தே " முக்கியமாக எடுக்கப்பட்டிருந்தது.

போர் முடிந்த பிறகு, கம்யூனிசம், மார்க்சியம் குறித்த தன் கருத்து மாறுபாடுகளை ராய் முன்வைக்கத் தொடங்கினார். மனிதகுல வரலாற்றில் கருத்துக்களின் பாத்திரம் குறித்தும், நல்லொழுக்க மதிப்பீடுகளின் முக்கியத்துவம் குறித்தும் மார்க்சியம் முன்வைத்திருந்த கருத்துகளிலிருந்து முக்கியமாக இவர் வேறுபட்டு நின்றார். பல்வேறு ஆய்வுகள் மூலம் தான் முன்னெடுத்த தத்துவக் கருத்துக்களை இவர் தொகுத்து முன்வைத்தார். அத்தொகுப்பு தீவிர மனித நேயம் குறித்து இருபத்தியிரண்டு ஆய்வுக் கட்டுரைகள் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. புதிய மனிதநேயம் குறித்தும் இவர் ஒரு கொள்கை அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த ஆய்வுக் கட்டுரைகள் தீவிர மனிதநேயத்தின் சமூகத் தத்துவத்தையும் தனிநபர் தத்துவத்தையும் சுருக்கமாக எடுத்துக் காட்டின. மனிதனின் உயிரியல் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப சுதந்திரம், பகுத்தறிவு, நல்லொழுக்கம் ஆகிய அடிப்படை மதிப்பீடுகள் வளர்ச்சி பெற்ற வரலாற்றை இக்கட்டுரைகள் எடுத்துக்காட்டின. விடுதலைத்தாகமும், உண்மைத் தேடலுமே மனித முன்னேற்றத்தின் அடிப்படைத் தூண்டுதலாக இருந்திருக்கின்றன என அது கோடிட்டுக் காட்டியது. அரசியல் விடுதலையும், பொருளாதார விடுதலையும் பிரிக்கப்பட முடியாதது என்பதை வலியுறுத்திய இவ்வாய்வுக் கட்டுரைகள் ஒரு ஒருங்கிணைந்த அரசியல், பொருளாதார விடுதலையை எப்படி வெற்றி கொள்வது என்பதை விளக்கிக் காட்டியிருந்தன.

இருபத்தியிரண்டு ஆய்வுக் கட்டுரைகளில் விளக்கப்பட்டிருந்த கொள்கைகள் குறித்தும், புதிய மனிதநேயக் கொள்கை அறிக்கை குறித்தும் செய்யப்பட்டு வந்த தொடர்ந்த விவாதங்கள் சனநாயகம் என்ற லட்சியத்தோடு கட்சி அரசியல் ஒத்துப் போகாது என்ற முடிவிற்கும் கட்சி அரசியலானது அதிகார அரசியலாக சீரழிந்து போகக் கூடிய சாத்தியம் உண்டு என்ற முடிவிற்கும் ராயை இட்டுச் சென்றன. ஒரு சனநாயக அமைப்பில் அரசியல் அதிகாரங்கள் மக்கள் குழுக்கள் போன்ற அடிப்படை நிறுவனங்கள் வசமே கையளிக்கப்பட வேண்டும் என்றும், எந்தவொரு அரசியல் கட்சியும் அதைப் பறித்து விடக் கூடாது என்றும் ராய் கருத்துக் கொண்டிருந்தார். கல்வியறிவில்லாத பெரும்பான்மை மக்களைக் கொண்ட நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் கட்சி அரசியலானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரத்தைப் பிடிப்பதற்கான கொள்கையற்ற போட்டியாக மாறிவிடும் சாத்தியம் இருக்கிறது எனவும் இவர் சுட்டிக் காட்டினார். இந்தக் கருத்துக்களின் விளைவாக 1948 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற அனைந்திந்திய மாநாட்டில் தீவிர சனநாயகக் கட்சி கலைக்கப்பட்டது. தீவிர மனிதநேய இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டது.

ராய் ஒரு அறிவு மேதை. சுயமான கருத்துக்களின் நிரந்தர ஊற்றாக அவர் விளங்கி வந்தார். தன் வாழ்நாள் முழுவதும் விடுதலை என்ற லட்சியப் பணிக்கே தன் அறிவு வல்லமையைப் பயன்படுத்தி வந்தார். வாழ்க்கை முழுக்கவும், இவரை இயக்கிய அடிப்படை உந்து சக்தியாகவும் உணர்ச்சிப் பெருக்காகவும் விடுதலையே இருந்து வந்திருக்கிறது.

வி. எம். தார்க்குண்டே<br>புதுதில்லி<br>30.10.1980

www.tamilarangam.net

# முன்னுரை

இசுலாமின் வெளிப்படையான திடீரெழுச்சியும், அதன் துடிப்பான வளர்ச்சியும் மனிதகுல வரலாற்றில் ஒரு மிக ஈர்ப்பான அத்தியாயமாகத் திகழ்ந்து வருகிறது. இந்திய வரலாற்றின் இன்றைய வேதனையான காலகட்டத்தில் இது குறித்து ஓர் விருப்பு வெறுப்பற்ற ஆய்வை மேற்கொள்வது முக்கியத்துவமுடையதாகும். இந்த ஆய்வின் அறிவியல் மதிப்பு அதனளவில் மகத்தானதாகும். பாராட்டப்பட வேண்டிய அதன் அறிவுத் தாகம் நிச்சயம் மிக்கப் பலனளிக்கக் கூடியதாகும். ஆனால் இன்றைய இந்திய மக்களை– குறிப்பாக இந்துக்களை– பொறுத்தவரையில் இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம் குறித்தும், மனிதகுலப் பண்பாட்டிற்கு அது வழங்கியுள்ள பங்களிப்பு குறித்தும் ஒரு சரியான புரிதலைப் பெறுவது ஒரு ஒப்புயர்வற்ற அரசியல் முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும்.

அரபு இறைத்தூதரைப் பின்பற்றிவரும் மக்களில் ஒரு கணிசமான பேருக்குத் தாயகமாக இந்த நாடு விளங்குகிறது. ஒரு முசுலீம் நாட்டில் இருப்பதைக் காட்டிலும், அதிக எண்ணிக்கையில் முசுலீம்கள் இந்தியாவில் வாழ்ந்து வரும் விசயத்தை யாருமே சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை. பல நூற்றாண்டுகள் கழிந்த பின்பும் கூட, இந்திய மக்கள் தொகையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வசித்து வரும் இந்த மக்கள் பிரிவு பொதுவாக அந்நியச்சக்தியாகவே கருதப்பட்டு வருகிறது. நெகிழ்வான இந்தியத் தேசியக் கட்டுமானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான, ஆனால், மிகமிக வருத்தம் தரும் இந்தப் பிளவிற்கு வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவிற்குள் படையெடுப்பாளர்களாகவே முகமதியர்கள் நுழைந்தார்கள். அவர்கள் இந்த நாட்டை வெற்றி கொண்டு, நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆட்சியும் புரிந்து வந்தார்கள். படையெடுப்பாளர்களுக்கும் அடிமைப்பட்ட மக்களுக்கும் இடையில் நிலவி வந்த உறவு, நம் நாட்டு வரலாற்றில் அதன் முத்திரையைப் பதித்துச் சென்றிருக்கிறது. இன்று இது இருதரப்பாரையும் பாதித்து வருகிறது. ஆனால், நமது இன்றைய அடிமைத்தனமானது, வெறுப்பூட்டும் அக் கடந்த கால உறவைப் படிப்படியாகப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்துக்களும், முசுலீம்களும் ஒரே மாதிரியான வேதனையையும், அழிவையுமே அனுபவித்து வருகிறார்கள். ஆகவே, இந்திய நாட்டின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக முசுலீம்கள் விளங்கி வருவதால், முசுலீம்களின் ஆட்சியை இந்திய வரலாற்றில் வெறும் வரலாற்றுப் பதிவுகளாகவே பதிவு செய்ய வேண்டும். உண்மையில், தேசிய உணர்ச்சியானது, வேதனை தரும் கடந்தகால நினைவுகளை மேலும் மேலும் துடைத்தெறிந்து வருகிறது.

தற்போது அனுபவித்து வரும் அவமானத்தை ஈடு செய்ய உண்மையான அல்லது தொன்மையான கடந்த காலப் பெருமிதத்தில் அடைக்கலம் தேடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைமுறையானது, இந்திய முசுலீம் ஆட்சியாளர்களுக்கு மனத்தை ஈர்க்கும் முனைப்பான தேசிய வண்ணங்களைத் தீட்டி வருகிறது.

இருப்பினும் கூட, அக்பரின் ஆட்சியில் செழித்தோங்கிய செல்வ வளம் குறித்து பெருமிதப்படும் அல்லது ஷாஜகானின் கட்டிடக் கலையின் சிறப்புகள் குறித்து இறுமாப்புக் கொள்ளும் ஒரு இந்து, இன்றும் கூட, இந்திய வரலாற்றைப் பெருமிதப்படுத்தியதாக நம்பப்படும் அந்தப் புகழ்பெற்ற பேரரசர்களின் இனத்தைச் சேர்ந்த அல்லது அவர்கள் பின்பற்றிய மத நம்பிக்கையில் விசுவாசமான பற்றுறுதி கொண்ட தனது அண்டை வீட்டுக்காரரிடம் இணக்கப்படுத்த முடியாத ஒரு இடைவெளியைக் கடைப்பிடித்து வருகிறார். இந்திய மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினராக விளங்கும் வைதீக இந்துக்கள் முசுலீம்களை மிலேச்சர்களாக அதாவது அசுத்தமான காட்டுமிராண்டிகளாகவே கருதி வருகிறார்கள். இந்துக்களிலேயே தாழ்ந்த நிலையிலிருப்பவர்களிடம் காட்டி வரும் அதே சமூக அணுகுமுறையைத்தான் இவர்களிடமும் இந்துக்கள் கடைப் பிடித்து வருகிறார்கள். உயர்குடியில் பிறந்த அல்லது உயர்கல்விகற்ற அல்லது மதிக்கத்தக்க அளவு கலாச்சாரப் பெறுமதிகளைப் பெற்ற ஒரு முசுலீமைக் கூட இந்துக்கள் இவ்வாறு தான் கருதி வருகிறார்கள்.

கடந்த காலங்களில் தங்களை அடக்கியாண்ட படையெடுப்பாளர்கள் மீது ஒடுக்கப்பட்ட மக்கள் இயல்பாகக் காட்டி வந்த வெறுப்பே, மேற்சொல்லியுள்ள தனித்தன்மையான சூழலுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. இந்த வெறுப்பு வளரக் காரணமாயிருந்த அரசியல் உறவுகள் பழங்கதையாகி விட்டன. ஆனால், வெறுப்பு மட்டுமே இன்றும் தொடர்ந்து நீடித்து வருகிறது. இவ்வெறுப்பு தேசிய இணைப்பிற்குத் தடைக்கல்லாக இருந்து வருகிறது. அத்தோடு வரலாறு குறித்து ஒரு விருப்பு வெறுப்பற்ற கருத்து உருவாகத் தடையாகவும் இருக்கிறது. ஒரே நாட்டில், பல நூற்றாண்டுகள் இரு சமூகங்கள் இணைந்து வாழ்ந்து வருவதற்கு இந்த நாட்டை விட உதாரணம் வேறு எந்த நாடும் கிடையாது. இருப்பினும், இரு வேறு சமூகமும் ஒன்றுக்கொன்று மற்ற சமூகத்தின் கலாச்சாரத்திற்கு மரியாதை தருவதில்லை. இசுலாமிய வரலாறு குறித்து இந்துக்கள் கொண்டுள்ள மிக மோசமான அறியாமையைப் போல, அம்மதத்தின் மீது இந்துக்கள் கொண்டுள்ள வெறுப்பைப் போல, உலகில் வேறெந்த பண்பட்ட மக்களும் கொண்டிருக்க மாட்டார்கள். ஆன்மீக ஏகாதிபத்தியம், நமது தேசியக் கருத்தியலில் மிக முக்கியமான அம்சமாக இருந்து வருகிறது. ஆனால், இந்த அருவருப்பான ஆன்மீகக் கருத்தானது, முசுலீம்களோடு கொண்டுள்ள உறவில் தன்னை மிக முனைப்பாக வெளிக்காட்டி நிற்கிறது. அராபிய இறைத்தூதரின் போதனைகள் குறித்து தற்போது நிலவி வரும் கருத்துக்கள் மிகமிகத் தவறானவை. இசுலாமின் மகத்தான புரட்சிகர முக்கியத்துவம் பற்றியோ, இசுலாமியப் புரட்சியின் மாபெரும் பண்பாட்டுத் தாக்கங்கள் பற்றியோ, படித்த ஒரு சராசரி இந்தியனுக்கு ஒன்றுமே தெரியாது. அத்தோடு அவன் அதனை மதிப்பதுமில்லை. முசுலீம்கள் குறித்து தற்போது நிலவிவரும் கருத்துக்கள், தீங்கான பின்விளைவுகளைக் கொண்டிருக்காவிட்டால் அக்கருத்துக்களை நாம் கேலிக் கூத்தானவை என ஏளனம் செய்திருக்க முடியும். இந்திய மக்களின் நன்மைக்காகவும், வரலாற்று உண்மை, அறிவியல்

www.tamilarangam.net

ஆகிய நலன்களுக்காகவும், இந்தக்கருத்துக்களை எதிர்த்துட வேண்டியிருக்கிறது. இந்திய வரலாற்றின் நெருக்கடியான இந்தத் தருணத்த இசுலாமின் பண்பாட்டு முக்கியத்துவம் குறித்த ஒரு சரியான மதிப்பீடு ஒப்புயர்வற்ற முக்கியத்துவம் கொண்டதாகும்.

மாபெரும் வரலாற்றாசிரியாரான **ஜிப்பன்** அவர்கள் இசுலாமின் எழுச்சி குறித்தும்,அதன் வளர்ச்சி குறித்தும் குறிப்பிடும்போது, " உலக நாடுகள் மத்தியில் ஒரு புதிய, அழிக்க முடியாத பாதிப்பைச் செலுத்திய முக்கியமான மறக்கவொண்ணா புரட்சியாகும்" என வர்ணித்துள்ளார். அரபுப் பாலைவனப் பகுதியைச் சேர்ந்த ஒரு சிறு நாடோடிக் கூட்டத்தார் புதிய (மத) நம்பிக்கையின் பற்றார்வத்தால் ஊக்கம் பெற்று மிக வலிமையான இரு பேரரசுகளை வியப்பூட்டும் வேகத்தில் வீழ்த்திய ஒரு நிகழ்வு குறித்து ஆழ்ந்து சிந்திக்கும் யாருமே வியப்படையவே செய்வர். தனித் தன்மையான இறைத்தூதர் என்ற முறையில், முகம்மது நபி அவர்கள் வாள்முனையில் தன் அமைதி இலட்சியத்தை முன்னெடுத்து அய்ம்பது ஆண்டுகள் கழிவதற்குள்ளாகவே அவரின் சீடர்கள், ஒரு புறம் இந்திய எல்லைக்குள்ளும் மறுபுறம் அட்லாண்டிக் கடலோரமும், இசுலாம் பதாகையை வெற்றிகரமாகப் பறக்க விட்டார்கள். டமாஸ்கஸ்ஸைச் சேர்ந்த முதல் கலீபாக்கள், ஒரு மாபெரும் பேரரசைக் கட்டி ஆண்டு வந்தார்கள். வேகமாகச் செல்லும் ஒரு ஒட்டகத்தின் மீது அமர்ந்து அய்ந்து மாத காலம் பயணம் செய்தாலும், அந்தப் பேரரசின் எல்லையைத் தாண்ட முடியாது என்ற அளவிற்கு அப்பேரரசு விரிவானதாக இருந்தது. ஹிஜிரா*(Hejira) ஆண்டின் முதல் நூற்றாண்டின் முடிவின்போது கலீபாக்கள் உலகிலேயே மிக வலிமையான ஆட்சியாளர்களாகத் திகழ்ந்து வந்தார்கள்.

அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுவதன் மூலமே அனைத்து இறைத் தூதர்களும் தங்களின் உரிமைத்தகுதியை நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் அனைத்து இறைத் தூதர்களைக் காட்டிலும், முகம்மது நபியை மிக உயர்வான இறைத் தூதராக- அவருக்கு முன்னும் சரி, அல்லது அவருக்குப் பின்பும் சரி- அங்கீகாரம் செய்தாக வேண்டும். ஏனெனில், இசுலாமின் வளர்ச்சியானது, அனைத்து அற்புதங்களை விட அற்புதமானதாகும். பிற்காலத்தில் டிராஜர்களால் விரிவாக்கம் செய்யப்பட்ட அகஸ்தஸ்ஸின் ரோமப் பேரரசானது எழுநூறாண்டு காலம் நடந்த மாபெரும் போர்களுக்கும் புகழ்பெற்ற வெற்றிகளுக்கும் பின்பே உருவானது. ஆனால், ஒரு நூற்றாண்டிற்கும் குறைவான காலத்திற்குள் நிலைநிறுத்தப்பட்ட அரபுப் பேரரசின் அளவு இதைவிடப் பன்மடங்கு பெரியதாய் இருந்தது. கலீபாக்களின் விரிந்த பேரரசின் ஒரு சிறு பகுதி அளவுதான் அலெக்சாண்டரின் பேரரசு இருந்தது. ரோமப் பேரரசின் எதிர்ப்பை, ஆயிரம் ஆண்டுகாலம் சமாளித்து வந்த பாரசீகப் பேரரசு பத்தாண்டு காலத்திற்குள்ளாகவே "இறைவனின் வாளுக்கு" அடிபணிந்து போனது. இசுலாமிய எழுச்சியின் அற்புதம் குறித்து ஒரு நவீன வரலாற்றாசிரியர் சொல்வதைக் கேட்போம்.

---

* ஹிஜிரா ஆண்டு:- முகம்மது நபி அவர்கள் மெக்கா நகரிலிருந்து மதீனா நகர் நோக்கிப் பயணம் சென்ற ஆண்டை (கி.பி. 622) இசுலாமியர்கள் தங்கள் வரலாற்றின் தொடக்க மாகக் கொண்டு ஆண்டுகளைக் கணக்கிட்டு வருகிறார்கள். (மொர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ுயில், ஒரு நிலையான இராணுவம் அல்லது ஒரு ன அரசியல் இலட்சியம் இருந்ததற்கான எந்த ளமும் காணப்படவில்லை. அராபியர்கள், கவிஞர்களாக, ஞர்களாக, சண்டைக்காரர்களாக, வணிகர்களாக இருந்து தார்கள். ஆனால், அவர்கள் அரசியல்வாதிகளாக இருந்ததில்லை. மதத்தை ஒரு நிலையான அல்லது அய்க்கியப்படுத்தும் சக்தியாக அவர்கள் அறியவுமில்லை. ஒரு தாழ்ந்த வடிவிலான பல தெய்வ வழிபாட்டையே அவர்கள் பின்பற்றி வந்தார்கள்.... இந்தப்புதிரான காட்டுமிராண்டிகள் ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிறகு அவர்களாகவே ஒரு மாபெரும் உலக சக்தியாக உருவெடுத்தார்கள். சிரியாவையும், எகிப்தையும் அவர்கள் வெற்றி கண்டார்கள். பாரசீகப் பேரரசை வீழ்த்தித் தங்கள் பேரரசாக மாற்றினார்கள். துருக்கியின் மேற்குப் பகுதியிலும், பஞ்சாபின் ஒருபகுதியிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். பெர்பர்களிடமிருந்தும், ரோமர்களிடமிருந்தும் ஆப்பிரிக்காவையும் விசிகோர்த்களிடமிருந்து ஸ்பெயினையும் கைப்பற்றினார்கள். கிழக்குப் பகுதியில் கான்ஸ்டான்டிநோபிளையும், மேற்குப் பகுதியில் பிரான்சு நாட்டையும் அச்சுறுத்தி வந்தார்கள். அலெக்சாண்டிரியா அல்லது சிரியாத் துறைமுகத்தில் கட்டப்பட்ட அவர்களது கப்பல்கள், மத்திய தரைக்கடல் வழியாகப் பயணம் செய்தன. கிரேக்கத் தீவுகளை அக்கப்பல்கள் கொள்ளையடித்தன. ரோமப் பேரரசின் கப்பல் படைக்கு இவை சவாலாக விளங்கி வந்தன. பாரசீகர்களும், அட்லஸ் மலைப் பகுதியைச் சேர்ந்த பெர்பர்களும் மட்டுமே இவர்களுக்கு ஒரு தீவிரமான எதிர்ப்பைக் காட்டியவர்கள். எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இவர்களின் வெற்றிப் பாதையில் எந்த உறுதியான தடையும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இவர்கள் மிக எளிதாக வெற்றி ஈட்டினார்கள். மத்திய தரைக் கடல் இனி ரோமப்பேரரசின் உடைமையல்ல. ஒரு புதிய கீழைத் தேய நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த ஒரு புதிய கீழைத் தேயப் பண்பாட்டை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் அய்ரோப்பியாவைச் சேர்ந்த அனைத்து கிறித்துவ அரசுகளும் இருந்தன."*

இந்த மாபெரும் அற்புதம் எப்படி நிகழ்ந்தது? வரலாற்று ஆசிரியர்களைத் திணறவைக்கும் கேள்விகளில் இதுவும் ஒன்றாகும். பணிவும் சகிப்புத் தன்மையும் கொண்டு விளங்கிய மக்கள் மீது மதவெறி நிகழ்த்திக் காட்டிய வெற்றியே இசுலாமின் எழுச்சியாகும் என்ற கொச்சையான கோட்பாட்டை இன்று கல்வி கற்ற உலகம் ஒதுக்கி விட்டது. கிரேக்க, ரோமப் பண்பாடுகள் மட்டுமல்ல, பாரசீகம், சீனா, இந்தியா ஆகியவற்றின் அழுகிப்போன பழம் பண்பாடுகளினால் ஏற்பட்டிருந்த அவநம்பிக்கைச் சூழலிருந்து அம்மக்களை விடுவித்த இசுலாமின் திறமையும் அதன் புரட்சிகர முக்கியத்துவமுமே இந்த அற்புதமான வெற்றிக்கு முதன்மைக்காரணமாகும். ☐

* எச். ஏ.எல்.பிஷர் – "அய்ரோப்பாவின் வரலாறு" பக். 137–38

www.tamilarangam.net

# இசுலாமின் இலட்சியப் பணி

இசுலாம் வரலாறு குறித்து ஒரு கொச்சையான விளக்கத்தை முன் வைப்பவர்கள் அதன் இராணுவ வெற்றிக்கே மிக அழுத்தம் தந்து வருகிறார்கள். ஒன்று அந்த இராணுவ வெற்றியைப் புகழ்வதற்காகவாவது அல்லது இசுலாமின் நீண்ட நெடிய புரட்சிகர முக்கியத்துவத்தை மறுப்பதற்காகவாவது இவ்வாறு செய்கிறார்கள். சாரசென்கள்(Saracens) என அழைக்கப்படும் அந்த அராபிய நாடோடிகளின் இராணுவ வெற்றிகள் மட்டுமே, இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம் குறித்த ஒரு மதிப்பீடாக இருந்திருந்தால், இசுலாம் ஒரு தனிச்சிறப்பான வரலாற்று அற்புதமாகத் திகழ்ந்திருக்க முடியாது. தார்த்தாரி, சித்தியப்பகுதிகளைச் சேர்ந்த (கோதர்கள், ஹூணர்கள், வாண்டல்கள், அவரிகள், மங்கோலியர் இன்ன பிற) காட்டுமிராண்டிகளின் கொள்ளைச் செயல்களுக்கு சமமானதாக அல்லது அதனை விஞ்சிய நிலையில் அராபியர்களின் இராணுவச் செயல்கள் இல்லையென்ற போதிலும், ஏறத்தாழ அதனை ஒத்ததாக இருந்தது. ஆனால் அய்ரோப்பாவின் மேற்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகளிலும், ஆசியாவிலும் அவ்வப்போது தோன்றிய திடீர் எழுச்சிகளுக்கும், அரேபியாவில் தோன்றிய மதவெறியின் எழுச்சிக்கும் இடையே ஒரு பாரிய வேறுபாடு காணப்படுகிறது. முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள திடீர் எழுச்சிகள், கடல் அலைகளைப்போல, பெரும் ஊழிக்காற்றாக எழுந்து, விரைவிலோ அல்லது சற்றுத் தாமதித்தோ அழிந்து போய்விட்டன. இதனால் விளைந்த சாவும், அழிவும் பாரதூரமானவை. ஆனால், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள எழுச்சியோ, ஒரு வரலாற்று நிகழ்விற்கு உட்பட்டதாகும். மனிதகுல வரலாற்றின் ஏடுகளில் ஒளிவீசும் பண்பாட்டு அத்தியாயத்திற்குக் கட்டியம் கூறுவதாகும். அழிவு என்பது இந்த லட்சியப் பணியில் ஒரு துணைப்பாத்திரமே வகித்து வந்திருக்கிறது. ஒரு அவசியமான புதியதை நிர்மாணிக்க இது (இசுலாம்) பழமையை இடித்துத் தரைமட்டமாக்கியது. ஒன்றுதிரட்டப்பட்டு வைத்திருந்த மனித அறிவுக் கருவூலத்திற்கு நேரிடவிருந்த அழிவிலிருந்து அதனைக் காப்பதற்கும், அடுத்த தலைமுறைகளுக்குப் பயன்பெறும் வகையில் அதனைப் பேணிப் பாதுகாக்கவும், பன்மடங்காகப் பெருக்கவும், இது சீசர்களின், சோஸ்ரோக்களின் புனிதப் பேரரசுகளை இடித்துத் தரைமட்டமாக்கியது.

அராபியக் குதிரைவீரர்களின் வியப்பிற்குரிய அருஞ்செயல்கள் மட்டுமே, இசுலாமின் தனித்தன்மையான அம்சமாகி விடாது. அந்த அருஞ்செயல்கள் நம் கவனத்தை வசப்படுத்தி அவர்கள் மீது ஒரு வியப்பை ஏற்படுத்துவதோடு இந்தப் பிரம்மாண்டமான சக்தி வாய்ந்த வரலாற்று நிகழ்விற்கான காரணங்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டுபிடிக்கவும், அந்த இலட்சியங்கள் மீது நாம் மரியாதை கொள்ளவும் நம்மைத் தூண்டுகின்றன. "இறைப்படை" (army of the God) நிகழ்த்திக் காட்டிய அற்புதச் செயல்களின் பேரொளி (நமது) பார்வையை மங்கச் செய்து விடுவதால் இசுலாமியப் புரட்சியின் மாபெரும் சாதனைகளை ஒரு சராசரி வரலாற்று மாணவன்– அவன் ஒரு முசுலீமாக இருந்தாலும் கூட– அறிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இருப்பினும், அரபு இறைத்தூதரின் சீடர்கள் ஈட்டிய இராணுவ வெற்றிகளானது, சமூக, பண்பாட்டுத் தளங்களில் (இசுலாம்) நிகழ்த்திக் காட்டிய வளமையான அழிக்கவொண்ணாச் செயல்பாடுகளுக்கு ஒரு முன்னுரை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இந்த இராணுவ வெற்றிகள் அரசியல் அய்க்கியத்திற்கான ஒரு சூழலை உருவாக்கித் தந்தன. அதனால், பொருளாதாரச் செழுமைக்கும், ஆன்மிக வளர்ச்சிக்குமான ஒரு சகாப்தத்திற்கு வழி கிடைத்தது. புதிய சிந்தனைகளோடும், புதிய இலட்சியங்களோடும் கூடிய ஒரு புதிய சமூக அமைப்பு வளரும் பொருட்டு ரோம்,பாரசீகப் பேரரசுகளின் மிகப்பெரிய அழிவின் இடிபாடுகளை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது.மேஜியன் *மாயாவாதத்தின் கொடுமையான மூடத்தனமும், கிரேக்கத்தேவாலயங்களின் ஊழல் நிரம்பிய சூழலும் தளர்ந்து சிதையும் நிலையிலிருந்த பாரசீக, பைசாண்டியப் பேரரசுகளைச் சேர்ந்த மக்களின் ஆன்மீக வாழ்க்கையை மாசுபடுத்தியிருந்தன. நல்லொழுக்க வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் அவை தடுத்து வந்தன. முகம்மதுநபியின் இறுக்கமான(severe) ஓரிறைக் கோட்பாடானது, வல்லமைமிக்க அராபிய நாடோடிகளின் ஆயுதங்களைத் திறம்படப் பயன்படுத்திக்கொண்டது. அத்தோடு, அராபியப் பழங்குடியினர் மத்தியில் நிலவிவந்த மதப்பண்புசாராத உருவ வழிபாட்டையும் ஒழித்துவிட்டது. ஜொராஸ்டரின்** தீய ஆன்மீகக் கருத்திலிருந்தும், அற்புதங்களை நிகழ்த்துவதன் மூலம் மூடநம்பிக்கைகளைப் பரப்பி வந்த நசிந்து கிடந்த கிறித்துவத்தின் பிடியிலிருந்தும், துறவறம் என்ற கடுமையான நோயிலிருந்தும், ஞானிகளின் உருவ வழிபாட்டிலிருந்தும் கணிசமான அளவு மக்களை விடுவித்த ஒரு வெல்லப்பட முடியாத வரலாற்றுக் கருவியாகவும் இது (இசுலாம்) தன்னை மெய்ப்பித்துக் காட்டியது. அராபிய நாடோடிகளின் ஆயுதங்கள் ஈட்டிய வியப்பூட்டும் வெற்றிகள் ஒன்றை மட்டுமே மெய்ப்பித்துக் காட்டுகின்றன. அதாவது, வரலாறு இட்ட பணியையே – மனித குல முன்னேற்றத்திற்கான பணியையே – அவை திறம்படச் செயல்படுத்தின.

பண்டைய கிரேக்கத்தின் பெருமைமிக்க பண்பாடு உருவாக்கியிருந்த வளமையான ஆன்மீக மரபுகள், ரோமப் பேரரசின் துயரார்ந்த வீழ்ச்சியில் புதையுண்டு போயின. கிறித்துவ மூடத்தனத்தின் இருட்டில் அம்மரபுகள் காணாமல் போயின. புனிதமான மத்திய காலங்களின் சோர்வூட்டும் இருளிலிருந்து அய்ரோப்பிய மக்களை இறுதியாகத் தட்டியெழுப்ப உதவிய இந்த விலைமதிப்பற்ற மரபுச் செல்வங்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பணியும், நவீனப் பண்பாட்டின்

*பண்டைய பாரசீகத்தில் இருந்துவந்த ஒரு சமயப் பிரிவு. இது மாயமந்திரங்களில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தது.(மொர்)

**இயேசு கிறித்துவிற்கு ஆறுநூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்து வந்த பாரசீக நாட்டுச் சமயப் பிரச்சாரகர். (மொர்)

www.tamilarangam.net

வியத்தகு நினைவுச்சின்னத்தை நிர்மாணிக்க வேண்டிய பெரும்பொறுப்பும், அராபிய நாடோடிகளின் ஆயுதங்களையும், இசுலாமின் ஒரிறைக் கோட்பாட்டின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட சமூக–அரசியல் அமைப்பையுமே சார்ந்திருக்க வேண்டியிருந்தது. வெளித் தோற்றத்திற்கு, இறைப்பணியில் ஈடுபட்டிருந்த இசுலாமின் வாள் உண்மையில், புதிய சமூக சக்திகளின் வெற்றிக்கே–புதிய அறிவார்ந்த வாழ்க்கையின் மலர்ச்சிக்கே–தன் பங்கைச் செலுத்தியிருந்தது. இறுதியாக, அது அனைத்து மதங்களையும், விசுவாசங்களையும் ஆழக் குழிதோண்டிப் புதைத்தது.

மதம் என்ற சொல்லின் கறாரான பொருளின்படி பார்த்தால், இசுலாம் ஒரு மத இயக்கம் என்பதைக் காட்டிலும், ஒரு அரசியல் இயக்கமாகவே எழுச்சி பெற்றது. தன் தொடக்க காலத்தில், அராபியப் பாலைவனப் பகுதியில் வாழ்ந்து வந்த நாடோடிப் பழங்குடியினரின் அய்க்கியத்திற்கே இது முக்கியமாக அறைகூவல் விட்டிருந்தது. இந்த இலட்சியம் மிக விரைவில் கைகூடியவுடன், அரசியல்–மத அய்க்கியக் கோட்பாடு ஒரு பதாகையாக முன்னிறுத்தப்பட்டது. ரோமப்பேரரசின் ஆசிய, ஆப்பிரிக்கப் பகுதிகள் இந்தப் பதாகையை முன்னிறுத்தித்தான் அழிந்து போகும் நிலையிலிருந்த தங்கள் சமூக அமைப்பைக் காப்பாற்றி வந்தன. முன்னர் நடந்திருந்த கலகம் காலச்சூழல் பக்குவப்படாததால் தோல்வியில் முடிந்திருந்தது. கிறித்துவம் தன் புரட்சிகர ஆற்றலை இழந்து ஒருபுறம் சமூகச் சீரழிவின் கருத்தியலாக (துறவறம்) மாறியிருந்தது. மறுபுறம் சிதைந்து கொண்டிருந்த பேரரசுக்கு முட்டுக் கொடுத்து வந்தது. கிறித்துவத்தின் சீரழிவால் சமூக நெருக்கடி தொடர்ந்ததோடு தீவிரமும் அடைந்தது. சிதைந்து போன நிலையிலிருந்த ரோமப்பேரரசின் மாசு படிந்த சூழலுக்கு அப்பால் வாழ்ந்து வந்த அராபிய வணிகக் கூட்டத்திடமிருந்துதான் நம்பிக்கைச் செய்தியும், விமோசனமும் வர வேண்டியிருந்தது. தங்களுக்கு இருந்த சாதகமான சூழ்நிலையினால் இவர்கள் இப்பணியில் வெற்றியும் பெற்றார்கள். "இசுலாமின் கலகம்" மனித குலத்தைக் காப்பாற்றியது.

இசுலாம் வரலாறு குறித்த ஒரு புகழ்பெற்ற ஆய்வாளர் முகம்மதுவின் இலட்சியப்பணி பற்றி பின்வருமாறு சொல்லியுள்ளார்:

> " நாடு முழுக்கவும், வேகமான வளர்ச்சி அலையில் இருந்ததையும், அறிவு மற்றும் அதிகாரத் தேடலில் ஆர்வத்தோடு இருந்ததையும், அவர் கண்டு கொண்டார். முகம்மது நபிகளின் இறைப் பணியை உருவாக்கக் காரணமாயிருந்த அராபியர்களின் உற்சாகச் சிந்தனையானது நபிகள் உயிருடன் இருந்த காலத்திலேயே எண்ணற்ற பல்வேறு இறைத்தூதர்கள் உருவாவதற்குத் தூண்டுகோலாய் இருந்தது."*

திகிலடைந்திருக்கும் உலகத்தின் முன்னால் "அல்லாஹு அக்பர்" என்ற இரத்த வெறி கொண்ட கூச்சலோடு குர்–ஆனா அல்லது சாவா என்ற தேர்வை(choice) முன்வைத்தவர்கள் என்ற புரிதலின் அடிப்படையில் மதவெறி கொண்ட நாடோடிக் கூட்டத்தாரின் தீரச் செயல்களை இசுலாம் வரலாறாகக் குறுக்கிப் புரிந்து கொண்ட

* ஒக்லே– "சாரசென்களின் வரலாறு"

www.tamilarangam.net

ஆய்வாளர்கள் முகம்மதுவிற்குப் பின்னால் உடனடியாக வந்த அவரின் வாரிசுகளே மதவெற்றிகளிலும், இம்மண்ணுலக வெற்றிகளிலும் முழுக்க முழுக்க ஈடுபட்டிருந்தார்கள் என்ற விசயத்தை அறிந்திருக்கவில்லை அல்லது இதை வசதியாகப் புறக்கணித்து விடுகிறார்கள். அப்படியிருந்தும் கூட அலாரிக், அட்டிலா, ஜென்செரிக், செங்கிஸ்கான், டாமர்லேன் போன்ற காட்டுமிராண்டி வன்முறையாளர்களிடமிருந்து இவர்கள் (இசுலாமியர்கள்) உயர் பண்பிலும் தூய நோக்கிலும், ஆன்மீகப் பார்வையிலும் வேறுபட்டே இருந்தனர். இவர்களது பக்தி, மூடநம்பிக்கையில் கட்டுண்டதாக இருந்திருக்கலாம். ஆனால், பாசாங்குத்தனம் என்ற கறை அதன் மீது படிந்திருக்கவில்லை. இவர்களிடம் காணப்பட்ட பெருந்தன்மையும், வலுவான பொது அறிவும் இவர்களின் மதவெறியைத் தணியச் செய்வனவாக இருந்தன. தன்னலத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றதாக இவர்களின் இலட்சியம் இருந்தது. இவர்களைப் பொறுத்தவரை, கடவுள் பக்தி என்பது பேராசையை மூடப் பயன்படும் ஒரு திரையல்ல.

"விசுவாசப்படையின் முதல் தளபதியான" ( first commander of faithful) அபுபக்கரை விட மிகக் கவர்ச்சிகரமான, மிகப் பக்தியான, மிக நேர்மையான, மிகப் பணிவான ஆளுமைகள் ஒரு சிலவே வரலாற்றில் காணக் கிடைக்கிறது.

> "இறைப்படையின்" மறக்கவொண்ணாக் கட்டளைகள் பின்வருமாறு:"நேர்மையோடு இருங்கள்; நேர்மையற்றவர்கள் என்றும் நல்லபடி வாழ இயலாது, வீரனாக இருங்கள், மண்டியிடுவதைக் காட்டிலும், மரணமடைவது மேல். கருணையோடு இருங்கள். முதியோர்களை, பெண்களை,குழந்தைகளை வதை செய்யாதீர்கள், பழ மரங்களை, தானியங்களை, ஆடுமாடுகளை அழிக்காதீர்கள். எதிரிகளிடம் கூட சொன்ன சொல்லைக் காப்பாற்றுங்கள். இவ்வுலகிலிருந்து ஒய்வு பெற்று வாழ்பவர்களைத் துன்புறுத்தாதீர்கள்".

இந்தச் சிறப்பு வாய்ந்த கட்டளைகள் மிகவும் அனுபவம் வாய்ந்த தலைவரால் சொல்லப்பட்டு, பக்தி விசுவாசம் கொண்ட சீடர்களால் கறாராகப் பின்பற்றப்பட்டு வந்தது என்பதற்கு "இறைப்படையின்" வெல்லப்பட முடியாத அணிவகுப்பே சாட்சியமாக விளங்கியது.

பைசாண்டியப் பேரரசின் ஊழல், பாரசீகப்பேரரசின் கொடுங்கோலாட்சி , கிறித்துவத்தின் மூடநம்பிக்கை ஆகியவற்றால் ஒடுக்கப்பட்டும், கொடுமைப் படுத்தப்பட்டும், வதைக்கப்பட்டும் வந்த மக்கள் அனைவருமே அராபியப் படையெடுப்பாளர்களைத் தங்களை விடுவிக்க வந்தவர்களாக வாழ்த்தி வரவேற்றனர். இறைத்தூதரின் புரட்சிகரப் போதனைகளுக்கு வெறித்தனமாக விசுவாசம் காட்டுவது, பெருமகனின் கருத்துப்படி பணிவோடு செயலாற்றுவது, கலீபாக்களின் அறிவுப்பூர்வமான புகழ்பெற்ற நடைமுறை விதிகள் ஆகிய இவற்றின் மூலமாக அராபியப் படையெடுப்பாளர்கள், தாங்கள் வெற்றி கொண்ட மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டார்கள். அடக்கப்பட்ட மக்களின் மௌனமான சகிப்புத்தன்மையின்றி அல்லது அவர்களின் தீவிரமான ஆதரவின்றி

www.tamilarangam.net

எந்தவொரு படையெடுப்பாளரும் மக்கள் மேல் நிலையான ஆதிக்கத்தைச் செலுத்த முடியாது.

இரண்டாவது கலீபாவான **உமரின்** மூர்க்கத்தனமான குதிரைவீரர்கள் ஒருபுறம் பாரசீகப் பேரரசிலும், தொலைதூரப் பிரதேசமான ஓக்கஸ் கரைப்பகுதியிலும் வெற்றிக்கொடி நாட்டியிருந்தனர். மறுபுறம் ரோமப் பேரரசின் இரண்டாவது மாபெரும் நகரமான அலெக்ஸாண்டிரியாவைத் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்திருந்தனர். ஒரு ஒட்டகத்தின்மீது அமர்ந்து ஜெருசலத்திற்கு தன் வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்த இவர் அரசர்க்குரிய பரிசுப்பொருட்கள், பயணப்பொருட்களோடு, ஒரு சிறிய கொட்டகைத் துணியையும், ஒரு தானியப்பை, பேரீச்சம்பழம் ஒரு பை, ஒரு மரக்குவளை, ஒரு தோல் நீர்க்குடுவை ஆகியவற்றை தம்முடன் எடுத்துச் சென்றார். பாரசீகம், மெசப்படோமியா, சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளை வெற்றி கொண்டவர்களான இவர்களின் எளிமை, இறைப்பற்று, சமத்துவம், நேர்மை ஆகியன குறித்து **ஜிப்பன்** பின்வருமாறு ஒரு சித்திரம் தருகிறார்.

> "எங்கு அவர் தங்கினாலும் அவரது படைப்பிரிவினர் தகுதிகுறித்த எந்த வேறுபாடும் இன்றி அவருடன் சமமாக அமர்ந்து உணவருந்த அழைக்கப்பட்டனர். விசுவாசப் படையின் தளபதியான கலீபாவின் சமயப்போதனைக்கும் வழிபாட்டுக்கும் பின்பே விருந்து பரிமாறப்பட்டு வந்தது. ஆனால், படையெடுப்பின் போதோ அல்லது யாத்திரையின் போதோ, நீதியை நிர்வகிப்பதில் அவர் தன் அதிகாரத்தை செயல்படுத்திக் காட்டினார். அராபியர்கள் மத்தியில் நிலவிய கட்டற்ற பலதார மணமுறையை அவர் சீர்திருத்தினார். கட்டாயப் பறிமுதல், குரூரம் ஆகிய பிடிகளிலிருந்து குத்தகைதாரர்களை விடுவித்தார்." *

"இறைவனின் வாள்" என இறைத்தூதரால் அழைக்கப்பட்டவரும், அரேபியா, மெசப்படோமியா,சிரியா ஆகிய பகுதிகளை இசுலாம் பதாகையின் கீழ் ஒன்றிணைத்த வியத்தகு வீரருமான **காலித்** இறக்கும்போது அவரது குதிரை, ஆயுதங்கள், ஒரு ஏவளாளி ஆகியன மட்டுமே அவரின் சொத்தாக இருந்தது. இந்த மாபெரும் வீரர்தான்,

> " என் வாழ்க்கையை மத இலட்சியத்திற்காக அர்ப்பணிப்பதற்குக் காரணமாயிருந்தது, சிரியாவின் வளமை அல்ல; அல்லது இந்த உலகின் நிலையற்ற மகிழ்ச்சியுமல்ல. நான் இறைவனின் நலத்தையும், இறைத்தூதரின் நலத்தையுமே நாடுகிறேன்"** என்று தன் இளமைக்காலத்திலேயே கூறியவர்.

எகிப்தை வெற்றிகொண்ட வீரரான **உமரூ** தோள் வலிமையோடு, கவித்துவ ஆற்றலிலும் கைவரப்பெற்றவராக இருந்தார். கலீபா உமரூக்கு இவர் அளித்த அறிக்கையில் பின்வரும் முக்கியமான பகுதி காணப்படுகிறது.

---

* ரோமப்பேரரசின் சரிவும் வீழ்ச்சியும்

** வரலாற்று ஆசிரியர் அபுல் பதாவால் பதிவு செய்யப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" நிலத்தை வளமாக்கிய உழவர்கள் கூட்டத்தை சுறுசுறுப்பான எறும்புக்கூட்டத்தோடு ஒப்பிடலாம். அவர்களின் இயல்பான சோம்பலை எசமானர்களின் சவுக்கடி பறந்தோட வைக்கிறது. ஆனால், அவர்கள் உழைப்பினால் விளைந்த செல்வம் உழைப்பாளிகளுக்கும் உடைமையாளர்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வாக பங்கிடப்படுகிறது" அந்தக் காலத்தில் இம்மாதிரியான ஒரு பார்வை மிக முற்போக்கானதாகும். பழம்பண்பாடுகள் அனைத்திலும், சமூக சமத்துவம் காணக்கிடைக்காத ஒரு விசயமாகும். விவசாயிகள் –அவர்கள் அடிமைகளோ அல்லத் சூத்திரர்களோ–வெறுப்பிற்கும் சுரண்டலுக்கும் உள்ளாகியிருந்தனர். அவர்கள் மனித உயிர்களாகக் கருதப்படவில்லை. அரபு வணிகர்களின் நலன்களுக்காக உருவாக்கப்பட்டதும், முதல் கலீபாவின் மறக்கவொண்ணாக் கட்டளைகளில் முதன்முதலில் உருவம் பெற்றிருந்ததுமான பொருளாதாரக் கொள்கையானது, பண்டைய சமூகக்கருத்தைப் புரட்சிகரமானதாக மாற்றியிருந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் செல்வத்தில் ஒரு பகுதி அம்மக்கள் வசமே விட்டுவைக்கப்பட்டால் அது வணிகத்திற்கு ஒரு வலுவான தூண்டுதலைத்தரும். வெற்றிகொள்ளப்பட்ட பதோர் படோலிமி ஆட்சிப்பகுதிகளை இவர் நிர்வகித்து வந்தபோது, தனது கவித்துவப் பார்வையை ஊனப்படுத்திய முனைப்பான ஏற்றதாழ்வுகளை சமப்படுத்துவதில் இவர் வெற்றிகண்டிருந்தார். கிரேக்கர்களாலும், ரோமர்களாலும் நூற்றாண்டுக்கணக்கில் கொள்ளையடிக்கப்பட்டு வந்த எகிப்து அராபிய நாடோடிகளின் ஆட்சியின் கீழ் செழுமையடைந்தது.

அராபியர்கள் வரலாற்றில் அவர்கள் முக்கியமாக போர்த்தொழிலில் ஈடுபட்டிருந்த அந்தக் காலகட்டங்களிலும்கூட, மதத்தின் பெயரால் கொலை, கொள்ளை, சூறையாடல் போன்ற செயல்களைச் செய்த காட்டுமிராண்டிக் கூட்டத்தாரைப் போல இவர்கள் நடந்து கொள்ளவில்லை என்பதை மெய்ப்பிக்க ஏராளமான சான்றுகள் உள்ளன. கலீபாக்களின் ஆதரவின் கீழ் நீண்ட காலம் நடந்த கல்வி, கலாச்சார வளர்ச்சியைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், அராபியர்களின் இராணுவ நடவடிக்கைக் காலம் மிகச் சிறியதுதான். அராபியர்களுக்குக் கப்பம் செலுத்தி வந்த அரசுகளும், சுதந்திரமாக இருந்த பேரரசுகளும் இந்த நற்செயல்களில் ஈடுபட்டிருந்தன. மதீனாவில் இறைத்தூதர் எழுச்சி பெற்ற நூறு ஆண்டுகளுக்குப் பிறகு–அமைதி நகரமான பாக்தாத்தில் அபாசிதீஸ் அமைக்கப்பட்டவுடன்–அராபியர்களின் இராணுவ நடவடிக்கைகள் முற்றுப்பெற்று விட்டன. அதன்பின் அவர்கள், தங்களது விரிந்த, பரந்த பேரரசின் தற்காப்பிற்கும், பாதுகாப்பிற்கும் அவசியம் தேவைப்பட்ட இராணுவச் செயல்பாடுகளை மட்டுமே நடத்தி வந்தனர்.

அராபிய வீரர்களின் காத்திரமான ஆர்வத்தைக் காலமும், செல்வ வளமும் மிருதுவாக்கிவிட்டன. இனிமேலும் போரின் மூலம் செல்வத்தைத் திரட்டிக் கொண்டிருக்க அவர்கள் விரும்பவில்லை. வணிகம் தொழில் ஆகியவற்றின் மூலமே செல்வத்தைத் திரட்ட விருப்பம் கொண்டனர். போர்க்களத்தில் சண்டையிடுவதன் மூலம் புகழ்பெற விரும்பவில்லை. மாறாக, அறிவியலையும், இலக்கியத்தையும் பின்பற்றுவதன் மூலம் புகழ் பெற விரும்பினார். ஒரே இறைவன், ஒரே இறைத்தூதர்

www.tamilarangam.net

என்ற வெறித்தனமான வழிபாட்டின் மூலம் இனி மகிழ்ச்சி பெறாமல், தீங்கற்ற சமூக, குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பதன் மூலம் மகிழ்ச்சி பெற விரும்பினர். அராபியர்கள் உணர்ச்சிக்குரிய விசயமாக, பெருமைமிகு தொழிலாக இனி மேலும் போர் இருக்க முடியாது. ஏனெனில், தங்கள் முன்னோர்களின் வீரத்தால் உருவாக்கப்பட்டிருந்த ஒரு அமைதியான உலகின் மீது அவர்கள் நாட்டமும், மகிழ்ச்சியும் கொண்டனர். போர்த்திறத்தில் அபுபக்கர்,உமர் ஆகியோரின் தரத்தை எட்டியிருந்த அஞ்சாத வீரர்களின் இந்த வாரிசுகள், வணிகமும், தொழிலும், மிக இலாபம் தரும் அடக்கமான தொழில்கள் என்பதையும், அறிவியலும், மெய்யியலும் மிகுந்த மகிழ்ச்சி தருபவை என்பதையும் புரிந்து கொண்டனர்.

கிறித்துவ ஆக்கிரமிப்பாளர்கள் சிலுவைப்போர்கள் என்ற வஞ்சகமான வடிவத்தின் மூலம், அராபியர்களின் போர்த்திறத்தை மீண்டும் தூண்டிவிட்டார்கள். அதனால், முன்னூறு ஆண்டு கால அமைதியும், செல்வச் செழிப்பும், முன்னேற்றமும் பயனற்றுப் போயின. மத்திய ஆசியாவைச் சேர்ந்த காட்டுமிராண்டிகளான மங்கோலியர்கள், அராபியர்களை வெற்றி கொண்ட பின்புதான், வழிப்பறி, கொள்ளை, கொடுங்கோன்மை, ஒடுக்குமுறை ஆகிய பண்புகள் அராபியர்களைப் பீடிக்கத் தொடங்கியது. அராபியர்களின் கல்வியும், பண்பாடும், அதன் மன்னர்களின் டாம்பீகத்தால் மாசுபட்டது. தன் உண்மையான புரட்சிகர ஆற்றலை இழந்ததால் இசுலாமின் பெருமிதமிக்க தகுதி, துருக்கியர், தார்த்தாரியர்களின் பேராசைக் கரங்களில் இழிவுக்குள்ளானது.

இசுலாமை இராணுவவாதத்தோடு சேர்த்துக் குழப்புவது என்பது வரலாற்றை ஒட்டு மொத்தமாக மிகத் தவறாகப் புரிந்து கொள்வதாகும். முகம்மது நபி, அராபிய வீரர்களின் இறைத்தூதரல்ல; மாறாக, அராபிய வணிகர்களின் இறைத்தூதராவார். அவர் தனது மதத்திற்குச் சூட்டிய நற்பெயரின் நோக்கம் அதன் தற்போதைய இலட்சியத்திற்கு முரண்பட்டதாக இருக்கிறது. சொல் விளக்க வரலாற்றின்படி, இசுலாம் என்பதன் பொருள் அமைதியை உருவாக்குவது அல்லது அமைதியை உருவாக்கிக் கொள்வது என்பதாகும். அதாவது இறைவன் ஒருவனே என்பதைப் பணிவோடு ஏற்றுக்கொள்வதன் மூலம் இறைவனோடு அமைதியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மனிதனின் பக்தியைத் தவறான வழியில் பறித்தெடுத்துக் கொண்ட பல தெய்வ வழிபாட்டையும், உருவ வழிபாட்டையும் மறுதலிக்க வேண்டும். அரபு நாடோடிகளை ஒற்றுமைப்படுத்துவதன் மூலம் இவ்வுலகில் அமைதியை உருவாக்க வேண்டும். அமைதி என்பது இவ்வுலகின் உடனடித் தேவையாயும், பெரும் பின்விளைவுகளைத் தருவதாயும் இருந்தது. அராபிய வணிகர்களின் பௌதீக நலன்கள் இதை எதிர்நோக்கியிருந்தது. ஏனெனில் அமைதியான சூழலில் தான் வணிகம் செழித்தோங்கும். தொடர்ச்சியான போர்களுக்கும், ஓயாத கலகங்களுக்கும் காரணமாயிருந்த சூழல்களை, சீரழிந்த நிலையிலிருந்த அரசுகளும், அழுகிக் கிடந்த மதங்களும் வளர்த்தி வந்ததால் இவற்றின் அழிவு அமைதிக்கு ஒரு முன் நிபந்தனையாக இருந்தது. முகம்மதுவின் மத போதனைகள் அவர் தாயகத்தில் அமைதியை உருவாக்கியிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராபிய வீரர்களின் போர் வலிமையானது சாமர்கண்டிலிருந்து ஸ்பெயின் வரையிலான பரந்த பெரும் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்கு இதே வரத்தை (அமைதி) வழங்கியிருந்தது.

ஒரு நாடு அராபியப் போர்வீரர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தவுடனேயே தொழிலுக்கும், உழவுக்கும் தரப்பட்ட ஊக்கத்தினால் அதன் பொருளாதார வாழ்வு விரைவுபடுத்தப்பட்டது. அரபு வணிகர்களின் ஊக்கமும், உற்சாகமும், இசுலாமிய அரசின் கொள்கையைத் தீர்மானிப்பதாகவும், வழிநடத்துவதாகவும் இருந்தது. ரோமப் பேரரசிலும் சரி, ஏனைய அனைத்துப் பண்டைய பண்பாடுகளிலும் சரி, அவற்றின் ஆளும் வர்க்கங்கள், உற்பத்தியில் ஈடுபட்டிருந்த அனைத்துத் தொழிலாளர்களையும் வெறுப்போடு கையாண்டு வந்தது. வணிகத்தையும், தொழிலையும் ஏளனத்தோடு பார்த்து வந்தது. போரும், தெய்வவழிபாடுமே அவற்றின் உன்னதத் தொழில்களாக இருந்தன. ஆனால், அராபியர்களைப் பொறுத்தவரையில் இதில் அவர்கள் மாறுபட்டவர்களாகவே இருந்தார்கள். பாலைவனப்பகுதியில் அவர்கள் வாழ்ந்த நாடோடி வாழ்க்கையானது, விடுதலைக்கான வழியாக உழைப்பை மதிக்கும்படி அவர்களுக்குக் கற்றுத் தந்திருந்தது. அவர்களைப் பொறுத்தவரையில், வணிகம் என்பதை சுதந்திர மனிதனுக்கு மதிப்பையும், செல்வத்தையும் ஒருசேரத்தரும் தொழிலாகக் கருதி வந்தனர். இவ்வாறாக, இசுலாமிய அரசானது, பண்டைய அரசாங்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சமூக உறவுகளின் அடிப்படையில் எழுந்ததாக இருந்தது. மதம் தொழிலைப் பேணி வந்தது. இயற்கை மீது ஒரு சராசரிப் பரிவை இது ஊக்கப்படுத்தி வந்தது. ஆட்சிக்கலை, போர், இலக்கியம், அறிவியல் போல வணிகமும் ஒரு மேன்மையான தொழிலாகக் கருதப்பட்டது. வணிகம் சுதந்திரமானதாக இருந்தது. பாக்தாத் கலீபாக்கள் மிகப்பெரும் வணிகர்களாக இருந்ததோடு, கல்விமான்களாகவும் விளங்கினர். உண்மையில் தங்களது சொந்தத் தேவைகளைக் கொள்முதல் செய்வதற்காக இவர்கள் பின்பற்றிய சில கலைகள், உடலுழைப்பை மேம்படுத்துவதாக இருந்தன. மாபெரும் அரபுத் தத்துவவாதிகளும், அறிஞர்களும், பெரும்பாலும் வசதியான வணிகக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள்தான். பொக்கரா,சாமர்கண்ட் அரசசபைகளின் பண்பாடு, செய்நேர்த்தி, ஆப்பிரிக்காவின் பதாமைத் ஆட்சியாளர்களின் தாராளப் பண்பு, அண்டலுசுயா சுல்தான்களின் பகட்டு ஆரவாரம் ஆகிய இவற்றிற்கெல்லாம் கொடுங்கோல் வழியில் பிடுங்கப்பட்ட வரிப்பணமல்ல; மாறாக, வணிகத்தில் பெற்ற செல்வச் செழிப்பே காரணமாயிருந்தது.

குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் கீழ், வணிகம், ஆன்மீகப் புரட்சிக்கான ஒரு ஆற்றல் வாய்ந்த கருவியாகப் பயன்படுகிறது. அரபு வணிகர்களின் அபிலாசைகள், முகம்மதுவின் ஓரிறைக் கோட்பாட்டை உருவாக்கியிருந்தன. இந்தக் கோட்பாடு அதற்குக் கைமாறாக, பாலைவன நாடோடிகளுக்கு ஒரு உற்சாகத்தைத் தந்து, அதன்மூலம் வரலாற்றிலேயே, பரந்து விரிந்த மிகச் செழிப்பான பேரரசு ஒன்றை நிர்மாணிக்க உதவி புரிந்தது. குர் – ஆனின் சட்டங்கள் சமூக உறவுகளைப் புரட்சிகரமானதாக ஆக்கியது. இந்தப் புரட்சியின் விளைவாக உற்பத்தி பெருகியதால்

www.tamilarangam.net

வணிகம் விரைவான வளர்ச்சியைப் பெற்றது. அதனால், உலகப் பொது நோக்கும் ஆன்மீகமும் மறுமலர்ச்சி பெறத் துவங்கி புது யுகத்திற்குக் கட்டியம் கூறியது. வணிகம், மனிதனின் பார்வையை விசாலப்படுத்தியது. தொலை தூர இடங்களுக்குப் பயணம் மேற்கொள்வது வித்தியாசமான பழக்க வழக்கங்களை நேரில் பார்ப்பதற்கான வாய்ப்பு, பல்வேறு இன மக்களோடு ஒன்று கலப்பது, ஆகியவற்றின் காரணமாக ஒரு வணிகள், தான் பிறந்தமண்ணில் உருவாகியிருந்த தப்பெண்ணங்களிலிருந்தும் குறுகிய வரையறைகளிலிருந்தும் விடுதலை பெற்று விடுகிறார். மற்றவர்களின் பழக்க வழங்கங்களையும், கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் அனுதாபத்தோடு பார்ப்பது, அவற்றைப் புரிந்து கொள்வது, அவைகளைச் சகித்துக் கொள்வது ஆகிய பண்புகளை இவர் வளர்த்துக் கொள்கிறார். அறிமுகம் இல்லாத கடல் பகுதிகளுக்கு அல்லது புதிய நிலப்பகுதிகளுக்கு இவரை வழிநடத்திச் செல்வது கூரிய கவனிப்பும் ஆராய்ச்சி மனோபாவமுமேயாகும். இப்பண்புகள் இவரிடமிருந்த மூடத்தனத்தை அழித்து விடுகின்றன. விமர்சன வினைத்திறன் இவரை அறிவின் வாயிலுக்கு அழைத்துச் செல்கிறது. இவரது வணிகத் தொழில் சாராம்சம் சூட்சுமமாக (abstract) சிந்திப்பதற்குக் கற்றுத் தருகிறது. இவர் தான் கையாளும் அனைத்து வணிகச் சரக்குகளையும் சமமாகவே பாவித்து வந்தார். இவரது ஒட்டகங்களில், அல்லது கப்பல்களில் கம்பளி அல்லது தானியம் அல்லது வாசனைப் பொருள் எது நிரம்பியிருந்தாலும் அவரைப் பொறுத்தவரை அனைத்தும் இவருக்கு ஒரே மாதிரிதான். தூலமான பொருட்கள் மீது அவர் அக்கறை கொள்வதில்லை. இந்தப் பொருட்கள் அனைத்தும், இவரின் குறிக்கோளை (இலாபம்) அடைவதற்கான ஒரு வழிமுறைகள் தான். இவர் வாங்கும் அல்லது விற்கும் தூலமான பொருட்கள் மூலம் இவர் அடைவது இலாபம் என்னும் அருவமான பொருளே. பொருட்களின் உள்ளார்ந்த மதிப்பை வைத்து இவர் அவற்றைக் கணிப்பதில்லை. மாறாக, அப்பொருட்கள் தனக்கு எவ்வளவு இலாபம் தரும் என்பதை வைத்தே இவர் பொருட்களை மதிப்பீடு செய்கிறார்.

அந்நியப் பொருட்களை சகித்துக் கொள்வது, அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது, தப்பெண்ணங்களிலிருந்து விடுதலை, கூர்நோக்குத் திறமை, சூட்சுமமாகச் சிந்திக்கும் திறன் ஆகிய இந்தப் பண்புகள் அனைத்தும் இவரின் வணிகத் தொழிலின் இயல்பால் இவருக்குச் சாத்தியப்படுகிறது. இப்பண்புகள் இவரிடம் தத்துவப் பார்வையை உருவாக்கி விடுகிறது. பலதரப்பட்ட மக்கள் பல்வேறு மூட நம்பிக்கைகளைத் தெய்வீக விருப்பமாக ஏற்றுக் கொண்டிருப்பது, அபத்தமான சடங்குகளைப் பின்பற்றி வருவது அல்லது அவற்றின் மீது பக்தி செலுத்துவது, தவறான கருத்துக்களை முழு உண்மை என மேன்மைப்படுத்துவது ஆகிய காட்சிகளை ஒரு வணிகர் பார்க்க நேரிடுகிறது. இக்காட்சிகளைப் பார்க்கும் ஒரு வணிகரின் பரந்த சிந்தனை, அவற்றின் மூடத்தனத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கும். அனைத்து மூட நம்பிக்கைகளின் ஒழுக்கச் சீர்கேடுகளையும் இவர் சமமாகக் கண்டிப்பார். பல்வேறு இறைக் கோட்பாடுகளுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும் அடியில் காணப்படும் பொதுவான அடிப்படை நம்பிக்கைக்கு இவர் மரியாதை தருவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மத்திய கால உலகின் முக்கிய சர்வதேச வணிக வழிகள் அனைத்தும் அராபியப் பேரரசில் அய்க்கியப்பட்டிருந்த இசுலாம் நாடுகளின் வழியேதான் சென்று வந்தன. கான்ஸ்டான்டிநோபிள் வழியாக இத்தாலிக்கும் பிற மேற்கு அய்ரோப்பிய நாடுகளுக்கும், சீனாவிற்குமிடையே வணிகம் நடத்தப் பயன்பட்ட வடக்கு வணிக வழி முழுக்கவும் தொல்லை தருவதாகவே இருந்தது. சித்தியர்களின் கொள்ளையும் பைசாண்டியப் பேரரசின் அழிவு தந்த வரிக்கொள்கையும் வணிகத்திற்கு இடையூறாய்இருந்தன. சிரியா, மெசப்படோமியா, பாரசீகம் ஆகிய நாடுகளையும் ஆக்ஸஸ்ஸுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களையும் வெற்றி கொண்ட அராபியர்கள் அதற்குப் பின் சீன வணிகத்தையும் கைப்பற்றி, அதன் பாதையை வடக்கு ஆப்பிரிக்கா, ஸ்பெயின் வரை சென்று இறுதியாக மேற்கு அய்ரோப்பியச் சந்தைகளை அடையும் வகையில் மாற்றி அமைத்தார்கள். எட்டாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு முடிய ஒரு புறம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும், மறுபுறம் அய்ரோப்பாவிற்கும் இடையே நடந்து வந்த அனைத்து வணிகத்தையும் அராபியர்களே நடத்தி வந்தனர். சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் தொலைதூரப்பகுதிகளிலிருந்து, மொராக்கோ, ஸ்பெயின் நாடுகளை நோக்கி, மதிப்பு வாய்ந்த பொருட்களை வண்டியில் ஏற்றியபடி, ஆயிரக்கணக்கான வணிகர்கள் பயணம் செய்து வந்தனர். பழைய பண்பாட்டைப் பின்பற்றி வந்த மற்ற நாடுகளில் நடந்ததுபோல் இங்கு யாரும் இவ்வணிகர்களை துன்புறுத்தவோ அல்லது வெறுக்கவோ இல்லை. பெருமைமிக்க கிரீஸ் மட்டுமே இதில் விதிவிலக்காய் இருந்தது. ஏனெனில் அராபியப் பேரரசில், வணிகர்கள் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக விளங்கி வந்தனர். அராபியப் பேரரசின் செல்வச் செழிப்பு காரணமாக செழித்தோங்கி வளர்ந்திருந்த கலையிலும் பண்பாட்டிலும் அவர்களுக்கே சொந்தமான விசாலமான சிந்தனையும், உலகப் பொது நோக்கும் எளிமையும் முத்திரை பதித்திருந்தன. போர் விருப்பம் கொண்டிருந்த ஆட்சியாளர்கள் மற்றும் பொறாமை கொண்டிருந்த மதக்குருமார்களின் தலைமையின் கீழ் மனிதகுலம் தொடர்பான ஒரு கருத்தியலானது வறட்டு நம்பிக்கையாகவும் அல்லது தெளிவற்ற மாயாவாதமாகவும் உருத்திரிந்தது. தத்துவமானது – அதாவது பிரபஞ்சம் குறித்த ஒரு பகுத்தறிவு விளக்கம் கொண்ட தேடலானது – வணிகத்தில் ஈடுபட்டிருந்த அரச மரபினர் ஆட்சி புரியும் ஒரு சமூகத்தில் சூல் கொள்ளலாயிற்று. இவ்வாறுதான் கிரேக்கர்களின் நகர அரசுகள் தத்துவத்தின் தாயகமாக உருவாயின.

வரலாற்றின் ஒரு அவசியமான விளைவே இசுலாம் ஆகும். இது மனித குல முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாகும். ஒரு புதிய சமூக உறவின் கருத்தியலாக மலர்ச்சி பெற்ற இது, இதற்குக் கைமாறாக அம்மனிதர்களின் சிந்தனையைப் புரட்சிகரமானதாக மாற்றியது. பழம் பண்பாடுகளை இது குப்புறக் கவிழ்த்து இடம் மாற்றியது போலவே, காலம் செல்லச் செல்ல இதுவும் சீரழிந்து முன்னேறிய சமூக வளர்ச்சியினால் பின்னுக்குத் தள்ளப்பட்டு, அதன்விளைவாக இது தன் ஆன்மீகத் தலைமைமைய புதிய சூழ்நிலைகளின் கீழ் உருவாகியிருந்த மற்ற முகவாண்மைகளுக்கு (agencies) மாற்றித் தந்தது.

www.tamilarangam.net

சமூகப் புரட்சியைக் கொண்டு வந்த புதிய கருத்தியல் ஆயுதங்களை உருவாக்கியதில் இது தன் பங்களிப்பைச் செய்திருக்கிறது. அனுபவவாத அறிவியலும், பகுத்தறிவுத் தர்க்கமுமே அந்த ஆயுதங்கள் ஆகும். இசுலாமியப் பண்பாட்டின் நற்பெயருக்குச் சான்றாக இவை விளங்குகின்றன. ஒரு புதிய சமூகப் புரட்சியின் கருத்தியலை நிர்மாணிக்க இவை ஆயுதங்களாகப் பயன்பட்டிருக்கின்றன.

மத்தியகாலக் காட்டுமிராண்டித்தனத்தின் குழப்பத்திலிருந்து அய்ரோப்பாவை முதலாளிய உற்பத்தி முறை காப்பாற்றியிருந்தது. பகுத்தறிவுத் தத்துவம் என்ற வீரியமான ஆயுதத்தின் மூலம் கிறித்துவ இறையியலையும், கத்தோலிக்கத் தேவாலயத்தின் ஆன்மிக ஏகபோகத்தையும் எதிர்த்துப் போரிட்ட இந்த அய்ரோப்பிய முதலாளியமானது நீண்ட காலப் போக்கில் அதை வெற்றியும் கண்டது. கிரேக்கத்தின் பண்டைய ஞானிகள் கண்டறிந்த இந்த ஆயுதமானது (பகுத்தறிவுத் தத்துவம்) அரபு அறிஞர்கள் மூலமாகத்தான் நவீனப் பண்பாட்டின் கைகளுக்குவந்து சேர்ந்தது. இந்த விலைமதிப்பு வாய்ந்த மரபுச் செல்வத்தை அராபியர்கள் பாதுகாத்து வந்ததோடு, இதற்குக் கைநிறைய அவர்கள் பங்களிப்பும் செய்திருந்தார்கள். இசுலாம் என்ற மதக் கொடியின் கீழ் அராபியப் பாலவைன நாடோடிகளால் தொடங்கப் பெற்ற இந்த வரலாற்றுப் போர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மூன்று கண்டங்களில் படிப்படியாக எடுத்துச் செல்லப்பட்டு, இறுதியாக அய்ரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அறிவொளி இயக்கத் தலைமையின் கீழும் முதலாளியப் புரட்சியின் தலைமையின் கீழும் தன் இறுதி வெற்றியை நிலைநாட்டியது. ❐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இசுலாமின் சமூக, வரலாற்றுப் பின்னணி

மற்ற மதங்களை இன்னின்னார் உருவாக்கினார்கள் என்பது எவ்வளவு தவறோ, அதே போன்ற தவறுதான் – அமைதியின் மதம் இசுலாமை– முகம்மது நபி உருவாக்கினார் என்று சொல்வதும். எந்தவொரு மதமும் எந்தத் தனிநபராலும் உருவாக்கப்படவில்லை. ஏதோ ஒரு புனிதர் கண்களுக்கு இது பட்டது என்று சொல்லிக் கொள்வது போல அது திடீரெனத் தோன்றிவிடுவதுமில்லை. மற்ற மதங்களைப் போலவே இசுலாமும், தான் தோன்றிய சூழலின் அக்காலகட்டத்தின் ஒரு விளைபொருள் ஆகும்.

அசீரியர்கள், பாரசீகர்கள், மெசபடோமியர்கள், ரோமர்கள் போன்றோரின் இராணுவப் படையெடுப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பாதை வழியிலேயே வாழ்ந்து வந்த போதிலும், அரபு வளைகுடாவின் விரிந்து பரந்த பகுதிகளில் வாழ்ந்து வந்த அம்மக்கள் தங்கள் நாட்டின் இயற்கை அம்சங்களாலும் அதனால் உருவான வாழ்நிலையின் காரணமாகவும், தங்கள் சுதந்திரத்தை நிலை நாட்டி வந்தார்கள். ஆனால் தீவிரமான சுதந்திர விருப்பமும், நாடோடி வாழ்க்கை முறையும் சேர்ந்து, அரபுப் பாலைவன மக்களை எண்ணற்ற பழங்குடியினராகப் பிளவுபடுத்தியிருந்தது. இவர்கள் தங்களுக்குள் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

மனித குலத்தின் பிற பகுதியினரிடமிருந்து தனித்து நின்ற அராபியர்கள் அந்நியர்களை எதிரிகளாகவே கருதி வந்தனர். அந்நாட்டில் நிலவிய வறுமை இந்தப் பண்பை மேலும் வளர்த்தியது. இந்த இரு காரணிகளும் சேர்ந்து அராபியர்களின் சட்ட ஒழுக்க விதிகளை முறைப்படுத்தியிருந்தன. சட்ட விரோத இஸ்மேயிலின் வாரிசுகள் என்ற முறையில் தாங்கள் இந்த வறண்ட பாலைவனத்திலேயே வேதனைப்பட நிந்திக்கப்பட்டிருப்பதாகவும், மனித குலகுடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு செழுமையான, வளமான நிலங்கள் உரிமையளிக்கப் பட்டிருப்பதாகவும் அவர்கள் நம்பி வந்தார்கள். ஆகவே, தங்களிடமிருந்து பறிக்கப்பட்டிருந்த பரம்பரைச் சொத்தின் ஒரு பகுதியை வன்முறை மூலம் மீண்டும் கைப்பற்றிக் கொள்வதை நியாயம் என்றே அவர்கள் உணர்ந்து வந்தார்கள்.

முகம்மது தோன்றுவதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ரோம வரலற்றாசிரியர் **பிலினி** அவர்கள், அராபியர்கள் மத்தியில் இயற்கையாக இருந்து வந்த ஆடு வளர்ப்பு, குதிரை வளர்ப்பு என்ற தொழில்களுடன், வழிப்பறி, வணிகம் என்ற இரு ஆதாயமான தொழில்களும் முக்கிய இடம் பெற்று வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். சமூகப் பரிமாண வளர்ச்சியின் தொடக்கக் கட்டங்களில் வழிப்பறி வணிகம் ஆகிய இரு தொழில்களுக்கு இடையில் மெலிதான வேறுபாடே இருந்து வந்தது. வழக்கமாகப் பொருட்களை மலிவான விலையில் கொள்முதல் செய்து, அதிக விலையில் விற்பதன் மூலமே ஒரு வணிகர் தன் இலாபத்தை சம்பாதிக்கிறார்.

www.tamilarangam.net

கொள்முதல் விலை மிக மலிவானதாக இருக்கும் வரை, இலாபத்தின் அளவு அதிகமாக இருக்கும். வழிப்பறி அல்லது திருட்டு மூலம் இவருக்குப் பொருட்கள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. ஆகவே, வணிகத்தின் அடிப்படைக் கோட்பாட்டு ஒழுக்கத்தை ஒரு முறை ஒப்புக் கொண்டு விட்டால் போதும், பின், அதிக அளவு இலாபம் சம்பாதிக்க வணிகர் செய்யும் செயலுக்கு நியாயம் கிடைத்து விடும். வணிகப் போட்டிகள் பொருட்களின் விலையைக் குறைத்து விடுகின்றன. போட்டியை அழிப்பதற்கு மிகச் சிறந்த வழி போட்டியாளர்களைக் கொள்ளையடிப்பதுதான். இந்த உத்தி மூலம், போட்டியாளர் சந்தையிலிருந்து அகற்றப்படுவதோடு, இவரின் பொருட்கள் மிகத் திறமையான ஒரு வணிகரின் சொத்துக்களாகச் சென்றடையும். மேலும், வணிக வழிகள் மீதும் சந்தைகள் மீதும் ஏகபோகம் செலுத்துவதற்கன ஒரு திறனான ஆயுதமாக வழிப்பறி விளங்கி வந்தது. வணிகம் அதன் தொடக்க கால வளர்ச்சியின் போது, இந்தக் கொள்கைகளையே அனைத்து இடங்களிலும் பின்பற்றி வந்த செய்தி இன்றைய வணிகருக்கு அதிர்ச்சி தருவதாக இருக்கக் கூடும். குறைவான வைதீகப்பிடிப்புக் கொண்டிருந்த தனது முன்னோர்கள் வழிப்பறியை ஒரு ஆயுதமாகக் கொண்டு வணிகத்தை உன்னதமான தொழிலாக நிலைநாட்டியிருந்ததைப் போல, இந்த வணிகரும் இன்று அதே தொழிலை நேர்மையோடும் "நேர்மை நெறியே சிறந்த செயல் நெறி" என்ற மெச்சத் தகுந்த ஒழுக்க விதியோடும் முன்னெடுத்துச் செல்கிறார்.

மனித குலத்தின் காட்டுமிராண்டிக் கால வளர்பருவத்தில், வெகுவாகப் பெருமைப்படுத்தப்பட்ட வழிப்பறி என்ற இந்தப் பண்பானது போரை விரும்பும் மனிதனின் அரசியல் திறனாக பின்பு முதிர்ச்சியடைந்தது. தங்களது தாய்நாட்டின் புவியியல் அம்சங்களின் காரணமாக வழிப்பறியைப் பின்பற்றி வந்த அராபியர்கள், இயல்பாகவே, வணிகத்திலும், போரிலும் வழக்கத்திற்கு மாறாக, திறமையை வளர்த்துக் கொள்ளும்படி விதிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களின் வீரமும், போர் விருப்பமும் தொன்மையானவை. அராபியப் பேரரசின் செழுமையான காலப்பகுதியில் உருவாக்கப்பட்டிருந்த "அயம்–அல்–அரபு" என்ற புகழ்பெற்ற வரலாற்றுப் புத்தகமானது, நபிகள் தோன்றுவதற்கு முன்பே அராபியர்கள் குறைந்தது ஆயிரத்து எழுநூறு போர்களில் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.. ஆகவே அராபியர்கள் தங்களைத் தாங்களே போர்வீரர்களாகச் சிறப்பித்துக் கொண்டால், அந்தப் பண்பை அவர்கள் இசுலாமிய நம்பிக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட வேண்டியுள்ளது. இறைவனின் பணியில் தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்த இவர்கள் அழைக்கப்படுவதற்கு முன்பே, இவர்கள் போர்வீரர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இசுலாமின் இராணுவ வெற்றிகளுக்கான நற்பெயர், அராபிய இறைத்தூதரின் மதப்போதனைக்குக் கிடைப்பதைக் காட்டிலும், அது தோன்றிய நாட்டின் சமூகச் சூழலுக்கே கிடைக்க வேண்டும்.

இறைத்தூதர் தோன்றுவதற்கு முன்பு அராபியர்கள் நடத்தி வந்த சண்டைகள் பெரும்பாலும் உட்குழுச் சண்டைகளாகவே இருந்து வந்தன. காட்டுமிராண்டித்தனமான வெறியோடு ஆனால், நேர்மை, வீரப்பண்பு, பெருந்தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவற்றின் விசித்திரமான விதிகளுக்குக் கறாராக உட்பட்டுமே அச்சண்டைகள் நடைபெற்றிருந்தன. அராபிய மணற்பகுதிகளில் மட்டுமீறி சிந்தப்பட்டு வந்த இரத்தம் அப்பகுதியை வளப்படுத்தி விடவில்லை. மாறாக, பழங்குடி அராபியர்களின் நியாயமான தொழிலான வழிப்பறி மூலம் கிடைத்த இலாபகரமான பொருளாதாரச் சூழலை இச்சண்டைகள் நாசமாக்கி வந்தன. இந்தப் பெருமை மிக்க ஆனால் அழிவுப் பண்பு கொண்ட உட்குழுச் சண்டைகளை முடிவுக்குக் கொண்டு வரவும் அராபியர்களின் பரம்பரைப் போர் வலிமையை நல்ல ஆதாயம் தரும் பாதையை நோக்கித் திருப்பவும், பொருளாதாரத் தேவைகள் கட்டாயப்படுத்தின. இந்தத் தேவையினால் உருவான கருத்துக்கள், இறுதியாக "முகம்மதுவின் மதத்தில்" உருத்திரண்டிருந்தன.

அரேபியா பரந்து விரிந்த ஒரு மணற்பாலைவனமாக இருந்தபோதிலும், அதனைச் சுற்றி மூன்று திசைகளிலும், மக்கள் நெருக்கம் மிகுந்த நாடுகள் இடம் பெற்றிருந்தன. அந்நாடுகள் பண்டையப் பண்பாடுகளின் தாயகமாகவும் நினைவுக்கெட்டாத நாட்களிலிருந்தே அங்கு தொழிலும். உழவும் வளம் கொழிப்பதாகவும் இருந்து வந்திருக்கின்றன. தென்திசையிலிருந்த கடல் பகுதியில் இந்தியாவுடன் வணிகம் மேற்கொண்டிருந்த கப்பல்கள் பயணம் செய்து வந்தன. இந்தியா, பாரசீகம், அசீரியா, சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, அபிசீனியா ஆகிய நாடுகளுக்கிடையில் நடந்து வந்த கடல் வணிக வழிகளும் பாலைவன வணிக வழிகளும் சந்திக்கும் இடமாக அரேபியா இருந்து வந்தது. அரேபியாவின் புவியியல் பகுதி இதற்குச் சாதகமாக அமைந்திருந்தது. தொடக்க காலங்களில் ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும் இணைத்து வந்த வணிக வழிகள், அறிமுகமில்லாத தொலைதூரப் பாலைவனப் பகுதிகளைத் தவிர்த்தே வந்தன. ஆனால், பைசாண்டியக் கொடுங்கோலாட்சியின் முறையற்ற வரிக் கொள்கையும், அதன் உள்ளூர் அதிகாரிகளின் முடிவில்லாத கட்டாயப் பறிமுதல் நடவடிக்கைகளும் மாற்று வழியைத் தேடும்படி வணிகர்களுக்கு ஒரு கட்டாயத்தை ஏற்படுத்தின. முரட்டுத்தனமான, ஆனால் தாராள மனப்பான்மை கொண்ட பாலைவன மக்களை எதிர் கொள்ள வேண்டிய ஒரு துணிச்சலான செயலுக்கு வணிகர்கள் அணியமாயினர்.

தொடக்கத்தில், அராபியர்கள் தங்களது விசித்திரமான சட்ட,ஒழுக்க விதிகளுக்கேற்பவே கப்பம் வசூலித்து வந்தனர். ஆனால், காலப்போக்கில் வழிப்பறியைக் காட்டிலும் வணிகம் மிகவும் இலாபம் தரக்கூடியது என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள். அராபியப் பழங்குடிகளிலேயே கோரிஷ் (Koreish) பழங்குடியினர் மட்டும்தான் முதன் முதலாக அமைதியும் மிகுந்த இலாபமும் தந்து வந்த தொழிலுக்கு (வணிகம்) தங்களை மாற்றிக் கொண்டவர்கள். செங்கடல் பகுதியோரம் வசித்து வந்த இவர்கள், அப்பகுதி வழியே ஆசிய வணிகம் நடைபெறுவதற்கு நீண்ட நாட்கள் முன்பே, அபிசீனியாவின் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். கிறித்துவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளின்போது, கோரிஷ் பழங்குடியினரின் தலைநகரான மெக்கா தெற்கிலிருந்து வடக்காகவும், கிழக்கிலிருந்து மேற்காகவும் செல்லும் முக்கியமான வணிகவழிகள் சந்திக்கும் இடமாக இருந்த வந்தது.

www.tamilarangam.net

அரேபியக் கடல் பகுதியிலிருந்த ஏமனில், கோரிஷ் வணிகர்கள், இந்தியாவிலிருந்து வந்த பொருட்களை வாங்கிச் சென்றனர். வரும் வழியில் ஏடன் பகுதியில் அபிசீனியாவிலிருந்து வந்த ஆப்பிரிக்கப் பொருட்களைக் கொள்முதல் செய்து கொண்டனர். வடக்குப் பகுதியில் சுறுசுறுப்பாக இயங்கி வந்த டமாஸ்கஸ் வணிகத் தலத்தோடு இவர்கள் வணிகப் பயணம் முடிவடைகிறது. அங்கு அவர்கள் நறுமணப் பொருட்கள், முத்துக்கள், விலைமதிப்பு வாய்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றைக் கொடுத்து, தானியங்களையும், உற்பத்திப் பொருட்களையும் பண்டமாற்றாக வாங்கிக் கொண்டனர். இந்த ஆதாயமான வணிகத்தால், மெக்காவின் வீதிகளில் செல்வந்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. பின்னால், கிழக்கு–மேற்கு வணிக வழிகளும், மெக்காவின் வழியே மாறிச் சென்றபோது கோரிஷ் பழங்குடியினரின் செல்வச் செழிப்பிற்கு எல்லையில்லாமல் போனது. ஆகவே, அவர்கள் இலட்சியமும் இதற்கேற்ப படிப்படியாக வளர்ந்து சென்றது.

ஆனால், மற்ற அராபியப் பழங்குடியினர், சுதந்திரத்தின் மீது தாங்கள் கொண்டுள்ள பிடிப்பின் காரணமாகவும், கோரிஷ் பழங்குடியினரின் செல்வச் செழிப்பின் மீது கொண்ட பொறாமை காரணமாகவும் தங்களின் பரம்பரையான ஒழுக்க விதிகளின்படி விசுவாசமாக நடந்து வந்தனர். ஆனால் மதம் – சாராத இந்த ஒழுக்க விதிகள் இனி மேலும் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையில்லை. பழங்குடித் தெய்வங்கள் இட்ட கட்டளை என்ற பெயரால் இந்தப் பழங்குடியினர் தற்காப்பிற்கும் தாக்குதலுக்குமான போர் நடவடிக்கைகள் என்ற உனதப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். பழம் தேசியப் பொழுது போக்கான வழிப்பறிக்கு இப்போர் நடவடிக்கைகள் அழிவை ஏற்படுத்துவதாக இருந்தது. அரசியல் வளர்ச்சியை மேலும் முன்னெடுத்துச் செல்ல பழங்குடியினரின் உட்குழுச் சண்டைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது, ஒரு அவசிய நிபந்தனையாக இருந்தது. வரலாற்று ரீதியில் அவசியமாய் இருந்த இந்த இலட்சியத்தை நிறைவேற்றி முடிக்க, வரலாற்று நிகழ்ச்சிகளின் தர்க்கப்படி பொருளாதாரச் சக்திகளை ஆதிக்கம் செலுத்தி வந்தவர்கள்தான், அய்க்கியத்திற்கான பணியை முன்னெடுக்க வேண்டியிருந்தது. இப்பணியைச் செய்து முடிக்க வரலாறு கோரிஷ் மக்களையே தேர்வு செய்தது.

தங்களுக்குள் ஓய்வில்லாமல் சண்டையிட்டுக் கொண்டாலும், அராபியப் பழங்குடியினர் அனைவரும், மெக்காவிற்கு அருகிலிருந்த காபா (caaba) கோயிலில் தான் இறைவணக்கமும், உயிர்ப்பலியும் செய்து வந்தனர். இந்த தேசிய வழிபாட்டுத் தலத்தின் மீதான கட்டுப்பாட்டை கோரிஷ் பழங்குடியினர் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தப் பழங்குடி இனத்திலேயே முக்கிய குடும்பமாக திகழ்ந்து வந்த ஹசிமத் குடும்பத்தினர் கரங்களில் இந்தக் கட்டுப்பாடு இருந்துவந்தது. ஹசிமத் (Hashemite) குடும்பத்தினர் வணிகத்தின் மூலம் திரண்ட கொழுத்த செல்வத்தோடு கூடவே, தேசிய மதிப்பையும், மரியாதையையும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இறுதியாக ஹசிமத் வம்சத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர் ஒருவர் ஒரு புதிய மதத்தின் மூலம் அய்க்கியத்திற்கு அறைகூவல் விட்டிருந்தார். இறைவன் ஒருவனே என்பதுதான் இந்தப் புதிய மதத்தின் முழக்கமாக இருந்தது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகம்மதுவின் இறுக்கமான ஓரிறைக்கோட்பாடானது, உட்குழு சண்டையினால் பிளவுண்டிருந்த மக்கள் மத்தியில், அய்க்கியத்திற்கான ஆர்வத்தை எதிரொலித்தது. அதுமட்டுமல்ல, கத்தோலிக்கத்தேவாலயங்களின் சகிப்புத் தன்மையற்ற நடவடிக்கைகளினால் கொதித்துப்போயிருந்த அண்டை நாடுகள் மத்தியிலும் இதற்கு நல்ல எதிர்வினை கிடைத்தது. மேஜியன் மாயாவாதிகள் மத்தியில் நிலவிவந்த மோதல்களாலும், யூதப் பழைமைவாதத்தாலும், கிறித்துவத்தின் குருட்டுப் பிடிவாதத்தாலும், பாரசிகம், மெசப்படோமியா, சிரியா, பாலஸ்தீன மக்களின் மதவாழ்க்கை நம்பிக்கையற்றவிதத்தில் குழம்பிக் கிடந்தது. கடுமையான சடங்குசம்பிரதாயங்கள் மதத்தின் இடத்தை கைப்பற்றிக் கொண்டன. பாசாங்குத்தனமான சடங்கு முறைகள் பக்தியை விரட்டிவிட்டன. வறட்டுத்தனமான இறைக்கோட்பாடுகள், உண்மையான நம்பிக்கையை நெரித்துக் கொன்றுவிட்டன. தேவதைகள், ஞானிகள், திருத்தூதர்கள் என்ற குழப்பமான கூட்டத்தின் மத்தியில் கடவுள் காணாமல் போய்விட்டார். மாபெரும் சகிப்புத்தன்மையால் மென்மையாக்கப்பட்ட, புதிய மதத்தின் "இறைவன் ஒருவனே" என்ற கறாரான முழக்கமானது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. சமூகச் சிதைவு ஆன்மீகக் குழப்பம், திவாலாகிபோன அறிவுத்தலைமை ஆகிய கடற்புயலின் மத்தியில் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த சாமானிய மக்கள் இந்த ஓரிறைக்கோட்பாட்டை நம்பிக்கைதரும் நங்கூரமாகக் கருதி உற்சாகமாக வரவேற்றார்கள். ஆயுத மோதல்களும், மூடநம்பிக்கைச் சண்டைகளும் தந்த அழிவுகளிலிருந்து விலகி வேறு பகுதிகளில் வாழ்ந்துவந்த அராபிய வணிகர்களே இந்த வரலாற்று முழக்கத்தை முன்வைத்தார்கள். பழமையும், பண்பாட்டுப் பெருமையும் கொண்டிருந்த அண்டை நாடுகள் தேக்கமுற்று, சீரழிந்து, சிதைந்துபோன நிலையிலிருந்தபோது அராபியர்கள் பொருளாதாரச்செழிப்பும், ஆன்மீக முன்னேற்றமும் கொண்டவர்களாக விளங்கிவந்தார்கள். இறைவன் ஒருவனே என்ற கறாரான நம்பிக்கையைப் பிரச்சாரம் செய்துவந்ததன் மூலம் ஆன்மீகம், சிவில், நீதித்துறை, நிர்வாகம் ஆகிய அனைத்து சமூகப் பணிகளையும் ஒன்றாக அய்க்கியப்படுத்தும் ஒரு இராணுவ அரசு உருவாவதற்கான தளம் தயாராயிருந்தது. அராபியர்கள் மத்தியில் நிலவி வந்த இறைக் கோட்பாட்டு ஒற்றுமை ஒரு புதிய சமூக அமைப்பிற்கு அடித்தளம் தந்திருந்தது. பழமையான பண்பாட்டின் அழிவிலிருந்து இது வீரியமாக முன்னெழுந்தது. மதத்தின் வறட்டு ஆச்சாரக் கோட்பாடுகளின் கீழ் காட்டுமிராண்டித்தனமாக வதைபட்டு வந்த மக்களின் கவனத்தை இம்மாதிரியான ஒரு இறைக்கோட்பாடு நிச்சயம் ஈர்க்கவே செய்தது. இந்த புதிய மத நம்பிக்கை தன் பாதுகாப்பின் கீழ் வந்த அனைவருக்கும் மனச்சாட்சி சுதந்திரத்தை வழங்கியது. மதக் கொடுமைகளுக்கு எதிரான ஒரு பாதுகாப்பாகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு புகலிடமாகவும் இசுலாம் எழுச்சிபெற்றது.

ஒத்துப்போகும் இயல்பு, உலகப் பொநோக்கு, சனநாயக வழிமுறை ஓரிறைக்கோட்பாடு போன்ற இசுலாமின் பண்புகள், அது தோன்றிய நிலப்பகுதியின் புவியியல் தன்மை காரணமாக உருவானவையாகும். அரேபியாவைச் சுற்றியிருந்த


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளில் ஒன்று கொடுங்காலாட்சி நடைபெற்று வந்தது அல்லது அந்நியப் படையெடுப்பாளர்களால் அது சூறையாடப்பட்டிருந்தது. ஆனால், இதற்கு மத்தியில் அரேபியா தன் சுதந்திரத்தைத் தக்கவைத்து வந்தது. எகிப்து, பாரசீகம் போன்ற நாடுகளில் மதவழியில் ஒடுக்கப்பட்டு வந்த மக்கள் பிரிவினரும் அதுபோலவே கிறித்துவத்தால் ஒடுக்கப்பட்டு வந்த மக்கள் பிரிவினரும் சுதந்திரமும், விருந்தோம்பல் பண்பும் நிலவிவந்த பாலைவனப் பகுதிக்குள் தஞ்சம் புகுந்தனர். இப் பகுதியில் அவர்கள் தாங்கள் நினைத்ததைப் பிரச்சாரம் செய்துவந்தனர். தாங்கள் பிரச்சாரம் செய்ததை நடைமுறையில் கடைபிடித்தும் வந்தார்கள். பாரசீகர்கள் அசீரியப் பேரரசை வெற்றி கொண்ட பின்னால் பாரசீக மதக்குருக்களான மேஜியன்கள் பாபிலோனியர்களின் வழிபாட்டுத் தலங்களை அழித்துவிட்டார்கள். ஆகவே, சேபியன்(Sabian)* மதகுருமார்கள் தங்களின் பண்டைய மத நம்பிக்கைகளோடும் வானவியல் குறித்த தங்களின் விலைமதிப்பற்ற அறிவோடும் பாலைவனத்தில் தஞ்சம் அடைந்தனர். இதற்கு முன்னராக, அசீரியப் படையெடுப்பாளர்கள் இஸ்ரேல் மண்ணின் எண்ணற்ற புதல்வர்களைப் பாலைவனத்தை நோக்கி விரட்டியிருந்தனர். யோவான் முதலான அனைத்து யூத மதபோதகர்களும் அரேபியப் பாலைவனத்தில் தங்கி பிரார்த்தனையையும் தங்கள் மதப்பிரச்சாரத்தையும் செய்து வந்தார்கள். அசீரியர்களின் தவறுக்குப் பழிவாங்கும் வகையில் அலெக்சாண்டர் நடத்திய படையெடுப்பினால், பழிவாங்கப்பட்ட ஜொராஸ்டரின் சீடர்களாக விளங்கிய மிக வைதீகர்களாகிய அசீரியர்கள் கிரேக்க உருவ வழிபாட்டால் தங்கள் மத நம்பிக்கை மாசு படுவதை விரும்பாமல், சுதந்திரக்காற்று வீசிய அரேபியப் பாலைவனப் பகுதிக்குள் நுழைந்து அங்கிருந்த தங்கள் எதிரிகளான பாபிலோனியர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

கீழைத்தேய மாயாவாத உருவ வழிபாட்டின் ஒட்டு மதப்பிரிவுகளான ஹனாஸ்டிசம்**(Gnosticism) மேனிசாசிசம்***(Manichaeanism)போன்றவையும், கிரேக்க அனுபூதியியல், கிறித்துவ நற்செய்தி போன்றவையும் சுதந்திரமான அரேபிய மண்ணில் தழைத்து வளர்ந்தன. இறுதியாக, வைதீகக் கிறித்துவத்தின் உருவ வழிபாட்டைவிட எளிமையான கிறித்துவ நற்செய்தியை பின்பற்றி வந்தஅரபுப்பழங்குடிகள் பிரிவைச் சேர்ந்த நெஸ்ட்டோரியன் ஜேக்கோபைட்களையும், திருச்சபையோடு முரண்பட்ட யுட்டிசியன்களையும், கத்தோலிக்க வைதீகம்

---

*சேபியன்:– பண்டைய ஏமன் பகுதியில் வாழ்ந்து வந்த சமயப் பிரிவினரான இவர்கள் விண்மீன்களை வழிபட்டு வந்தார்கள்.(மொர்)

**ஹனாஸ்டிசம் :– கிறித்துபிரானுக்கு இருநூற்றாண்டுகளுக்குப் பிறகு கீழைத்தேய நாடுகளில் தோன்றியிருந்த ஒரு சமயக் கோட்பாடு. இது தொடக்க காலக் கிறித்துவக் கோட்பாட்டைப் பிற சமயங்களுடன் ஒன்று சேர்த்தது. (மொர்)

***மேனிசாசிசம் :– பிறப்பால் பாரசீகத்தைச் சேர்ந்த மேனி என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சமய இயக்கம் இது. இறைவன், சாத்தான் இருவருமே அழிவற்றவர்கள், சரிசமமான ஆற்றல் பெற்றவர்கள் என்ற கோட்பாடு கொண்ட சமயமாகும். (மொர்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரட்டியடித்தது. புகலிடத்தில் நிலவி வந்த சுதந்திரம் காரணமாக , பல்வேறு மத நம்பிக்கையாளர்களும் தங்களுக்குள் நெருங்கிப்பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால், தங்களுக்கு இடையில் நிலவும் பொதுவான அம்சங்கள் என்ன என்பதைக் கண்டறிவதற்கான ஒரு வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. சகிப்புத்தன்மை நிலவிய அந்த அமைதியான சூழலினால் அவர்களிடம் நிலவி வந்த வறட்டு ஆச்சாரங்கள் மறைந்துபோயின. மத மாற்றம் செய்யவேண்டும் என்ற வெறி மடிந்து போனது. பல்வேறு மதப் போதனைகளின் பொதுவான சாரம் மட்டுமே, தாராளச்சிந்தனை கொண்ட அராபியர்களிடம் வந்து சேர்ந்தது. பழமையான மதங்களின் நற்குணங்களை மரபுரிமையாகப் பெற்றிருந்த அந்த பாலைவனக் காட்டுமிராண்டிகள் தன் இறைத்தூதர்கள் மூலம் அவ்வப்போது மக்களுக்கு தன்னை வெளிப்படுத்திக் கொள்வதும் உலகிலுள்ள அனைத்துச் சக்திகளுக்கும் அப்பாற்பட்டதுமான ஓர் உன்னதக்கடவுளின் மீது தங்கள் விசுவாசத்தைக் காட்ட அணியமாய் இருந்தனர். முகம்மது தோன்றி ஒரு புதிய மதத்தை நிர்மாணிப்பது என்ற தன் இலட்சியப்பணியை தொடங்குவதற்கு முன்பே, இசுலாமின் சாராம்சம், அரபு மக்களின் ஆன்மீக உணர்வுகளில் உருத்திரண்டிருந்தது. முகம்மது நபி தன் கூரிய சிந்தனைத்திறத்தால் இசுலாமின் சாராம்சத்தை கண்டுபிடித்துவிடவில்லை அல்லது இசுலாம் அவரிடம் தன்னை வெளிப்படுத்தவும் இல்லை. வரலாறு தன் பரம்பரைச் சொத்தை அரபு நாட்டின் வசம் கையளித்திருந்தது. இந்தச் சொத்தின் மதிப்பை அடையாளம் கண்டுகொண்டதிலும், அதைத் தன் நாட்டு மக்களுக்கு ஊட்டியதிலும்தான் முகம்மதுவின் மகத்துவம் அடங்கியிருக்கிறது.

உன்னதக்கடவுள் ஒருவரே என்ற கருத்திற்கு அராபியர்கள் வந்து சேர்ந்து விட்டனர். ஆனால், ப்ழக்கத்தின் காரணமாகவும், பழங்குடியினரின் நலனை முன்னிட்டும் இன்னும் அவர்கள் பண்டைய பல தெய்வ வழிபாட்டையே பின்பற்றி வந்தனர். வரலாறு தங்களிடம் பரம்பரைச் சொத்தாகக் கையளித்த பழைய மதங்களின் சாதகமான அம்சங்களின் பயனை அனுபவிக்கும்பொருட்டு, அராபியர்கள், தங்களின் மரபு ரீதியான இறை வழிபாட்டு முறையை மாற்ற வேண்டியிருந்தது. இந்த நோக்கத்திற்காக ஒரு உன்னத முயற்சியை முன்னெடுக்க வேண்டியிருந்தது. இந்த உன்னத முயற்சியை முன்னெடுப்பதற்கான மிகத் தகுதியான இடமாக மெக்கா திகழ்ந்தது.

அராபியர்களின் சுதந்திரத் தாகமும், உட்குழுச் சண்டைகளும் மெக்காவில் பரஸ்பரம் சமரசத்திற்கும் ஒருங்கிணைப்புக்கும் உள்ளாகியிருந்தது. வணிக வழிகள் அனைத்தும் இங்கு வந்து சேர்ந்தன. அதிகாரம் மையப்படுத்தப்படாமலிருந்த ஒரு நாட்டின் பொருளாதார நலன்கள் மெக்காவை ஒரு மதிப்பு வாய்ந்த ஆன்மீக ஒற்றுமை மையமாக உருவாக்கியிருந்தது. பரந்த பாலைவனப்பகுதியில் தொலைதூர இடங்களைச் சேர்ந்த பழங்குடியினரும் மெக்காவிலிருந்த சந்தைக்குப் பயணம் செய்யும்போது காபா கோவிலில் வழிபாடு செய்து வந்தனர். ஒவ்வொரு பழங்குடியினரும் ஒரு தனித்த சின்னத்தைத் தங்கள் வழிபாட்டிற்குப் பயன்படுத்தி வந்தனர். முன்னூற்றியறுபதுக்கும் மேலான மனித, கழுகு,சிங்க சின்னங்கள் அந்தக் கோயிலை அலங்கரித்து வந்தன. ஆனால், செல்வச் செழிப்பு மிகுந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிஷ் பழங்குடியினர் மெக்காவின் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்தப் பழங்குடி இனத்தைச் சேர்ந்த வலிமை வாய்ந்த ஹசீம் குடும்பத்தார் இக்கோயிலின் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம், பொருளாதார நலன்களை விரைவு படுத்தப் போவதும் எழுச்சி பெறும் நிலையிலுள்ளதுமான மத நம்பிக்கையின் புதிய ஆன்மா முதலில் அந்நாட்டினரால் உளப்பூர்வமாக உணரப்பட வேண்டும். ஹசீம் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரால் இந்தப் புதிய மதத்திற்கான பிரச்சாரம் நிகழ்த்தப்பட்டது.

ஹசீம் குடும்பத்தாரும் கோரிஷ் பழங்குடியினரும் புதிய நம்பிக்கையைத் தழுவத் தொடங்கியவுடன் நாடே மிக விரைவில் அவர்களைப் பின்பற்றியது. அனைத்து வணிகர்களும் வணிகத்தின் பொருட்டு மெக்காவைச் சந்திக்க வேண்டியிருந்தது. மெக்காவின் வணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களால் மிக எளிதாக முழு நாட்டின் நம்பிக்கையையும், மனசாட்சியையும் ஆணையிட்டு வழி நடத்த முடிந்தது. ஆனால் கோரிஷ் இனத்தவரின் தப்பெண்ணங்களும், பழக்க வழக்கங்களும் தங்கள் சகோதர இனத்தவரின் புதியன கண்டுபிடிக்கும் ஆர்வத்தை நசுக்கி வந்தது. மெக்காவிலிருந்து வணிகம் வேறு இடத்திற்கு மாறிவிடக் கூடுமென அவர்கள் அஞ்சினார்கள். காபாவில் இருக்கும் தங்களது பலதெய்வவழிபாட்டுக் கோயிலும் தொல்லைக்குள்ளாகும் என்றும் கருதினர்.

மிகத் தகுதியான ஒரு நபர் தோல்வியுறும் தருணத்தில், வேறு சிலர் அந்தப் புரட்சிக்குத் தலைமை தாங்க அணியமாயிருந்தனர். இறைத்தூதரின் இலட்சியத்திற்கு உகந்த இடமாக மெதினா விளங்கியது. ஒற்றுமைக்கான அறைகூவலை ஏனைய பகுதியினர் உற்சாகத்தோடு வரவேற்றனர். மெக்காவின் தலைமைத்துவம் அச்சுறுத்தலுக்குள்ளானது. கோரிஷ் பழமைவாதத்திலிருந்து ஒவ்வொரு குடும்பமாக விலகி, புரட்சிகர ஹசிமத் குடும்பத்தாரோடு இணைந்து கொண்டனர். "விசுவாசப்படையின் தளபதிகள்" என்ற பட்டத்தைக் கைப்பற்றுவதற்காக, கோரிஷ் பழங்குடியினர் தங்கள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட தங்கள் சகோதரர்களிடம் சரணடைய வேண்டியிருந்தது.

இறைத் தூதர்களின் சீடர்கள் மெக்காவைக் கைப்பற்றியவுடன் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்தப் புனிதநகரின் எல்லைக்குள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் யாரும் நுழையக்கூடாது என்பதே அச்சட்டம். பொருளாதாரப் புறக்கணிப்பு என்ற வீரியமான ஆயுதத்தின் மூலம் நாடு முழுக்கவும் புதிய மதம் திணிக்கப்பட்டது. காபா கோயிலின் சிலைகள் அப்புறப்படுத்தப்பட்டு அது விரைவில் முகம்மதுவின் கடவுளுக்கான புனிதத் தலமாக மாற்றப்பட்டது. புதிய மதத்தின் நடைமுறை விதிகள் முன்வைக்கப்பட்டவுடன் நாடே அதன் கீழ் அணி திரண்டது. மேடைக்கான ஏற்பாடுகள் முடிந்துவிட்டன. புதிய மத நம்பிக்கையைப் பிரச்சாரம் செய்வதற்கு முன்னதாகவே, அந்நம்பிக்கை மக்கள் மனதில் அவர்கள் அறியாமலேயே இடம் பிடித்திருந்தது. பொருளாதார நலன்கள் இம்மாதிரியான அவசியத்தைக் கோரியிருந்தன. ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெற்றிக்கான காரணங்கள்

இசுலாமின்வரலாற்றுப் பின்னணியும், அது தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சமூகச் சூழலும், அதனிடம் சகிப்புத்தன்மை என்ற பண்பை வளர்த்தியிருந்தன. ஆனால், அதனுடைய பரம்பரைக் குணமான மதவெறி உணர்ச்சிகளைக் கணக்கில் கொண்டால் இப்பண்பு (சகிப்புத்தன்மை) அதற்கு முரணாகத் தோன்றும். மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கே இம்மாதிரி தோன்றும். ஆனால், இதில் முரண்பாடு ஏதுமில்லை. "இறைவன் ஒருவனே" என்ற இசுலாமின் அடிப்படைக்கோட்பாடே இந்தச் சகிப்புத்தன்மை வளரக் காரணமாய் இருந்திருக்கிறது. குற்றம் குறை கொண்ட இந்த முழு உலகமும், மடமையும், சிறுமையும் கொண்ட இந்த முழு மனித குலமும் இறைவனின் படைப்பே என்பதே ஒருவர் ஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். இந்த மேன்மையான கோட்பாட்டில் நம்பிக்கை கொள்ளும் ஒருவர் (பூமியில் நடக்கும்) அலங்கோலங்களைக் கண்டு மனம் வருந்துவார்; தன் கண்ணில் பட்ட அபத்தங்களையும், வக்கிரங்களையும் கண்டு ஏளனமாகச் சிரிப்பார். ஆனால், இந்தப் பண்புகள் எல்லாம் வேறொரு தீய கடவுளின் வேலையே என அவர் சிந்திக்கமாட்டார். மாற்று மதத்தினர் மீது போர் தொடுக்க மாட்டார். ஏனெனில், இறைவனின் படைப்பே இந்த உலகம் என்ற அவரது நம்பிக்கை இம்மாதிரியான சிந்தனையை அனுமதிக்காது. மாறுபட்ட வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும் சகோதரர்கள் த்வறாகவே இப்படிச் செய்கிறார்கள். அவர்களுக்குத் தவறாக வழிகாட்டப்பட்டிருக்கிறது. ஆனால், எப்படியிருப்பினும் அவர்கள் ஒரே கடவுளின் குழந்தைகளே. அவர்களைச் சரியான பாதைக்குக் கொண்டுவர வேண்டும் அல்லது மீட்சிக்கு அவர்கள் தயாராகும் வரை சகிப்புத் தன்மையோடு அவர்களைக் கையாள வேண்டும். இவ்வாறுதான் ஒருவர் சிந்திக்கக்கூடும்.

அரபு இறைத்தூதரின் சீடர்கள் உலகத்தின் முன்வைத்த குர்–ஆனா அல்லது சாவா என்ற பயங்கரவாதப்பார்வையானது இசுலாமின் எழுச்சி குறித்த வரலாற்றின் மீது ஒரு தீய களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டதும் சுதந்திரமாக முன்வைக்கப்பட்டதுமான மூன்றாவது வழியை இப்பயங்கரவாதப் பார்வை மறைத்து விட்டது. இசுலாமின் வெற்றிக்கு இந்த மூன்றாவது வழிதான் முக்கியக் காரணமாய் இருந்தது. உண்மையில் சொல்லப்போனால், இந்த மாற்று வழி மிக வித்தியாசமாக முன் வைக்கப்பட்டிருந்தது. "குர்–ஆனை ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது அராபியப் படையெடுப்பாளர்களுக்கு கப்பம் கட்டுங்கள்." இந்த இரண்டு வழிகளையும் ஏற்றுக் கொள்ளாத போதுதான் "இறைவனின் வாள்" உறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. இசுலாமின் ஓரிறைக்கோட்பாடு உருவாகக் காரணமாயிருந்த அரபு வணிகரின் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நலன்கள், அவசியமில்லாமல் இரத்தம் சிந்துவதை அனுமதிக்கவில்லை. வணிக வழிகளில் அமைந்திருக்கும் நிலப்பகுதிகளை வெற்றி கொண்டு, ஒரு அய்க்கிய அரசின் கீழ் அவற்றைக் கொண்டு வர வேண்டிய அவசியமிருந்தது. வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் புதிய மதத்தை ஒப்புக் கொண்டால் மட்டுமே லட்சியம் முழுதும் ஈடேறியதாகப் பொருள் கொள்ளப்படும். அதற்குப் பிறகுதான், ஒரு திடமான அடிப்படையின் கீழ்ஒரு அய்க்கியப்பட்ட அரசை நிறுவ முடியும். ஆனால், பொருட்களை உற்பத்தி செய்வதும், அவற்றை நுகர்வதும் வணிகத்தின் முக்கியக் கூறுகளாகும். ஆகவே, கைவினைஞர்களையும், உழவர்களையும் படுகொலை செய்வதோ அல்லது குர்–ஆனை ஏற்றுக் கொள்ளாத குற்றத்திற்காக வளம் கொழிக்கும் நகரங்களை அழிப்பதோ இசுலாமின் வரலாற்றின் பணியோடு ஒத்துப்போகாத ஒரு செயலாகும். அந்நிய மக்களை அடிமைப்படுத்துவதே புதிய மத நம்பிக்கையாளர்களின் அவசியப்பணியாக இருந்தது. இறைத்தூதரின் சீடர்கள் ஆதிக்கத்தின் கீழ் வந்த மக்களில் இசுலாத்தில் நம்பிக்கை கொள்ளாத மக்கள் பிரிவினர் தங்கள் குறைபாடான மத நம்பிக்கைகளைப் பின்பற்றி வரவும், அவர்களின் வக்கிரமான வழிபாட்டுமுறையைத் தொடர்ந்து செய்து வரவும் அனுமதி தரப்பட்டது.

உமர் கலீபா ஜெருசலத்தை வெற்றி கொண்டபோது, அந்நகர மக்கள் தங்கள் வாழ்வியற் பொருட்களைத் தொடர்ந்து வைத்திருக்கவும், தங்களின் வழிபாட்டு முறையைப் பின்பற்றி வரவும் அனுமதி தரப்பட்டது. கிறித்துவ மக்களுக்கென ஒரு தனியான குடியிருப்பு வளாகம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் அவர்களின் சமயமுதல்வரும் (Patriarch) மதகுருவும் தங்கியிருக்க உரிமை வழங்கப்பட்டது. மொத்த கிறித்துவச் சமுதாயத்தின் மீதும் பெயரளவுக்கு இரண்டு தங்கக் காசுகள் வரி விதிக்கப்பட்டது. இந்தப் புனித நகரத்திற்கு வருகை புரிந்த யாத்ரீகர்களை முசுலீம் படையெடுப்பாளர்கள் தடுத்து நிறுத்தவில்லை. மாறாக, அவர்கள் வருகையை ஊக்கப்படுத்தினார்கள். காரணம், யாத்ரீகர்கள் வருகையால் அந்நகரத்திற்கு ஒரு வணிக மதிப்பு கிட்டி வந்தது. நானூற்று அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, அய்ரோப்பாவின் சிலுவைப் போர் வீரர்களால் இந்த நகரம் கிறித்துவ ஆட்சிக்குள் மீண்டும் கொண்டு வரப்பட்ட போது, "அரபு கலீபாக்களின் அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த சகிப்புத் தன்மையை எண்ணிகிழைத்தேய கிறித்துவர்கள் அதற்காக மனம் வருந்தினார்கள்".*

சிலுவைப் போர் வீரர்கள் ஜெருசலத்தைக் கைப்பற்றிய போது அவர்கள் நடந்து கொண்ட முறை முசுலீம்கள் பின்பற்றி வந்த சகிப்புத் தன்மைக்கு நேர்மாறாக இருந்தது. பின் வரும் குறிப்பு இந்த அம்சத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது :

> " முதலில் ஆக்கிரமித்தவர்களே சொத்துக்களை– அது தனியார் சொத்தாயிருந்தாலும் சரி, பொதுச்சொத்தாயிருந்தாலும் சரி– கொள்ளையடித்துக் கொள்ளலாம் என ஆக்கிரமிப்பாளர்களுக்குள்

---

* ரோமப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரஸ்பரம் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. கிறித்துவ மதத்தோடு முரண்பட்ட கருத்துக் கொண்டிருந்தவர்கள் இரத்தப்பலிக்கு உள்ளானார்கள்; அவர்கள் காட்டிய எதிர்ப்பு இவர்களின் சாந்தப்படுத்த முடியாத கோபத்தைத் தூண்டிவிட்டிருக்கலாம். ஆனால் எதிரிகளின்வயது அல்லது பாலினம் ஆகியவற்றை இவர்கள் கோபம் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. மூன்று நாட்கள் இவர்கள் தாறுமாறாக மக்களைப் படுகொலை செய்து வந்தார்கள். எழுபதாயிரம் முசுலீம்களை வாளுக்கும், எந்தத் தொல்லையும் தராத யூதர்களை அவர்களின் கோயிலிலேயே தீயுக்கும் இரையாக்கிய பின்னால், சோர்வு காரணமாகவோ அல்லது வேறு நோக்கங்களினாலே, தாங்கள் பிடித்து வைத்திருந்த ஆயிரக் கணக்கான மக்களை உயிரோடு விட்டு விட்டார்கள்."*

கிறித்துவ ஆய்வாளர்களாயிருந்தாலும் சரி, முசுலீம் ஆய்வாளர்களாயிருந்தாலும் சரி, சமகால ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, நவீன கால ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி— அனைத்து அதிகாரப் பூர்வ ஆய்வாளர்களின் ஆய்வுகளைச் சான்றுகளின் அடிப்படையில், விமர்சன நோக்கோடு பார்த்து வந்த ஜிப்பன் இறுதியாகப் பின்வரும் விசயத்தை சான்றோடு முன்வைக்கிறார்: "தனக்கு அடிமைப்பட்ட கிறித்துவ மக்களின் பாதுகாப்பிற்கும் அவர்கள் சுதந்திரமாக வணிகம் செய்வதற்கும் முகம்மது அனுமதி அளித்திருந்தார். அவர்களின் வழிபாட்டு முறையைச் சகித்துக் கொண்டார்." முகம்மதுவிற்குப் பின் உடனடியாக அவருக்கு வாரிசாக வந்தவர்கள் மட்டுமல்ல, அராபிய ஆட்சியாளர்கள் அனைவருமே ஆதாயம் தந்த இந்த சகிப்புத் தன்மைக் கோட்பாட்டை ஏறக்குறைய கறாராகப் பின்பற்றி வந்தார்கள். இசுலாம் தன் வரலாற்றுப் பணியை செய்து முடித்த பின்பும், மேன்மையான அராபியர்கள் கைகளிலிருந்து இழிவுக்குப் பெயர் பெற்ற காட்டுமிராண்டிகளான தார்த்தாரியர்கள் கைகளுக்கு அதன் தலைமை மாறிய பின்புமே இந்தக் கொள்கை (சகிப்புத் தன்மை) கைவிடப்பட்டது. முதலாம் துருக்கிய சுல்தான்கள் கூட, இசுலாமின் உண்மையான சகிப்புத் தன்மையை முழுதாகவே கைவிட்டுவிடவில்லை.

இசுலாம் பேரோடும் புகழோடும் இருந்த அந்த நாட்களில் அதன் உடன் பிறந்த பண்பாயிருந்த சகிப்புத் தன்மையானது, விரிவான சிந்தனைச் சுதந்திரமாகவும், பகுத்தறிவு வாதமாகவும் வளர்ச்சி பெற்றிருந்தது. அது மட்டுமல்ல, வைதீகர்கள் கருத்துப்படி , அது கிறித்துவ எதிர்ப்பு /மதவெறுப்புக் கருத்துக்களாகவும் வளர்ச்சி பெற்றிருந்தது. பாக்தாத்தைச் சேர்ந்த தொடக்ககால அப்பாசித்தஸ் கலீபாக்கள் மதச்சார்பற்ற அறிவியலைக் கற்றுக்கொள்ள தங்களை அர்ப்பணித்திருந்ததோடு, சுதந்திரச் சிந்தனையாளர்களாகவும் இருந்தனர். அவர்களில் சிலர்— மாதிரிக்கு **மோத்தாசென்** போன்றோர்— குர்—ஆனின் தெய்வீகத் தோற்றுவாய் குறித்து நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர்.

---

* ரோமப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும்

www.tamilarangam.net

அரேபியப் பேரரசானது வதைக்குள்ளாகியிருந்த யூதர்களுக்கும், நெஸ்ட்டோரியன்ஸ் ஜேக்கோபைட்ஸ், யூட்டிசியன்ஸ் பவுசியன்ஸ் போன்ற வைதீகப்பிடிப்பற்ற கிறித்துவப்பிரிவினருக்கும், பல நூற்றாண்டு காலம் தாராள மனப்பான்மையோடு அடைக்கலம் தந்து வந்தது. அராபியர்கள் தங்களை வலுப்படுத்திக் கொண்டதற்குப் பிறகு கத்தோலிக்கக் கிறித்துவர்கள் விசயத்திலும் இசுலாமின் சகிப்புத்தன்மை பின்பற்றப்பட்டு வந்தது. எண்ணற்ற கிறித்துவ வரலாற்றாசிரியர்கள் இதற்கான சான்றுகளை முன் வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக திருச்சபை குறித்த வரலாற்றாசிரியரான **ரெனேயுடட்** பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "சமய முதல்வர்கள்,பிசப்புகள், மத குருக்கள் ஆகியோரின் பதவிகளுக்கும், அவர்களின் சட்டக் காப்புரிமைகளுக்கும் எகிப்தைச் சேர்ந்த முசுலீம் நீதிபதிகள் பாதுகாப்புத் தந்திருந்தனர். படித்த கிறித்துவர்களுக்கு செயலர், மருத்துவர் ஆகிய பதவிகள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த ஆதாயமான பணி வாய்ப்புகள் மூலம் அவர்கள் தங்கள் செல்வச் செழிப்பை வளமாக்கிக் கொண்டனர். மாநிலம் அல்லது நகரத்தை அதிகாரம் செய்யுமளவிற்கு சில சமயம் இவர்கள் மதிப்பு உயர்த்தப்பட்டிருந்தது."

பாரசீக அரசின் நிர்வாகத்தில் கிறித்துவர்கள் மிக நம்பிக்கைக்குரியவர்களாக இருந்து வந்ததாக பாக்தாத் கலீபா ஒருவர் சொல்லியிருக்கிறார். புராட்டஸ்டண்ட் சீர்திருத்தத்தில் தீரத்தோடு முன்னின்ற பலூசியன்கள் விசயத்தில் , அரேபியப் பேரரசு அவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரத்தை அளித்திருந்ததோடு, சீரழிந்த கத்தோலிக்க மதப்பிரிவை மாற்றியமைக்கவும் கிறித்துவத்தை அதன் உண்மையான வடிவில் மறுநிர்மாணம் செய்யவும் அவர்கள் செய்து வந்த நீண்ட நெடிய முயற்சிகளுக்குத் தீவிரமான ஆதரவும் தந்து வந்தது.

ஜொராஸ்டரின் பண்டைய மதமும், நன்மை-தீமை இரண்டுமே நிரந்தரமானவை என்ற அதன் பெருங் கேடு நிறைந்த மதக்கோட்பாடும் தீங்கானதாக- அதிலும் குறிப்பாக "இறைவன் ஒருவனே" என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு அது மிகத் தீங்கானதாக - இருந்தது. இருப்பினும், மேஜியன் மதப்பிரிவினர் விசயத்திலும் கூட, அராபியர்கள் சகிப்புத்தன்மையோடுதான் நடந்திருந்தனர். ஹிஜிரா மூன்றாம் நூற்றாண்டின்போது, அமைதியும் அழகும் கொண்டு விளங்கிய மசூதிகளை மறைக்கும் அளவிற்கு அதன் அருகிலேயே, பழைய தீக் கோயில்கள் ஆடம்பரமாக இருந்து வந்திருக்கின்றன. பண்டைய மத நம்பிக்கையின் அந்தப் பெருமைமிகு நினைவுச் சின்னங்கள் இசுலாமின் மதவெறி கொண்ட வாளின் இரக்கமற்ற தாக்குதலினால் வீழ்ந்துவிடவில்லை. மாறாக, அம்மத நம்பிக்கையாளர்கள் பெரும்பாலும் அதிலிருந்து விலகிவிட்டதன் விளைவாகவே அவை கேட்பாரற்று இடிந்து போயின. எப்பேர்ப்பட்ட வன்முறையை நடைமுறைப் படுத்தினாலும் ஒரு நாடு எந்த எதிர்ப்பும் காட்டாமல் தனது பாரம்பரியமான மதநம்பிக்கையைக் கைகழுவிவிட்டு, தங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றி கொண்ட ஆட்சியாளர்களின் மதத்திற்கு வெகு விரைவில் மாறுவது நடக்காத செயலாகும். ஆனால், டைக்ரீஸிலிருந்து ஆக்ஸஸ் முடிய இருந்த பரந்த பிரதேசத்தில் பாரசீகர்கள் இதைத்தான் நடத்திக் காட்டியிருந்தனர். பண்டைய மத நம்பிக்கைகள் சீரழிந்த நிலையில் இருந்தன. இனி மேலும் அவை பண்பட்ட மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்யும் நிலையில் இல்லை. "சூரியன், தீ" ஆகிய இரண்டின் பளபளப்பை இசுலாமின் அச்சுறுத்தும் நிழல் காவு கொண்டு விட்டது. தீமை நிரந்தரமானது என்ற கோட்பாட்டின் கொடூரமான கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை அடையும் ஒரு வழியாக அவர்கள் முகம்மதுவின் எளிமையான ஓரிறைக் கோட்பாட்டைத் தழுவிக் கொண்டனர்.

அலெக்சாண்டிரியாவிலிருந்து கார்த்தேஜ் முடிய இருந்த வடக்கு ஆப்பிரிக்கப் பகுதியில் மட்டுமே இசுலாமின் வளர்ச்சியினால், கிறித்துவ மதம் முற்றாகத் துடைத்தெறியப்பட்டிருந்தது. இங்கும் கூட, புதிய மத நம்பிக்கையின் (இசுலாம்) கட்டாயத்தினால் இந்த மாபெரும் மதப் புரட்சி நடந்து விடவில்லை. மாறாக பழைய மத நம்பிக்கைகள்(கிறித்துவம்) சீரழிந்து போனதும், அதனால் ஏற்பட்டிருந்த குழப்பமும், அவ நம்பிக்கையும், விரக்தியுமே இதற்குக் காரணங்களாக இருந்திருக்கின்றன. திறமையும், கடமையுணர்வும்,வல்லமையும் கொண்டு விளங்கிய சைப்பீரியர்கள், ஏதென்சியர்கள், அகஸ்தீன்கள் ஆகியோரால் நிலைநாட்டப்பட்டிருந்த கிறித்துவ மத நம்பிக்கைகளை ஏரியன், டோனடிஸ்ட் போன்ற கிறித்துவத்திற்கு எதிரான மத நம்பிக்கையாளர்கள் மாற்றியமைத்துவிட்டனர். கிறித்துவத் திருச்சபையோடு முரண்பாடு கொண்டிருந்த சமய நம்பிக்கைகளின் தலைமையின் கீழ் நடைபெற்ற பஞ்சைப் பராரிகளின் கலகத்தை நசுக்கியெறிந்த அந்தக் கத்தோலிக்க மதக் கோபம், ஒரு காலத்தில் பொருளாதாரத்தில் செழிப்பாய் விளங்கிய அப்பகுதிகளை நாசம் செய்து விட்டது. அதற்குப்பின் வந்த லேண்டல், மூர் காட்டுமிராண்டிக் கூட்டத்தார் சற்றும் இரக்கமில்லாமல் அப்பகுதிகளை நாசம் செய்தனர். துறவறம் என்ற அபத்தத்தில் பொய்யான ஆறுதல்களைப் பெறுமளவிற்கு அம்மக்கள் ஒரு விரக்தி தரும் சமூகக்குழப்பத்திலும் ஆன்மீகச் சீர்கேட்டிலும் வீசியெறியப்பட்டிருந்தனர்.

சமூகச்சிதைவு, ஆன்மிக அவநம்பிக்கை ஆகியவற்றின் கடுமையான இருளில் அவதிப்பட்டு வந்த மக்களுக்கு, அராபிய இறைத்தூதரின் நற்செய்தியானது நம்பிக்கை தரும் ஒளிவிளக்காகக் காட்சியளித்தது. இம்மை-மறுமை குறித்து புதிய மதம் கூறி வந்த கருத்துக்கள் சாமான்ய மக்களின் சிந்தனையைக் கவர்ந்தன. இம்மண்ணுலக வாழ்க்கைக்கான போராட்டத்தில் தோல்வியுற்று, எந்தப் பிடிப்புமின்றி கடவுளின் இருப்பு என்ற மூட நம்பிக்கையில் தங்களை ஈடுபடுத்தியிருந்த விரக்தி கொண்ட மக்களின் ஆன்மாக்களை இசுலாத்தின் வெற்றி முரசொலி விழிப்படையச் செய்தது. உடலைப் பாதுகாத்துக் கொள்வதை அனுமதித்த –ஏன் அதை ஊக்குவித்த என்று கூடச் சொல்லலாம்– புதிய மத நம்பிக்கையானது, கிறித்துவப் போதனையின் சீரழிந்த பிரச்சாரம் முன் வைத்திருந்த கடுந்துறவறம் என்ற வக்கிரமான கருத்திலிருந்து மிக விரைவில் மக்களை மீட்டெடுத்தது. விரக்தியின் விளிம்பிலிருந்த மக்கள் முன்னால், இசுலாம் புதிய நம்பிக்கைக்கான பாதையைத் திறந்து காட்டியது.

www.tamilarangam.net

புதிய சமூகத்தில், ஒவ்வொருவரும் தங்கள் வலிமை, திறமைக்கேற்ப தங்களை வளர்த்திக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமளவிற்கு இந்தக் கருத்துக்கள் (கடும்துறவறம்)சமூகத்தைக் குழப்பியிருந்தது. இசுலாம் தந்த ஈடு இணையற்ற ஊக்கத்தாலும், அராபிய மன்னர்களின் கருணை கொண்ட ஆட்சியினாலும், வடக்கு ஆப்பிரிக்காவின் வளமான நிலங்களும், சுறுசுறுப்பான அதன் மக்களும், மிக விரைவில் தங்களை மீண்டும் வளப்படுத்திக் கொண்டனர்.

"வாளின் துணையோடு மட்டுமே அரேபியர்கள் முன்னேற்றம் கண்டார்கள் என்பது முழுக்க முழுக்கத் தவறான கருத்தாகும். ஒரு நாட்டின் ஒப்புக் கொள்ளப்பட்ட மத நம்பிக்கைகளை வேண்டுமானால் வாள் மாற்றிவிடக்கூடும். ஆனால், மனிதர்களின் மனச்சாட்சியை அது ஒன்றும் செய்துவிட முடியாது. இந்த வாதம் அர்த்தமுள்ளதுதான் என்ற போதிலும், ஆசியா, ஆப்பிரிக்க நாடுகளின் அன்றாட வாழ்க்கையில் இசுலாம் வேர் கொள்வதற்கு முன், அங்கிருந்த சூழல் பற்றி இதைவிட அர்த்தமுள்ள விளக்கம் தேவைப்படுகிறது. வெற்றிகொள்ளப்பட்ட நாடுகளின் சமூகச்சூழலில் தான் இந்த அரசியல் நிகழ்விற்கான விளக்கத்தைக் கண்டுபிடிக்க முடியும். வெகு காலத்திற்கு முன்னரே இந்நாடுகளில் மதத்தின் செல்வாக்கு முடிவுக்கு வந்துவிட்டது. அந்த இடத்தை வறட்டு இறையியல் எடுத்துக் கொண்டிருந்தது. சாதாரண விசயங்களைப் புரிந்து கொள்வதற்கே சிரமப்படும் இந்தக் கல்வியறிவற்ற மக்கள் இம்மாதிரியான மர்மமான விசயங்களை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? இருப்பினும் மீட்சி அல்லது நரகம் என்ற கோட்பாடுகளையே மனிதகுலம் சார்ந்திருக்கிறது என அவர்களிடம் பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தது. ஒரு மனிதனின் குறைநிறைகள் இனிமேல் கருத்தில் கொள்ளப்படாது என்பதை அவர்கள் கண்டார்கள். ஒரு மனிதனின் தீய செயல்களை வைத்து அவன் பாவம் மதிப்பிடப்படுவதில்லை. மாறாக, கிறித்துவத்திற்கு எதிரான அவன் கருத்துகளுக்கு ஏற்பவே ஒரு மனிதனின் பாவம் தீர்மானிக்கப்பட்டது. கொலை, நஞ்சூட்டுதல், கள்ள உறவு, கண்களைக் குருடாக்குதல், கலகம், துரோகம், உள்நாட்டுப் போர் ஆகிய செயல்களில் பாதிரிமார்கள் ஈடுபட்டிருந்தார்கள். இதை என்னவென்று சொல்வது? மண்ணுலக அதிகாரத்திற்கான போட்டியில் சமய முதல்வர்களும், தலைமை குருமார்களும் ஒருவரையொரவர் பழித்துக் கொண்டனர்; சமூக விலக்குச் செய்து கொண்டனர். அரசவையில் பணி புரிந்த அலிகளுக்குத் தங்கத்தைக் கையூட்டாகக் கொடுத்தனர். அவையோருக்கும், அரச மகளிருக்கும் சமயத் தலைமையின் அன்பைச் சலுகையாகத் தந்தனர். தாங்கள் கடவுளின் சார்பாகப் பேசுவதாக வலியுறுத்தி ஆட்சிமன்றங்களின் முடிவுகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலையிட்டனர். மக்கள் கூடியிருக்கும் அவைகளில் கிளர்ச்சிக் காரர்களின் துணையோடு கீழான சூழ்ச்சிகளிலும், தவறான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். அரசர்களின் படையணிகளில் பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு பெரு நகரங்களில் கலகம் செய்தும் வறட்டு இறையியல் கோட்பாடுகளுக்காக இரகசியக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்த பெருந்திரளான துறவிகள் கூட்டத்தில் அறிவார்ந்த சுதந்திரத்திற்காக அல்லது மனிதனின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர் ஒருவர் கூட இருக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையில் இதன் விளைவு அருவெறுப்பையும், புறக்கணிப்பையும் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? ஒரு சமூக அமைப்பின் மீது தாங்கள் கொண்டிருந்த அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து விட்ட மக்கள் அந்த அமைப்பைக் காக்க உதவுவார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது."

"ஆகவே, இந்த சண்டையிடும் குழுக்களுக்கு மத்தியில் கணக்கற்ற வாதப் பிரதிவாதிகளின் அராஜகத்திற்கு மத்தியில் "இறைவன் ஒருவனே" என்ற திகிலூட்டும் ஒரு போர்க்குரல், உலகம் முழுக்க எதிரொலித்த போது அனைத்து ஆரவாரங்களும் அடங்கிப்போயின. இதில் வியப்படைய என்ன இருக்கிறது? ஆசியாவும் ஆப்பிரிக்காவும் வீழ்ந்ததில் வியப்படைய ஏதும் உண்டா? இந்தக் காலத்தில் தேச பக்தியைக் கூட அவ்வப்போது மதத்திற்குக் கீழ்ப்படியச் செய்கிறார்கள். அவ்வாறான காலங்களில் தேச பக்தியே கூட அற்றுப் போனதாக இருந்தது."*

முகம்மதுவின் சீடர்கள் பிரச்சாரம் செய்து வந்த சமத்துவக் கோட்பாடானது, அரபுப்பழங்குடியினரின் நாடோடி வாழ்க்கையில் காணப்பட்ட பாரம்பரியச் சுதந்திரத்திலிருந்து தோன்றியதாகும். தங்களது தேசியத் தொழிலான வழிப்பறியில் இவர்கள் அனைவரும் சமமானவீரத்தையே காட்டி வந்தார்கள். பண்டையக் காலம் எழுப்பியிருந்த இந்தப் பணிவான அறைகூவலானது நாடுபிடித்தல் என்ற கம்பீரமான பரிமாணத்தை எட்டியபோது, தனது குதிரையின் வேகமும், தனது வாளின் கூர்மையும் எதற்கும் சளைத்ததல்ல என்பதை ஒவ்வொரு அராபியனும் மறந்துவிடவில்லை. ஷெசோஸ்டிரிஸ்,சைரஸ், அலெக்சாண்டர், தாரியஸ், போம்பி, அசிர்வன், டோல்மி, டிராஜன் ஆகியோரின் இராணுப் படையெடுப்பிற்கு எதிராக, தனது பாலைவனத் தாயகத்தைக் காப்பதில் ஒவ்வொரு அராபியனும் சம பங்கு வகித்திருந்தான். கடந்த காலங்களில் தங்களுக்கு எதிராகத் தோன்றியிருந்த தாக்குதல்களைச் சமாளிப்பதில் அவன் மேன்மையான பங்கு வகித்து வந்திருக்கிறான். இசுலாம் பெற்ற கண்கவர் வெற்றிக்கு, அராபிய வீரனின் கூர்மையான வாள்முனையைக் காட்டிலும், அது போதித்த சமத்துவக் கோட்பாட்டின் வீரியம் எவ்விதத்திலும் குறைவானதல்ல. ரோம், பைசாண்டியம், பாரசீகம்

* ஜே. டபிள்யூ. டிரேபர் "அய்ரோப்பாவின் அறிவு வளர்ச்சி குறித்த வரலாறு"
(தொகுதி–1 பக். 332–33)

www.tamilarangam.net

இந்தியா ஆகிய பேரரசுகளின் வர்க்க–சாதி சமூகங்களை வழி நடத்தி வந்த ஒடுக்கு முறைச் சட்டங்களுக்கு இது (இசுலாமின் சமத்துவம்) முற்றிலும் நேர் எதிரானதாய் இருந்தது. உண்மையில் சொல்லப்போனால் சீரழிந்த நிலையிலிருந்த இந்த பண்டைய பண்பாடுகளால் நீண்ட நாட்களுக்கு முன்பே மறக்கப்பட்டு விட்ட சுதந்திரம், சமத்துவம் ஆகிய கோட்பாடுகளுக்காக இசுலாம் உறுதியாக முன்னின்றது.

பண்டையப் பண்பாடுகளின் பெருமைமிக்க ஆன்மீக மரபுகள் அனைத்தும் அராபியர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. பண்டையப் பண்பாடுகளின் வெறுப்பூட்டிய அழிவின் கீழ் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்த பாவப்பட்ட மக்கள் வசம் இந்த மரபுப் பண்புகளை பகிர்ந்தளிக்க வேண்டிய இலட்சியப் பணி அராபியர்களின் வசம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இசுலாமின் நம்பவொண்ணா விரிவாக்கத்திற்கு அன்றைய காலச்சூழலும் சாதகமானதாக இருந்தது. உலகம் முழுதும் பண்டையப் பண்பாடுகளின் ஆளும் வர்க்கங்கள் அறிவு வீழ்ச்சியிலும், சமூகச் சீரழிவிலும் இருந்த ஒரு காலத்தில் தான் இசுலாம் எழுச்சி பெற்றது. சீரழிவு சிதைவு, கொடுங்கோன்மை ஆகிய சமூகச் சூழல்களால் விரக்தியுற்றிருந்த மக்கள் ஒரு சிறந்த உலகத்திற்கான ஆசையிலும் அதை அடைவதற்கான முயற்சியிலும் இருந்து வந்தனர். இந்தப் புரட்சிகரமான உயிர்த்துடிப்பின் முதல் குழந்தையாக கிறித்துவம் பிறந்தது. ஊழல் பிடித்த பழைய ஆளும் வர்க்கத்தையும் தன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டதால் கெடுவாய்ப்பான அதன் வெற்றியானது அன்றைய சமூகச்சூழலை நியாயப்படுத்துவதாக மாறிப் போயிருந்தது. ரோமானியர்களின் அடக்குமுறைக்கு எதிராகக் கலகம் செய்யும்படி இறைத்தூதர் செய்த போதனையைப் பாதிரிமார்கள் மிக வசதியாக மறந்து போனார்கள். "சீசருக்குத் தர வேண்டியதைத் தந்துவிடுங்கள்" என்ற வெட்கங்கெட்ட கட்டளையை கதறிச் சொன்ன பாவப்பட்ட ஆடாக அவரைச் சித்தரித்தனர். இந்தக் கட்டளைதான், கிறித்துவ மத உருவாக்கத்திற்குப் பின்புலமாகவும், யூத வரலாற்றின் அனைத்து மரபுகளை மீறுவதாகவும் இருந்தது.

ஆளும் வர்க்கத்தோடு கிறித்துவம் சமரசம் செய்து கொண்டதால் காலத்தின் கட்டாயமான ஒரு புதிய சமூக அமைப்பிற்கான அடித்தளத்தை இட வேண்டிய தன் மத இலட்சியத்திற்கு அது துரோகம் செய்துவிட்டது. ஒரு புதிய உலகத்தைக் கைப்பற்றும் பணியில் அது ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தலைமை தாங்க மறுத்துவிட்டது. பாலாறும் தேனாறும் ஓடும் ஒரு உலகம் வரவிருக்கிறது என்ற மாயையைக் காட்டி அம்மக்களை அது ஏமாற்றியது. அப்பாவிகளுக்கு மட்டுமே– அதுவும் ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மையை ஏற்றுக்கொண்ட அப்பாவிகளுக்கு மட்டுமே– சொர்க்கத்தில் நுழைய அனுமதி தரப்பட்டது.

கிறித்துவத்தின் படுதோல்வியினால், மிகத் தீவிரமான ஒரு மதம் தோன்ற வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவை இருந்து வந்தது. இசுலாம் தன் தொண்டர்களுக்கு ஒரு ஒளி வீசும் சொர்க்கத்தின் அருளாசி கிடைக்கும் என்று வாக்குறுதி தந்தது மட்டுமல்ல, இந்த உலகத்தை வெற்றி கொள்ளும்படி அது அவர்களுக்கு ஊக்கமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்து வந்தது. உண்மையில் இந்த உலகிலேயே ஒரு இலட்சிய வாழ்க்கை மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியையும், இன்பத்தையுமே சொர்க்கம் என அரேபிய இறைத்தூதர் குறிப்பிட்டிருந்தார். முகம்மது, தன் நாட்டு மக்களுக்கு தேசிய ஒற்றுமை என்ற அடித்தளத்தை ஏற்படுத்தித் தந்ததோடு, அய்க்கியப்பட்ட அரேபிய நாட்டின் கைவசம் கலகம் என்ற ஆயுதத்தையும் கையளித்திருந்தார். ஒடுக்கப்பட்டும் ஆதரவற்றும் இருந்து வந்த அண்டை நாட்டு மக்கள் இதற்கு உடனடியாக ஆதரவும் தந்தனர்.

இசுலாமின் நம்ப முடியாத வெற்றிக்கு ஆன்மீகக் காரணங்கள் இருந்தது போலவே, சமுக-அரசியல் காரணங்களும் இருந்திருக்கின்றன. இந்த முக்கியமான கருத்திற்கு ஜிப்பனின் பின்வரும் கூற்று சான்றாக விளங்குகிறது

> "ஜொராஸ்டரின் மதத்தைக் காட்டிலும் மிகத் தூய்மையானதும் மோசஸின். கட்டளையைக் காட்டிலும் மிகத் தாராளப் பண்பும் கொண்டிருந்ததுமான, முகம்மதுவின் மதமானது பகுத்தறிவுக் கருத்தோடு மிகக்குறைவான முரண்பாட்டையும்,ஏழாம் நூற்றாண்டின்போது கிறித்துவத்தின் எளிமையை எள்ளி நகையாடி வந்த மாயாவாதம், மூட நம்பிக்கை ஆகிய நம்பிக்கைகளோடு அதிக முரண்பாட்டையும் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. "*

இசுலாமின் கண்கவர் வெற்றிக்கு அதன் தொடக்க காலத் தொண்டர்களின் இராணுவ வலிமையைக் காட்டிலும், அதன் விடுதலை, சமத்துவக் கோட்பாடுகளே காரணமாக இருந்திருக்கிறது என்ற உண்மைக்கு மற்றொரு வரலாற்றாசிரியர் பின் வரும் சான்றை முன்வைக்கிறார் :

> " அராபியர்கள் வெற்றி கண்ட ஒவ்வொரு கிறித்துவ நாட்டின் விசயத்திலும் வரலாறு வாய்ப்புக் கேடாக ஒரு செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறது. அராபியர்கள் முன்னேறிச் செல்ல அந்நாட்டு மக்கள் சாதகமாக இருந்ததே அவர்களது வெற்றிக்குரிய காரணமாக இருந்திருக்கிறது. அரபு வெற்றியாளர்களைக் காட்டிலும் பெரும்பாலான கிறித்துவ அரசுகளின் நிர்வாகம் மிக மோசமான ஒடுக்கு முறை கொண்டதாக இருந்திருக்கிறது என்ற செய்தியானது அந்த அரசுகளுக்கு அவமானம் தரும் ஒரு செயலாகும்.....சிரியா நாட்டு மக்கள் முகம்மதுவின் சீடர்களை வரவேற்றார்கள். எகிப்தின் காப்டுகள் அரபுகளின் ஆதிக்கத்தின் கீழ் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொண்டனர். கிறித்துவ மதத்தைச் சேர்ந்த பெர்பர்கள், ஆப்பிரிக்காவை வெற்றி கொள்ள அரபுகளுக்கு உதவி புரிந்தனர். இந்த நாடுகள் அனைத்தும் கான்ஸ்டான்டிநோபிள் அரசின் மீது கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக, தங்களை முகம்மதியர்களின் ஆதிக்கத்திற்கு ஒப்படைத்துக் கொண்டார்கள். மேட்டுக்குடி மக்களின் துரோகத்தாலும்,மக்கள் காட்டிய அலட்சியத்தாலும், ஸ்பெயினும் பிரான்சும் எளிதாக அராபியர்களிடம் வீழ்ந்தது.''** ☐

---

* ''ரோமப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும்''

** பின்லே-''பைசாண்டியப் பேரரசின் வரலாறு''

www.tamilarangam.net

## முகம்மதுவும் அவரின் போதனைகளும்

வேறெந்த மனிதர்களைக் காட்டிலும், இவர் ஒருவர்தான் மனித குலத்தின் மீது பெரும் செல்வாக்குச் செலுத்தியவராக இருந்திருக்கிறார்".* என இசுலாமின் நிறுவனர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். தான் ஒரு தெய்வீகப் பிறப்பு என ஒரு மனிதன் உரிமை கோராத வரை அம்மனிதனிடம் தனித்துவம் என ஏதும் இருக்க முடியாது. பிற மதங்களின் இறைத்தூதர்கள், இறைச்சீடர்கள், ஞானிகள் விசயத்திலும் அய்யத்தைத் தரும் இம்மாதிரியான ஒரு உரிமைக் கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. அரேபிய இறைத்தூதரை"ஒரு வஞ்சகர்" என கிறித்துவம் திமிரோடு அழைக்கிறது. ஆனால், மோசஸ்க்கும், இயேசுவிற்கும் இதே பெயர் தரப்பட்டதை இது மறந்து விடுகிறது. மத்திய காலத்தின் இறுதியில் "மூன்று வஞ்சகர்கள்" என்ற பெயரில் ஒரு புத்தகம் ஆசிரியர் பெயர் இல்லாமல் வெளியிடப்பட்டிருந்தது. அப்புத்தகம் அய்ரோப்பாவில் உணர்ச்சி அலைகளைக் கிளப்பியிருந்தது. இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் கிறித்துவ மன்னர் பிரடெரிக் பர்பரோசா அல்லது முசுலீம் தத்துவவாதி அவ்ரோஸ் (Averroes)ஆக இருக்கும் என நம்பப்பட்டது.

முகம்மது ஒரு வஞ்சகராக இருந்திருந்தால், தெய்வீக அவதாரம் என்ற கட்டுக் கதையைக் கருவியாகக் கொண்டு, யதார்த்தத்தில் தோன்றி, அறியாமையும் மூட நம்பிக்கையும் கொண்டிருந்த மக்களிடம் தங்கள் அவதாரத்தை மறுக்க முடியாத உண்மையென நம்ப வைத்த மற்றவர்களைப் போல, தானும் ஒரு தெய்வீக அவதாரம் என்பதை உணர்வுபூர்வமாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார். தேசிய ஒற்றுமை என்ற இலட்சியத்தை உறுதி செய்து விட்ட முகம்மது தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த அரபுப் பழங்குடியினர் இந்த இலட்சியத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமானால், இதற்கு ஒரு தெய்வீக ஒப்புதல் இருந்தால் மட்டுமே சாத்தியப்படும் என்பதைப் புரிந்து வைத்திருந்தார். அறியாமையிலும், மூடப் பழக்க வழக்கங்களிலும் மூழ்கித் திளைத்திருந்த மக்களை தெய்வீக ஒப்புதல் என்ற விளக்கத்தைத் தவிர வேறெந்த வாதத்தாலும் சரிப்படுத்தியிருக்க முடியாது. அனைத்து அதிகாரங்களையும் வல்லமையையும் கொண்டிருந்த ஒரு தெய்வத்தை முன்னிறுத்துவதன் மூலம்(பழங்குடியினரின்) சிறு தெய்வங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட முடியும். சிறு தெய்வங்களின் கோபத்திலிருந்து, பெருந்தெய்வத்தின் கருணை காப்பாற்றி விடும். பழங்குடித் தெய்வங்களின் கொடுங்கோன்மைக்கு எதிராக மக்களைக் கலகம் செய்யும்படி தூண்ட வேண்டுமானால், ஒரு சக்தி வாய்ந்த உன்னத தெய்வத்தின் மீது அவர்கள் முழு நம்பிக்கை கொள்வதன் மூலமே சாத்தியப்படுத்த முடியும். அங்கு ஒரு உன்னத தெய்வம் இல்லாமல் இருந்தால் அத்தகையதொரு தெய்வத்தை உருவாக்க

* டிரேபர் – "அய்ரோப்பாவின் வளர்ச்சி குறித்த வரலாறு" (தொகுதி –1 , பக். 329)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டிய தேவையிருந்தது. முகம்மதுவின் சிந்தனை இப்படித்தான் சென்றது. இதில் வஞ்சகம் என்று சொல்வதற்கு ஏதுமில்லை. அராபிய இறைத்தூதர் தனக்குச் சாதகமானது என்று உணர்ந்த இதே விசயத்தை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பகுத்தறிவுவாதியான வால்டேர் ஒரு வாதமாக முன்வைக்கவில்லையா? ஆனால் வால்டேர் பிற்போக்குத் தனத்தைக் காப்பாற்றவே, இம்மாதிரியான ஒரு வாதத்தை முன் வைத்திருந்தார். அழுகிக் கொண்டிருந்த முடியரசுச் சமூகத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு உத்திரவாதம் என்ற அடிப்படையில் , ஒரு இறைவனைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமிருக்கிறது என வால்டேர் வாதிட்டார். முகம்மதுவின் காலத்தில் இது முன்வைக்கப்பட்ட ஒரு சமூகச் சூழலின் பின்னணியில் பார்த்தால் இந்த வாதம் முற்றிலும் புரட்சிகர நோக்கத்திற்காகப் பயன்பட்டிருந்தது. மனிதனின் சிந்தனை இயற்கை கடந்த ஒரு சக்தியின் மீதான நம்பிக்கையில் மூழ்கியிருக்கும் ஒரு சூழலில், ஒவ்வொரு முற்போக்கான கருத்திற்கும், மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமானால், அக்கருத்தை, அந்த நம்பிக்கையின் (இயற்கை கடந்த சக்தி) பெயரால்தான் முன்வைக்க வேண்டியிருந்தது. மேலும், இறைவன் ஒருவனே என்ற கருத்து முகம்மதுவால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. மாறாக, முந்திய அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்டிருந்த சமூகச் சூழலினால் தான் அக்கருத்து தோற்றம் பெற்றிருந்தது. அம்மாதிரியான ஒரு (சக்தி வாய்ந்த) கடவுள் இருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்ததுதான் முகம்மதுவின் வரலாற்றுப் பணியாக இருந்தது. நீங்கள் மக்களைக் கருத்து ரீதியில் வென்றெடுக்க வேண்டுமானால், இம்மாதிரியான ஒரு ஆதாரத்தை அவர்கள் முன் எடுத்து வைத்தால்தான் (ஒரு கருத்தின் மீது) அவர்களிடம் விசுவாசத்தை ஏற்படுத்த முடியும்.

இறைவன் குறித்த வால்டேரின் தேடலுக்கு வேதாந்தம்(Cynicism) தூண்டுதலாய் இருந்தது. ஆனால் முகம்மது விசயத்தில் அவ்வாறு ஏதுமில்லை. ஒரு லட்சியத்தின் மீதான பற்றார்வத்தின் தூண்டுதலால் ஒரு சராசரி மனிதன் (முகம்மது) முன்வைத்த ஒரு மேன்மையான முயற்சியே இது. அரபு நாட்டை இறைவன் மட்டுமே காப்பாற்ற முடியும் என்பதால், முகம்மது இறைவனைத் தேடி பாலைவனத்திற்குச் சென்று அங்கு நோன்பு, தியானம் ஆகியவற்றில் ஈடுபட்டார். இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூட தெய்வீக அருளைப் பெறுதல் என்ற கேடான தேடலுக்கு இந்தப் பிரபலமான நடைமுறைகள்தான் வழிமுறைகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான நடைமுறைகளுக்கு வழக்கமாக என்ன பலன் கிடைக்குமோ அதுதான் நபிகளுக்கும் கிடைத்தது. "அவர்தான் இறைவனின் தூதர் என்பதற்கான உருவெளித் தோற்றங்கள் அவரிடம் காணப்பட்டன. மர்ம ஒலிகள் அவருக்கு வாழ்த்துச் சொல்லின. கற்களும், மரங்களும் கூட இந்த இரகசியத்தை பேசிக் கொண்டன." முன்னர் குறிப்பிட்டுக் காட்டியுள்ள இந்த நடைமுறைகளை அளவுக்கு மீறி கைக்கொள்ளும்போதெல்லாம் மூளையில் ஏற்படும் கோளாறினால் இம்மாதிரியான அனுபவங்கள் விளைகின்றன. குறிப்பிட்ட சில மாறாத கருத்துக்களிலேயே– அது பகற்கனவோ அல்லது கற்பனையோ–

* அதே நூல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை லயித்துப் போயிருந்தால், ஏனைய உணர்ச்சிகளை விலக்கி வைக்கும் அளவிற்கு அதில் லயித்துப் போயிருந்தால் , அவை ஒரு தூலமான வடிவம் எடுப்பது போலத் தோன்றும். மெய்ஞ்ஞானிகளின் உளவியல் குறித்த அறிவியல் ஆய்வுகள் பின்வரும் உண்மையை எடுத்துக் காட்டியுள்ளன. குறிப்பிட்ட சில நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதால் மூளையில் ஏற்படும் ஒரு விளைவே "தெய்வீகத் தூண்டுதல்" அல்லது "மத அனுபவம்" என்பதாகும். இது குறிப்பிட்டதொரு நோக்கத்திற்காக நிகழ்த்தப்படும் அல்லது விபத்தாக நிகழும் நோய்க்கூறான மனநிலையாகும்.

முகம்மது நபிக்கு முன்னால் அவரைப் போன்றவர்கள் செய்திருந்த அல்லது அவருக்குப் பின்னால் வந்தவர்கள் செய்த அதே பணிகளைத்தான் இவரும் செய்திருந்தார். ஆனால், இவர் விசயத்தில் இவருக்குப் பெருமை சேர்க்கும் ஒரு உண்மை உண்டு. ஆன்மீக எழுச்சி அடைந்ததற்கு அடையாளமாக எடுத்துக் கொள்ளப்படும் உளநோய்க்கான அறிகுறிகளில் ஆழ்ந்து போகும் அளவிற்கு முகம்மது சாதாரண மனிதரல்ல. அவர் மிகவும் புத்திசாலி. தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ என அவர் அச்சப்பட்டார். அறிவுக்கூர்மை கொண்ட அவரது மனைவி இக்கட்டான அத்தருணத்தில் வந்து அவருக்கு உதவியிருக்காவிட்டால் அவர் தான் ஆற்ற வேண்டிய இலட்சியப் பணியைக் கைவிட்டிருக்கக் கூடும். வளம் கொழிக்கும் வணிகரான கதிஜா சாதாரண வாழ்க்கை நடைமுறைகளில் பக்குவம் அடைந்தவராக இருந்ததால் தனது கணவரிடம் தென்பட்ட மனக்கோளாறுகளின் ஆன்மீக மதிப்பை விரைவாகப் புரிந்து கொண்டார். அவர் கண்களுக்குத் தென்பட்ட ஞான தரிசனங்களுக்குக்(vision) காரணம் மனக் கோளாறு அல்ல; மாறாக, இறைவன் அனுப்பியிருந்த தேவ தூதர்களே என நபிகளிடம் அவர் மனைவி அறிவுறுத்தினார். அவர் நோய்க்கூறான மனநிலையில் இருந்ததைச் சாதகமாக எடுத்துக் கொண்ட அவர் மனைவி அவர் அறைக்கு ஒரு தேவ தூதர் வந்து அவரிடம் இறைவன் நற்செய்தியைச் சொல்லிச் சென்றதை அவர் கண்ணாரக் கண்டதாக எளிதாக நம்பச் செய்தார். அறியாமை, மூட நம்பிக்கை, முன்னெண்ணம் ஆகிய முக்கியப் பண்புகளின் காரணமாக மாயையில் உழன்று வரும் ஒருவரிடம் மட்டுமே இம்மாதிரியான நாடகத்தை அரங்கேற்ற முடியும். ஆனால், அனைத்து மதங்களும் இப்படித்தான் தோன்றியிருக்கின்றன. இசுலாம் மட்டுமே இதில் விதிவிலக்காக இருக்கும் என்று நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை. தெய்வீக ஒப்புதல் என்ற கண்டுபிடிப்பைத் தவிர , இதனிடம் வறட்டு இறையியல் கோட்பாடுகளும்,புலனுணர்வு கடந்த மாயாவாத ஊகங்களும் குறைந்த அளவிலும் வலிமையான அரசியல் உணர்ச்சிக் கூறுகள் , முற்போக்கான சமூகக் கோட்பாடுகள், பாராட்டத்தக்க தனி நபர் நடத்தை விதிகள் ஆகியன அதிக அளவிலும் இடம் பெற்றிருந்தன என்ற அளவில் இது மற்ற மதங்களிலிருந்து விதிவிலக்காக இருந்தது.

> "புலனுணர்வு கடந்த வெற்று மாயாவாதங்களில் அவர் ஈடுபட்டிருக்கவில்லை. தனி நபர் தூய்மை, மது அருந்தாமை, நோன்பு பிரார்த்தனை ஆகிய மதிப்புத் தரும் ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் தன் மக்களின் சமூகச் சூழலை முன்னுக்குத் தள்ளும் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணியில் அவர் தன்னை அர்ப்பணித்திருந்தார். மற்றெல்லாப் பணிகளைக் காட்டிலும், ஈகை, இரக்கம் ஆகிய பண்புகளுக்கே அவர் அதிக மரியாதை கொடுத்தார். மனிதர்களை நல்லொழுக்கத்தோடு வைத்திருக்கும் எந்தவொரு மத நம்பிக்கையின் மூலமாகவும் அவர்கள் மீட்சி பெறுவதை இவர் ஒப்புக் கொண்டார்."*

குர்–ஆன் ஒரு அறிவு ஜீவியால் உண்டாக்கப்பட்டதல்ல. ஆகவே, அதில் சில கரடுமுரடான கருத்துக்களும், மாயாவாத ஊகங்களும் இருக்கத்தான் செய்யும். குர்–ஆனின் இந்த வெளிப்படையான குறைபாடுகள் ஒரு மாபெரும் மதத்திற்கு ஊக்கம் தந்த அதன் நல்ல அம்சங்களைக் கூட மறைத்து விடுகின்றன. முகம்மதுவின் மதம் ஓரிறைக் கோட்பாட்டில் மிக உறுதியாக இருந்தது. இந்த வித்தியாசமான பண்புதான் இதற்கு மிக உன்னதமான மதம் என்ற தனித்துவத்தைப் பெற்றுத் தந்தது. தத்துவார்த்தப் பொருளில் சொல்வதானால், கடவுள் என்ற கருத்துதான் மதத்தின் அடிப்படையாக இருக்கிறது. அனைத்து மாயாவாதங்களிலிருந்தும் விடுதலை பெற வேண்டுமானால், சூன்யத்திலிருந்து தான் படைப்பு உருவானது என்ற முடிவை நோக்கிச் செல்வதைத் தவிர இக்கருத்திற்கு வேறு வழியில்லை. பண்டையத் தத்துவவாதிகளின் – கிரேக்கம் இந்தியா– பகுத்தறிவு வாதமானது அனைத்து மாயாவாதக் கருத்துகளையும் விலக்கி வைத்திருந்தது. ஆகவே, இந்தப் புராதனப் பகுத்தறிவுவாதப் பின்னணியில் தோற்றம் பெற்ற மதங்களால், கடவுள் என்ற அடிப்படைக் கருத்தை முற்றுமுழுதாக அறுதியிட்டு நிறுவிவிட முடியவில்லை. இதன் விளைவு இந்து மதம், யூத மதம், கிறித்துவ மதம் போன்ற அனைத்துப் பெரு மதங்களும் இறுதியாக ஏதேனும் ஒரு வடிவில் பல தெய்வ வழிபாட்டுக்கொள்கையைச் சென்றடைந்தன. இக்கோட்பாட்டின் தர்க்கநீட்சியானது பல தெய்வ வழிபாட்டுக் கொள்கையைக் கொண்ட மதம் என்ற ஒன்றையே ஒழிப்பதாக அமைந்து விட்டது. பல தெய்வக் கோட்பாடானது, கண்ணுக்குத் தெரியும் உலகை கடவுள் என்ற கருத்தோடு அடையாளப்படுத்துவதால், கடவுள் என்ற கருத்தே இங்கு அய்யத்திற்குள்ளாகிறது. இது படைப்பு என்ற கருத்தையே முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதால் , அதன் விளைவாகக் கடவுள் என்ற கருத்தும் விடைபெற வேண்டியதாயிற்று. காலங்காலமாக உலகம் யாருடைய உதவியும் இல்லாமல் இருந்துவரும்போது, அதற்கு ஒரு படைப்பாளியை வலிந்து பற்ற வேண்டிய அவசியமில்லாமல் போகிறது. படைப்பு என்ற செயல்பாடு பறிக்கப்பட்ட நிலையில் கடவுள் என்ற அடிப்படைக் கருத்து அவசியமற்றதாகி விடுகிறது.

தீர்க்க முடியாமல் இருந்த ஒரு பெரும் சிக்கலை முகம்மதுவின் மதம் தீர்த்து வைத்தது. சூன்யத்திலிருந்து படைப்பு உருவானது என்ற பகுத்தறிவுக்கு விரோதமான ஒரு கருத்தை மிக உறுதியாக வலியுறுத்தியதன் மூலம், இது புராதனப் பகுத்தறிவுவாதத்தின் அச்சுறுத்தலிலிருந்து கடவுள் என்ற கருத்தை விடுதலை செய்தது. கடவுள் தன் அனைத்துப் பெருமைகளோடும் இப்பொழுது கம்பீரமாக எழுந்து நிற்கிறார். இந்த ஒரு உலகத்தை மட்டுமல்ல, கணக்கில்லாமல் பல உலகங்களை அவரால் தொடர்ச்சியாக உருவாக்க முடியும் என்ற திறமை, அவரின் அனைத்து வல்லமைகளுக்கும் ஒரு அடையாளமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

---

* அதே நூல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வறட்டுத்தனம் கொண்டதாக, முதிர்ச்சி அற்றதாக இருந்த போதிலும், கடவுள் என்ற கருத்தை நிலைநாட்டியதற்கான பெருமை முகம்மது நபியையே சேரும். மதத்தை அதன் தூய்மையான வடிவில் நிறுவியவர் என்ற பெருமையைப் பெற்ற முறையில் அவர் பெயர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. ஏனெனில் , ஒரு மதம் என்ற முறையில் இசுலாமின் பகுத்தறிவு–விரோத அம்சம் தனிச் சிறப்பானது. அதனால் தான் இது போலி மதங்களுக்கே உரித்தான புலனுணர்வு கடந்த மாயாவாதக் கருதுகோள்கள், வறட்டு இறையியல் நுட்பங்கள், தத்துவார்த்தப் பாசாங்குத்தனங்கள் ஆகிய குறைபாடுகளைக் கொண்டிருந்த பிற மதங்கள் அனைத்தையும் மிக எளிதாக வெற்றி கண்டது. எப்படியிருந்தாலும், ஓரிறைக் கோட்பாடு என்பது ஒரு உயரிய கவிழ்ப்புக் கோட்பாடாகும். இது தன்னளவில் ஒரு உயரிய மத வடிவமாக இருந்த போதிலும் மதவழிப்பட்ட சிந்தனை முறையின் வேரையே இது தாக்கக்கூடியதாகும். கடவுளை உலகத்திற்கு மேலாகவும் அதற்கு அப்பாலும் வைத்ததன் மூலம், அவர் துணையில்லாமலேயே அனைத்துச் செயல்களையும் செய்வதற்கான ஒரு சாத்தியப்பாட்டிற்கு இது வழியமைத்துத் தந்தது. மிக உறுதியான ஓரிறைக் கோட்பாட்டைக் கொண்ட மதம் என்ற முறையில் இசுலாம், மத வழிப்பட்ட சிந்தனை முறையின் ஆதிக்கத்தில் இருந்த மனித வரலாற்றின் அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. இம்மதம் அதன் இயல்பு காரணமாக, பழமைப் பிடிப்பற்ற விளக்கங்களுக்கு வழியமைத்துத் தந்தது. அதன் இறுதி முடிவாக, மத வழிப்பட்ட சிந்தனை முறைக்கு இது முற்றுப் புள்ளி வைத்ததோடு, நவீனப்பகுத்தறிவுவாதத்திற்கு ஒரு அடித்தளமும் இட்டுத் தந்தது.

> "ஓரிறைக் கோட்பாட்டை ஒரு வலிமையான ஏரியோடு ஒப்பிடலாம். அது தன்னுள் அறிவியல் வெள்ளப்பெருக்கை அடக்கி வைத்திருந்தது. அணையை உடைத்துக் கொண்டு வெள்ளப்பெருக்கு திடீரென வெளிப்பட்டது. மாபெரும் ஓரிறைக் கோட்பாட்டு மதங்களின் வரிசையில் மூன்றாவதாகத் தோன்றிய இசுலாம், பொருள்முதல்வாதக் கோட்பாட்டிற்கு மிகச் சாதகமானதாகும். மற்ற இரண்டைக் காட்டிலும் இளமையான இந்த மதம், அரபு பண்பாட்டின் சிறப்பான சாதனைகளோடு தான் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக, முதன்முதலாக ஒரு சுதந்திரமான தத்துவார்த்த ஆன்மீகக் கருத்தை வளர்த்தியது. இந்த ஆன்மீகக் கருத்துதான், மத்திய காலங்களில், முக்கியமாக யூதர்கள் மீதும், அதன் மூலம் மறைமுகமாக மேற்குலகைச் சேர்ந்த கிறித்துவர்கள் மீதும் ஒரு வலிமையான செல்வாக்கைச் செலுத்தியிருந்தது."*

இசுலாம் ஒரு முழுமையானஓரிறைக்கோட்பாடாக இருந்ததால்தான் அதனால் இப்பங்களிப்பைச் செய்ய முடிந்தது. குர்–ஆனின் அடிப்படைக் கருத்து புரட்சிகரமான தாக்கமாக மலர்ச்சி பெறுவதை, அதன் (குர்–ஆனின்) பக்குவமற்ற முரட்டுத் தன்மை தடுத்துவிடவில்லை.

---

* எப்.ஏ. லேன்ஜி– " பொருள்முதல்வாதத்தின் வரலாறு" – தொகுதி –1, பக். 174


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகம்மது நபியின் இறுக்கமான ஓரிறைக்கோட்பாடானது, தான் மட்டுமே இறைத்தூதர் என்ற முகம்மதுவின் உரிமைக் கோரிக்கைக்கு முரண்பட்டு நின்றது. மோசஸ், யேசு, இன்னும் ஏனைய யூத இறைத்தூதர்களை இறைவனின் சீடர்களாகக் குர்–ஆன் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், முகம்மது நபியின் உரிமைக் கோரிக்கையை அவரின் நண்பர்களே கூட இரகசியமாக அய்யப்பட்டனர். தொடக்கத்தில் வெளிப்படையாக இது குறித்துக் கேள்வி எழுப்பப் படவில்லையென்ற போதிலும், இந்த அய்யப்பாடு தொடர்ந்து இருந்துதான் வந்திருக்கிறது. நிறுவனரின் தெய்வத்தன்மை இசுலாமின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கவில்லை. இந்த வித்தியாசமான அம்சத்திற்குக் காரணம், அதன் இறுக்கமான ஓரிறைக் கோட்பாடே ஆகும். முகம்மது இறந்தவுடன் அவரின் சீடர்கள் இந்த முக்கியமான பிரச்னையின் மீது பிளவுபட்டு நின்றார்கள். சிரியாவைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்பில் இராணுவம் இருந்தபோது, முகம்மது நபியின் இறப்புச் செய்தி அந்தப் படைமுகாமை எட்டியது. உமர் என்ற தீவிரமான சீடர், இறைத்தூதர் மாண்டார் என்ற செய்தியை நம்ப மறுத்து அந்தச் செய்தியைக் கொண்டு வந்த தூதர் ஒரு நாத்திகராக இருப்பார் என்ற அய்யப்பாட்டில் அவர் தலையைத் துண்டித்து விடுவதாக அச்சுறுத்தினார். ஆனால், அனுபவம் வாய்ந்த அபுபக்கர் பின்வரும் அறிவுரைகளை அந்த முரட்டு இளைஞரிடம் நயமாக எடுத்துச் சொல்லி அவரை அமைதிப்படுத்தினார்:" நீ வழிபடுவது முகம்மதுவையா அல்லது முகம்மதுவின் கடவுளையா ? முகம்மதுவின் கடவுள் என்றென்றும் வாழ்ந்து வருவார். ஆனால், இறைவனின் சீடர் நம்மைப் போலவே ஒரு சாதாரண மனிதர் தான். அவரே முன்னுரைத்தபடி சாதாரண மனிதனுக்கு ஏற்படும் சாவு என்னும் பொது விதியை அவரும் அனுபவித்தார்."

முகம்மதுவின் மறைவிற்குப்பின், உடனடியாக அவர் வாரிசாக வந்தவர் அவரை இறைத்தூதர் என்று அழைக்காமல், இறைவனின் சீடர் (Apostle) என்றே அழைத்தார். இறைவனின் சீடர் என்ற குறைவான தகுதியைத் தந்ததன் மூலம் நபிகளின் சீடர்கள் அவரை ஏனைய மத ஆசிரியர்கள், மதச்சட்டங்களை உருவாக்கியவர்களின் நிலைக்கு இறக்கி விட்டனர். இறைத்தூதர் என்ற தெய்வீகத் தன்மையை மறுத்ததானது இசுலாமை ஒரு தூய்மையான ஓரிறைக் கோட்பாட்டு மதமாக மாற்றிவிட்டது. இறைத்தூதருக்கு தெய்வீகத் தன்மையை ஒரு முறை வழங்கிவிட்டால் உன்னதமான கடவுளுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்படும் தகுதியை அவர் எடுத்துக் கொள்வார். இறைவனின் அய்க்கியம் அல்லது மூல ஆதாரத்தின் முழுமைத்தன்மை ஆகிய இரண்டையும் தர்க்கரீதியாக இனிமேலும் (சமமாக) கொண்டு செல்லமுடியாது. (அதாவது, இந்த இரண்டில் ஏதாவது ஒரு கருத்தைக் கைவிட வேண்டும் என இங்கு ஆசிரியர் சொல்ல வருகிறார்– மொர்) பொய்யான இறையியல் சூழ்ச்சிகளின் மூலம் இந்த முரண்பாட்டை இணக்கப்படுத்த முயற்சிக்கலாம். வறட்டு இறையியல் கோட்பாட்டிலோ அல்லது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் மாயாவாதத்திலோ விசுவாசத்தின் மெய்யான எளிமை காணாமல் போய்விடும். இசுலாம் தன் இறையியல் கோட்பாடுகளைக் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தாமல் இருந்திருந்தால், இது தான் ஆற்றியுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றுப் பங்களிப்பிற்கு உரிமை கோரமுடியாமல் போயிருக்கும். இறைத்தூதரின் தெய்வீக அம்சத்தை இல்லாமல் செய்திருந்தாலோ அல்லது தான் இறைத் தூதர் என்ற அவரின் உரிமைக் கோரிக்கையைப் பொதுவாக யாரும் ஒப்புக் கொள்ளாமல் இருந்திருந்தாலோ, அவர் எழுதிய புனிதநூல் முழுமையானது பிழையே இல்லாதது என்ற அதிகாரத்திற்கு உரிமை கோரியிருக்க முடியாது. ஆகவே, இசுலாத்தில் விசுவாசிகளின் சிந்தனைக்கு ஓரளவு வாய்ப்பளிக்கப்படுகிறது. நிலையற்ற மனிதனின் போதனை நிலை பேறுடைய உண்மை என்னும் மேன்மையைக் கோர முடியாது. புனிதநூலின் சட்ட நெறிகள் மாற்ற முடியாததாகவும் இருக்க முடியாது.

பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை இசுலாமிற்கென ஒரு சீரான கோட்பாட்டு வடிவம் இருக்கவில்லை. இசுலாமியர் ஒரேகடவுள் மீது நம்பிக்கை கொண்டவராக இருந்ததால் நடைமுறையில் அவரது ஆன்மீக வாழ்க்கைக்கு வரம்பற்ற வாய்ப்புகள் கிடைத்து வந்தன. புதிய மத நம்பிக்கையின் நெகிழ்ச்சியை அரபுச் சிந்தனையாளர்கள் சுதந்திரமாகவும், முழுமையாகவும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையும் வரலாறு நமக்குக் காட்டுகிறது. உன்னதக் கடவுள் என்ற மேன்மையான கருத்தைக் கிறித்துவம் கொச்சைப்படுத்தி விட்டதாக முசுலீம் இறையியல்வாதிகள் கருதியதால், அதன் மும்மைக் (Trinity) கோட்பாட்டை மறுதலிப்பதற்காக மதம் குறித்த அடிப்படைக் கருத்தை இதுவரை மனித குலம் எண்ணிப் பார்த்திராத ஒரு மிக அருவமான வடிவத்திற்கு வளர்த்திச் சென்றனர்.* "முகம்மதுவின் ஓரிறைக் கோட்பாடு மிக முழு நிறைவானதாகவும் ஒப்பீட்டளவில், மாயாவாதக் கலப்படங்களிலிருந்து விடுதலை பெற்றதாகவும் இருந்ததால்தான்"** இறையியல் ஆய்வு முறையில் ஈடிணையற்ற உச்சத்தை எட்ட இதனால் முடிந்தது. இசுலாமின் நிறுவனர் முன்வைத்த செப்பமற்ற மத அடிப்படைக் கோட்பாடுகளில் மாபெரும் வளர்ச்சியைச் சாத்தியமாக்கக் கூடிய செழுமையான கூறுகள் இடம் பெற்றிருந்ததை இதே வரலாற்றாசிரியர் சான்றோடு முன்வைத்திருக்கிறார். மிக உறுதியான ஓரிறைக் கோட்பாட்டின் இயல்பு காரணமாக, அதன் வளர்ச்சி, மதவழிப்பட்ட சிந்தனைகளின் குறுகிய எல்லைகளைக் கடந்து சென்று ஆன்மீக மலர்ச்சியில் முடிந்தது. அதனால் மத நம்பிக்கையின் காலம் முடிவுக்கு வந்தது.

> "அராபியர்கள், கிரேக்கத் தத்துவத்துடன் தொடர்பு கொள்வதற்கு முன்பே, இசுலாமில் கணக்கற்ற உட்பிரிவுகளும், இறையியல் சிந்தனைப் பள்ளிகளும் இருந்து வந்தன.இவற்றில் சில எந்தவொரு தத்துவார்த்த ஊகமும் இதுவரை முன் செல்லாத திசை வழியில் கடவுள் குறித்து மிக அருவமான கருத்துக்களைக் கொண்டிருந்தன. வேறு சில, தங்களால் புரிந்து கொள்ளமுடிந்ததைத் தவிர, கண் முன்னால் நிகழ்த்திக்காட்டப்பட்டதைத் தவிர வேறெதையும் நம்ப மறுத்து வந்தன. .....அப்பாசிதீஸின் பாதுகாப்பின் கீழ் பாஸ்ரா என்ற இடத்தில் இருந்த ஒரு உயர்நிலைப்பள்ளியில் , ஒரு பகுத்தறிவுவாதச்

*ரேனன் – " அவ்ரோஸிஸம், அவ்ரோஸிஸமும்" பக். 76

**எப்.ஏ. லேன்ஜி– "பொருள்முதல்வாதத்தின் வரலாறு" தொகுதி 1, பக்.184



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனைப்பள்ளி தோன்றியிருந்தது. அது மதத்தையும், நம்பிக்கையையும் இணைக்கப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தது".*

தன் வரலாற்றின் முதல் அய்ந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளின் போது இசுலாம் உருவாக்கியிருந்த அறிஞர்கள், விண்ணுலக உயிர்களைக் காட்டிலும் விண்ணுலக் கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் குறித்தே அதிகமாகச் சிந்தித்து வந்தனர். இவர்கள் குர்–ஆனை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மதப்புனிதத்தைக் கண்டனம் செய்த (profane) ** நூல்களை படித்ததன் மூலம் மாபெரும் ஆன்மீக மதிப்பீடுகளை முன்வைத்து வந்தார்கள். இந்தப் புரட்சிகரச் சிந்தனையாளர்கள் பகுத்தறிவின் பலிபீடத்தில் சற்றும் இரக்கமில்லாமல் (மத) விசுவாசத்தைக் காவு தந்து விட்டார்கள். பதினொன்றாம் நூற்றாண்டு வரை பாக்தாத், கெய்ரோ அல்லது கொர்டோவா ஆகிய இடங்களில் ஆட்சி செலுத்தி வந்த எண்ணற்ற "விசுவாசப்படையின் தளபதிகள்" தெய்வீக அறிவைக்காட்டிலும், மனித அறிவிற்கே பெரும் முக்கியத்துவம் தந்து வந்தார்கள். பொக்கராவின் சுதந்திரப் பேரரசானது மதகுருமார்களைக் காட்டிலும், கவிஞர்களுக்கே முன்னுரிமை தந்தது. தெய்வீக மருத்துவர்களைக் காட்டிலும், இயற்கை மருத்துவர்களுக்கே முன்னுரிமை தந்து வந்தது. மதப்பிரச்சாரத்தைக் காட்டிலும், அறிவியல் ஆய்விற்கே ஊக்கம் தந்து வந்தது.

இசுலாமின் வெற்றியினால் உண்டான சமூக–அரசியல் சூழ்நிலைகள் மட்டுமல்ல, முகம்மதுவின் மதத்தின் அடிப்படைக் கோட்பாடும் இணைந்து தான் இம்மாதிரியான ஒரு அறிவு வளர்ச்சிக்கு வழியமைத்துத் தந்தன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதைப் புறக்கணித்து விட்டு, குர்–ஆனின் புதுமையைக் காணும் அறிவார்த்தையோ அல்லது இசுலாம் நம்பிக்கையின் புராதனப் பண்பையோ மனதில் கொண்டு அதன் வரலாற்றுப் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. ❐

*அதே நூல் பக். 177

** profane :– மதத்தின் மீதும், கடவுள் மீதும் ஏற்றிச் சொல்லப்பட்ட புனிதத்தை மறுப்பது – எதிர்ப்பது – ஏளனம் செய்வது – அவமதிப்பது ஆகிய செயல்களை profane என்று குறிப்பிடுவர். சுருக்கமாக இதை மத – எதிர்ப்பு என்று குறிப்பிடலாம். (மொர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசுலாமியத் தத்துவம்

அய்ந்து நூற்றாண்டுகள் வரை நீடித்து வந்த அராபியர்களின் கல்வி வளர் காலமும், அய்ரோப்பிய வரலாற்றில் இடம் பெற்றிருந்த இருண்ட காலமும் ஒரே காலகட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களாக இருந்தன. இதே காலகட்டத்தில் தான் பௌத்தத்தைத் தூக்கியெறிந்த அல்லது அதனை நச்சுப்படுத்திய வெற்றிக்களிப்பில் மிதந்து கொண்டிருந்த பார்ப்பனியப் பிற்போக்குத்தனத்தின் காலடியில் இந்தியா வீழ்ந்து கிடந்தது. பௌத்தப்புரட்சியைத் தோற்கடித்த அதன் கேடுகெட்ட வெற்றியின் காரணமாக இறுதியாக இந்தியா மிக எளிதாக முசுலீம் படையெடுப்பாளர்களுக்குப் பலியாகிப்போனது.

அப்பாசிரிஸ், பேத்திமைட்ஸ், ஒயிநேடிஸ் போன்ற ஆட்சியாளர்களின் அறிவொளிக்கால ஆட்சியின் போது ஆசியா, ஆப்பிரிக்கா, ஸ்பெயின் ஆகிய பகுதிகளில் கல்வியும், பண்பாடும் செழுமையாக வளர்ச்சி பெற்றிருந்தன. சாமர்கண்ட், பொக்கரா ஆகிய பகுதிகளிலிருந்து பெஸ், கொர்டோலா பகுதிகள் வரை எண்ணற்ற அறிஞர்கள் வானவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், மருத்துவம், இசை ஆகிய துறைகளைக் கற்றும், கற்பித்தும் வந்தனர். கிரேக்கத் தத்துவம் என்ற விலைமதிக்க முடியாத கருவூலத்தையும் அதன் அறிவுச் செல்வத்தையும், கிறித்துவத் திருச்சபையின் சகிப்புத் தன்மையற்ற பண்பும், அதன் மூடநம்பிக்கையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டன. அராபியர்கள் மட்டும் இல்லாமல் போயிருந்தால் அச்செல்வம் நமக்கு மீளமுடியாத இழப்பாகவே இருந்திருக்கும். இம்மாதிரியாள ஒரு இழப்பு ஏற்பட்டிருந்தால் அதனால் ஏற்பட்டிருக்கும் தீவிரமான விளைவுகளை நினைத்துக்கூடப் பார்த்திருக்கமுடியாது.

டாம்பீகமான பக்தியும், பாசாங்குத்தனமான புனிதத்துவமும் தந்த தூண்டுதலினால் கிறித்துவர்கள் பண்டைய அறிவியலை தெய்வ – அவமதிப்பானது (profane) என வெறுத்து ஒதுக்கியிருந்தார்கள். வீண் தற்பெருமை கொண்ட இந்த அறியாமையின் விளைவாக, அய்ரோப்பிய மக்கள் ஆழம் காணமுடியாத மத்திய கால இருளில் மூழ்கியிருந்தார்கள். பண்டைய கிரேக்க ஞானிகளால் தொடங்கி வைக்கப்பட்டிருந்த அறிவு என்ற தெய்வீக ஒளியானது மகிழ்ச்சி தரும் வகையில் மீண்டும் மறுபிறவி எடுத்து அறியாமை, மூட நம்பிக்கை, தப்பெண்ணங்கள் சகிப்பின்மை ஆகியவற்றின் வெறுப்பூட்டும் இருளை விரட்டியடித்ததோடு அய்ரோப்பிய மக்களுக்குப் பொருளாதாரச் செழுமை, அறிவு முன்னேற்றம், ஆன்மீக விடுதலை ஆகியவற்றிற்கு வழியும் காட்டியது. அராபியச் சிந்தனையாளர்கள் அறிவியலாளர்கள் வாயிலாகத்தான் கிரேக்க அறிவின் வளமான மரபுச் செல்வங்கள் நவீனப் பகுத்தறிவுவாதத்தின் முன்னோடிகளை வந்து சேர்ந்தன. முன்னோடியான அறிவியல் ஆய்வாளரான ரோஜர் பேக்கன் அராபியர்களின் சீடராவார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஹம்போல்ட்டின்** கருத்துப்படி அராபியர்கள் " பௌதீக அறிவியலின்முறையான நிறுவனர்களாகக் கருதப்படுகிறார்கள். நாம் இப்போது அச்சொல்லிற்கு பழக்கத்தில் தந்து வரும் முக்கியத்துவம் என்ற பொருளில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது".* சோதனை, அளவீடு ஆகிய பெரும் கருவிகளின் துணையோடு இவர்கள் முன்னேற்றம் என்ற பாதையைக் கண்டறிந்தார்கள். அதன் மூலம், கிரேக்கர்களின் அறிவியல் வெற்றிகளையும், நவீன அறிவியல் வெற்றிகளையும் இணைத்துப் பார்க்கும் ஒரு நிலைக்குத் தங்களை உயர்த்திக் கொண்டார்கள்.

**அல்கந்தி, அல்ஹசன், அல் பாரபி, அவிசினா, அபுபக்கர், அவம்பேசி அல்பீட்ரகையஸ்** போன்ற பெயர்கள் ( அய்ரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள வரலாற்றுப் புத்தகங்களில் இந்த அராபியப்பெயர்கள் அடிக்கடி காணப்படுகின்றன) மனிதகுலப் பண்பாட்டின் பக்கங்களில் என்றும் நினைவில் நிற்பவை. அரிஸ்டாட்டிலின் நுண்ணறிவை உள்வாங்கிக் கொண்டு, நவீனப் பண்பாட்டின் முன்னோடியாய் விளங்கிய மாபெரும் மனிதனான **அவ்ரோஸ்ஸின்** புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகும். இறையியலின் குருட்டுப் பிடிவாதம் ஏற்படுத்தியிருந்த செயலை முடக்கும் பாதிப்பிலிருந்தும், மலட்டுத்தனமான மயிர்பிளக்கும் வாதங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்ள அய்ரோப்பிய மனித குலம் நடத்தி வந்த போராட்டத்திற்கு இவர் மதிப்பிட முடியாத தூண்டுவிசையாக இருந்திருக்கிறார். அண்டாலூசியா சுல்தானின் ஆதரவின் கீழ் பன்னிரெண்டாம் நூற்றாண்டின் முதல் பாதியின்போது வளமாக வாழ்ந்து வந்த இந்த மாபெரும் அரபுப் பகுத்தறிவுவாதியின் வரலாறு படைக்கும் பங்களிப்பு குறித்து **ரோஜர்பேக்கன்** நாநயத்தோடு வர்ணித்துள்ள வாசகம் பின்வருமாறு : "அவ்ரோஸ்ஸின் மூலமாக இயற்கை விளக்கப்படுகிறது."

கிறித்துவத் தேவாலயத்தின் அதிகாரத்திற்கு எதிராகவும் , வறட்டு இறையியலின் ஆதிக்கத்திற்கு எதிராகவும் எழுந்த ஆன்மீகக் கலகம் என்ற போர்க்கொடி, பதிமூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளின் போது உயர்த்திப் பிடிக்கப்பட்டிருந்தது. பண்டைய கிரேக்கத்தின் மாபெரும் தத்துவவாதிகளின் அறிவியல் போதனைகளிலிருந்துதான் பகுத்தறிவுவாதக் கலகக்காரர்கள் தங்களுக்கான ஊக்கத்தைப் பெற்றிருந்தார்கள். அராபிய அறிஞர்கள் மூலமாகக் குறிப்பாக அவ்ரோஸின் மூலமாகத்தான் அவர்கள் இந்த ஊக்கத்தைப் பெற்றிருந்தார்கள்.

சமயப்பற்றாளனான **ஜஸ்டினியனின்** மதவெறியானது ஆறாம் நூற்றாண்டின் தொடக்க காலங்களின்போது கிறித்துவ மூட நம்பிக்கைகளின் புனிதஉலகின்மீது படிந்திருந்த பிறசமயங்களின் (pagan)** மிச்சமீதி அறிவுத்தாக்கங்களைக் கழுவி அதனை தூய்மைப்படுத்தியிருந்தது. கடைசி கிரேக்க அறிஞர்கள் பண்டைய கல்வி நிலையப் பதவிகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். ரோமப் பேரரசிலிருந்து புலம் பெயர்ந்த இவர்கள் பாரசீகத்தில்

* அலெக்சாண்டர் வோன் ஹம்போல்ட் – காஸ்மாஸ் – தொகுதி II

** கிறித்துவத்திற்கு முன்பு இருந்துவந்த சிறு சிறு சமயப்பிரிவுகள் (மொர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடைக்கலம் புகுந்தனர். ஆனால், அங்கும் கூட சகிப்புத் தன்மையற்ற புரோகிதமானது மத – எதிர்ப்பு (profane) கல்விக்கு எதிர்ப்புக் காட்டி வந்தது. கைவிடப்பட்ட நிலையிலிருந்த இந்த ஏதென்ஸ் பண்பாட்டு அறிவியலானது இறுதியாகப் பாக்தாத்தைச் சேர்ந்த அப்பாசிதீஸ் கலீபாக்களின் அமைச்சரவையில் ஒரு ஆதரவான புகலிடத்தைக் கண்டு கொண்டது. இந்த அந்நிய நாத்திகர்களின் அறிவுக் கூர்மையானது கலீபாக்களை ஆழமாகப் பாதித்திருந்தது. குர்–ஆனா அல்லது சாவா என்ற தேர்வை (choice) கலீபாக்கள் இவர்கள் முன்வைக்கவில்லை. மாறாக, மத விசுவாசத்தைக் கேலி செய்தும் அனைத்து மதங்களை ஏளனமாகப் பார்த்தும் வந்த பண்டைய கல்வி வளர்ச்சிக் காலத்தின் அனைத்து ஆதரவாளர்களும் கலீபாக்களின் தாராளவாத விருந்தோம்பலை ஏற்றுக் கொள்ளும்படி வரவேற்கப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்டிருந்த கிரேக்க அறிஞர்களை கலீபாக்கள் தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண்டனர். அத்தோடு, பண்டைய கிரேக்க ஞானிகளின் படைப்புகளைத் தேடித் திரட்டி வருமாறு அறிவுறுத்தி ரோமப் பேரரசின் பல்வேறு இடங்களுக்கும் தகுதியான நபர்களை அனுப்பி வைத்தனர். அரிஸ்டாட்டில், ஹிப்பார்ஹஸ், ஹிப்போகிரேட்ஸ், கேலன், இன்னும் ஏனைய அறிவியலாளர்க்ளின் மதிப்பு வாய்ந்த படைப்புகள் அரேபிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன. இந்த அறிஞர்களின் சமய–மறுப்பு (irreligious) போதனைகளை முகலீம் உலகம் முழுக்கவும் பிரச்சாரம் செய்ய அனைத்து ஊக்கங்களையும் தந்தனர். அரசின் செலவில் நிர்வகிக்கப்பட்டு வந்த பள்ளிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு "மேட்டுக்குடி சிறுவர்கள் முதல் சராசரிச் சிறுவர்கள் வரை" அறிவியல் அறிவு கற்றுத் தரப்பட்டது. ஏழை மாணவர்களுக்கு கல்வி இலவசமாகக் கற்றுத் தரப்பட்டது. ஆசிரியர்களுக்குக் கை நிறைய ஊதியம் தரப்பட்டது. இவர்களின் பணிக்கு உயரிய மரியாதை கிட்டி வந்தது. அறிவாளிகள் பற்றி கலீபா அல்மேனஸ் சொல்லியிருந்த கருத்துக்களை, அரபு வரலாற்றாசிரியரான அபுல்பேரானகயஸ் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்:

> "இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இவர்களே. அவரின் சிறந்த, மிகப்பயனுள்ள ஊழியர்களும் இவர்களே. இவர்கள் பகுத்தறிவு நுட்பங்களை வளர்த்துக் கொள்வதற்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அறிவின் ஆசிரியர்களான இவர்கள்தான் உண்மையான வழிகாட்டிகள். உலகை நிர்வகிப்பவர்களும் இவர்களே. இவர்களின் உதவி இல்லையென்றால், மீண்டும் உலகம் அறியாமையிலும், காட்டுமிராண்டித்தனத்திலும் தான் மூழ்கியிருந்திருக்கும்"

இறைத் தூதரின் வாரிசுகள் அறிவாளிகளை மிக உயர்வாக மதித்து வந்தனர் என்ற விசயத்தை அறிந்து கொண்டாலே போதும். இசுலாமின் குருட்டு நம்பிக்கை குறித்தும் மத வெறிகுறித்தும் தற்போது நிலவி வரும் கருத்துக்கள் அதன் அனைத்து வரலாற்று நம்பகத் தன்மையையும் இழந்துவிடும். அந்த அறிவாளிகளில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருசிலரிடம் எந்த மத உணர்வும் சிறிதளவு கூட இல்லாமலிருந்தது. மதநம்பிக்கைக்கு முரணான (heretical) கருத்துக்களையே அவர்கள் கொண்டிருந்தனர். மனிதனின் பகுத்தறிவை உண்மையின் ஒரே அடையாளமாக, உறுதிப்படுத்துவதே அவர்கள் போதனையின் முக்கிய மையமாக இருந்தது. ஒரு மதக்குழுவிற்கு தலைவராக இருந்தும் "பகுத்தறிவின் செயல்திறத்தை வளர்த்துக்கொள்ள" ஊக்கம் தந்த கலீபா அல்மேனனைப் போன்று வேறு உதாரணங்கள் வரலாற்றில் காணக்கிடைக்காது. ஏனெனில் பகுத்தறிவும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் ஒத்துப் போகாத விசயங்களாகும். அப்பாசிதீஸ் கலீபாக்களில் அல்மேனன் வழியும் மிகச்சிறப்பான ஒரு வழியாக இருந்தபோதிலும் இக்கலீபாக்கள் அறிவியல்அறிவைப் பரப்ப ஊக்கம் தந்தது மட்டுமின்றி அவர்களே இதில் பங்கெடுத்தும் வந்தனர். அறிவுத் தெளிவு கொண்ட இவர்கள் இந்த விசயத்தில் விதிவிலக்கானவர்களாக இருக்கவில்லை.

அரசியல் அதிகாரம் பொருளாதார வளர்ச்சி ஆகிய விசயங்களில் மட்டுமல்ல, அறிவைப் பரப்புவதிலும் அதற்கு ஆதரவு கொடுப்பதிலும் கூட கலீபாக்களுக்குப் போட்டியாக ஆப்பிரிக்கா பேதினமத்துகளும் ஸ்பெயினின் ஓபிரேட்ஸ்களும் இருந்து வந்தார்கள். கெய்ரோநூலகத்தில் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் இடம் பெற்றிருந்தன. கோர்டாவா நூலகமோ இதைவிடப் பலமடங்கு புத்தகங்களைக் கொண்டிருந்த பெருமையைப் பெற்றிருந்தது. புகழ்பெற்ற அலெக்சாண்டிரியா நூலகத்தை அழித்தது போன்ற செயல்களை வைத்து இசுலாம் வளர்ச்சியை ஒரு காட்டுமிராண்டித்தனமான மத வெறியின் திடீர் எழுச்சியாக வர்ணிக்கும் ஒரு அருவெறுப்பான சித்திரத்தை மேற்சொன்ன உண்மைகள் பொய்யாக்குகின்றன. மேன்மையான அறிவாளிகளைக் கண்டு பிடிப்பதிலும் அவர்களுக்கு ஆதரவு தருவதிலும் மகிழ்ச்சி கண்டு வந்தவர்களான அவர்கள் எந்தவித உணர்ச்சியுமின்றி அலெக்சாண்டிரியா நூலகத்திற்குத் தீவைத்திருப்பார்கள் என்ற செய்தியை நம்பும் ஒருவர் ஒன்று மத விசுவாசம் கொண்டவராக இருக்க வேண்டும் அல்லது எந்தச் செய்தியையும் ஆதாரமில்லாமல் எளிதில் நம்பி விடும் மனப்பண்பு கொண்டவராக இருக்க வேண்டும். மிக மதிப்பு வாய்ந்த மரபுச் செல்வங்களைப் பாதுகாத்து வந்ததற்காக மனித குலத்தின் நன்றியை உரிமையாக்கிக் கொண்ட அவர்கள், அந்தக் கருவூலத்தை (நூலகம்) அழித்ததன் மூலம்தான் தங்கள்பணியைத் தொடங்கியிருக்க முடியும் என்பதை எப்படித்தான் நம்புவது? வரலாறு குறித்த விருப்பு வெறுப்பற்ற அறிவியல் ஆய்வானது கட்டுக்கதைகளைத் தூள் செய்யும்போதும், கெடுநோக்கான கதைகளைப் பொய்யாக்கும் போதும், இசுலாம் எழுச்சியானது ஒரு தெய்வக் குற்றமாகத் தென்படாது; மாறாக, மனித குலத்திற்குக் கிடைத்த ஒருவரமாகத் தென்படும்.

பதினொன்றாம், பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட புத்தகங்கள், அலெக்சாண்டிரியா நூலகம் எரியூட்டப்பட்ட அதிர்ச்சிக் கதையை கடும் சீற்றத்தோடு விவரித்துள்ளன. ஆனால், அராபியப் படையெடுப்பாளர்கள் அந்நாட்டைக் கைப்பற்றிய உடனே, அது குறித்து எழுதியுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ்டிசியஸ், எல்மசின் போன்ற கிறித்துவ வரலாற்றாசிரியர்கள், இந்தக் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கை பற்றி முக்கியமாக மௌனம் சாதித்துள்ளனர். இதில் முன்னவர் சமயமுதல்வராவார். அலெக்சாண்டிரியாவின் தலைமை மதக்குரு ஆவார். இவர் கிறித்துவத்தின் எதிரிகள் விசயத்தில் ஆதரவாக இருந்திருப்பார் என அய்யப்பட முடியாது. வழக்கமாக இவ்விசயத்தில் **உமர் கலீபா**வின் ஒரு உத்திரவைச் சான்றாகக் காட்டி இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலைச் செய்தது அவரது தளபதியே எனச் சொல்லி வருகிறார்கள். கிறித்துவத் திருச்சபைக்குழுக்களின் வரலாற்றுப் பதிவுகளை அழிப்பதைக் காட்டிலும், மிக எளிதான செயல் (கலீபாவின்) அந்த உத்திரவைப் பதிவு செய்யாமல் விடுவிடுவதுதான். ஏனெனில், கிறித்துவக் குழுக்கள் தங்கள் பதிவுகளை மறைத்துக் கொள்வதற்கு எண்ணற்ற வாய்ப்புகள் இருந்திருந்தன. இது தொடர்பான அனைத்துச் சான்றுகளையும் விடா முயற்சியோடு ஆய்வு செய்த **ஜிப்பன்** அவர்கள் இந்நிகழ்ச்சி குறித்துப் பின்வரும் முடிவுக்கு வந்தடைந்தார் :

> "உமரின் இந்தக் கடுமையான கட்டளை, நேர்மையானவைதீகமான முகம்மதியவாதிகளின் உணர்வுகளுக்கு முரணானதாகும்.போரின் மூலம் கிடைத்த யூத,கிறித்துவப் புத்தகங்களைத் தீக்கிரையாகி விடக்கூடாது என அவர்கள் அழுத்தமாக அறிவித்திருந்தார்கள். மத- எதிர்ப்புச் சிந்தனை கொண்டிருந்த (profane) அறிவியலாளர்கள் வரலாற்றாசிரியர்கள் அல்லது கவிஞர்கள், மருத்துவர்கள் அல்லது தத்துவவாதிகளின் படைப்புகளில் நம்பிக்கை கொண்டவர்கள் சட்டரீதியாகவே அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவித்திருந்தார்கள்".*

சார்பற்றத் திறனாய்வு நோக்கோடு வரலாற்றை எழுதத் தொடங்கினால், அலெக்சாண்டிரியா நூலகம் அழிக்கப்பட்டது குறித்த கதை பொய்யெனத் தெரிய வரும் அல்லது அது மாபெரும் அய்யத்திற்கு உட்பட நேரிடும். இது எப்படியிருந்த போதிலும், அராபியர்கள் படையெடுத்த தருணத்தில், கிரேக்க ஞானிகளின் மதிப்பு வாய்ந்த படைப்புக்களின் கருவூலம் என்று சொல்லக்கூடிய தகுதியில், அலெக்சாண்டிரியா நூலகம் இருக்கவில்லை. படையெடுப்பிற்கு வெகு காலம் முன்னமே, அலெக்சாண்டிரிய நூலகம் அறிவியல் அறிவு, தத்துவ ஞானத்திற்குப் பதிலாக, கிறித்துவ மதவெறியையே பாதுகாத்து வந்தது. ஆட்சியாளர்களின் கருத்துகளுக்கு ஏற்ப, நூலகத்தின் உள்ளடக்கப் பண்பு மாறுபட்டே இருந்திருக்க வேண்டும். கிறித்துவத்தின் பொறுமையற்ற பண்பினால் பண்டையக் கல்வி நிலையப் பகுதிகளிலிருந்து விரட்டப்பட்டிருந்த மத-நம்பிக்கையற்ற (pagan) **அறிஞர்கள் கூட்டம் அங்கிருந்து வெளியேறியபோது தாங்கள் உயிரெனப் போற்றி வந்த அந்தக் கருத்துக் கருவூலங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

* ரோமப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும்

** pagan :- பல தெய்வ வழிபாட்டாளர்களைக் குறிப்பிடவும் இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. அதே போல, பெரும் நிறுவனமயமான யூத மதம், கிறித்துவ மதம், இசுலாமிய மதம் ஆகிய மதங்களைச் சாராத பிற மதப்பிரிவினரைக் குறிப்பிடவும் இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. (மொர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உமரின் உத்திரவுப்படி தீ வைக்கப்பட்டிருந்தால், அந்தத் தீ எந்தப் பயனுமற்ற வறட்டு இறையியல் விவாதப் புத்தகங்களையே எரித்திருக்கும்.இப்புத்தகங்கள் மனித குலத்திற்குச் செய்த நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே மிக அதிகம். இசுலாமின் நெருப்பு, பயனற்ற முட்டாள்தனமான இறையியல் விவாதப் படைப்புகளையே எரித்திருக்க வேண்டும். ஏனெனில், தீ வைப்பிற்கு முன்னமே அலெக்சாண்டிரியா நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்த மதிப்பு வாய்ந்த பண்டைய அறிவுக் கருவூலங்கள், சுதந்திரச் சிந்தனை கொண்டிருந்த கலீபாக்களால், பாராட்டத்தக்க ஆர்வத்தோடு, ஒன்று திரட்டிப் பாதுகாத்து வளப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

தாலமிகளின் பயன்மதிப்பு வாய்ந்த படைப்புக்களைப் பைசாண்டியக் காட்டுமிராண்டித்தனம் நாசம் செய்திருக்கிறது. ஹைபாரியாவில் நடந்து வந்த புகழ் பெற்ற திருவிழாவில் அறிவுத்தேவதையை இழிவு செய்த புனித சிரில் என்பவன்தான் இந்தப்பணியை (நூலகத்திற்கு எரியூட்டியது) செய்திருக்க வேண்டும். அய்ந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இது நடந்து முடிந்து விட்டது. மத–நம்பிக்கையற்ற (pagan) ஒரு இளம்பெண்ணின் தத்துவார்த்த உரைகளையும் கணிதச் சொல்லாடல்களையும் இந்தக்கிறித்துவப் புனிதர் சகித்துக் கொண்டிருக்க மாட்டார். அலெக்சாண்டிரியா சமூகத்தின் மேட்டுக்குடியினர் அப்பெண்ணை ஆதரித்திருக்க வேண்டும். இந்தப் பாதிரியாரின் பக்தி விசுவாசம் கொண்ட ஆனால் புரிந்து கொள்ளமுடியாத சொற்பொழிவுகளைக் கலகக்காரர்கள் மட்டுமே கேட்டு வந்தார்கள். இவருக்கு அறிவுத் துறையில் போட்டியே இல்லாமல் இருக்க வேண்டுமானால் தன் போட்டியாளர்களை நிரந்தரமாக அழித்து விட வேண்டியிருந்தது. இவரின் தூண்டுதலின் பேரில்தான், ஒரு துறவிகள் படை மதவெறியோடு அலெக்சாண்டிரியா நூலகத்தைத் தாக்கியிருக்கிறார்கள். பதிவு செய்வதற்கே மிகுந்த அவமானம் தரும் இந்தக் குற்றத்தை மதத்தின் பெயரில் அவர்கள்தான் செய்திருந்தார்கள்.

> "நமது சகாப்தத்தின் நானூற்று பதினான்காம் ஆண்டில், உலக அறிவுக் கருவூலத்தின் பெருநகரில் தத்துவத்தின் தகுதி இவ்வாறுதான் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்பின்னர் தான், அறிவியலானது குழப்பத்திலும், அடிமைத்தனத்திலும் மூழ்கியிருக்க வேண்டும். அறிவியலின் வெளிப்படையான இருப்பே கூட சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தது. உண்மையில் இந்தக் காலத்திலிருந்து, சில நூற்றாண்டுகள் வரை இது (அறிவியல்) முழுமையாக மறைந்து போய்விட்டது என்று கூடச் சொல்லலாம். மதவெறியின் கனத்த ஆயுதமானது, நுணுக்கமாகப் பதப்படுத்தப்பட்டிருந்த எஃகு போன்ற கிரேக்கத் தத்துவத்தின் உறுதியைத் தாக்கித் தகர்த்து விட்டது. புனிதசிரிலின் நடவடிக்கைக்கு எந்த எதிர்ப்பும் கிளம்பவில்லை. சிந்தனைச் சுதந்திரம் இனிமேல் கிடையாது என்ற விசயம் ரோமப் பேரரசு முழுக்க இப்பொழுது உறுதி செய்யப்பட்டு விட்டது. வெற்றியாளர்கள் அலெக்சாண்டிரியா மீது தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தி

www.tamilarangam.net

வந்த காலம் வரை, இம்மாதிரியான தன் முனைப்புகள் அவர்களது நோக்கங்களுக்குப் பயன்பட்டிருக்கலாம். ஆனால், அராபியர்கள் அந்த நகரைக் கைப்பற்றியதற்குப் பின்னால் இம்மாதிரியான தன்முனைப்புகள் வெளிப்படையாகவே பொருத்தமற்ற நடைமுறைகளாக மாறிவிட்டன. அந்நியப் படையெடுப்பாளர்கள் உள் நுழைந்து ஒடுக்கு முறைக்கும் நிர்ப்பந்தத்துக்கும் முடிவு கட்டும்வரை வறட்சியும் சோர்வும் தந்த அடுத்த இரு நூற்றாண்டுகள் முடிய நிலைமைகள் இப்படியே நீடித்து வந்தன. வாளின் மூலமாக மட்டுமே உரையாடுவோம் என்பதை அராபியப் படையெடுப்பாளர்கள் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருந்தார்கள். மனிதனை மீறிய உன்னத அறிவுக்கு, தாங்கள்தான் உரிமையானவர்கள் என எந்தப் பாசாங்கும் செய்து கொள்ளவில்லை. இவ்வாறாக, வறட்டு இறையியல் முரண்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் அவரவர் விருப்பப்படி அறிவுப்பாதையைத் தேடிக் கொள்ள சுதந்திரம் தந்திருந்தார்கள். மறைமுகமான மதவெறி, அறியாமை, காட்டுமிராண்டித்தனம் ஆகியவற்றில் மூழ்கியிருந்த எகிப்தை மீட்டெடுத்து, இந்த உலக நாடுகளிலேயே மிக முன்னோடியான நாடாக மீண்டும் ஒரு முறை நிலைநாட்டினர்."*

அராபியர்கள் பண்டைய கிரேக்க ஞானிகளின் படைப்புகளைக் காப்பாற்றி அவற்றை ஒன்று திரட்டி, பாதுகாத்து வந்ததோடு, அதற்கு விரிவான விளக்கங்கள் தந்து அதை வளர்த்தியும் சென்றனர். **பிளேட்டோ, அரிஸ்டாட்டில், யூக்லிட், அப்போலோனியஸ், தாலமி, ஹைப்போகிரேடஸ், கேலன்** போன்ற அறிஞர்களின் முழுப்படைப்புகளும் அத்துடன் அது குறித்த புலமை சார்ந்த விளக்கங்களும் அராபிய மொழிபெயர்ப்பில் தான் முதன்முதலாக நவீன அய்ரோப்பாவின் கைகளுக்குக் கிடைத்திருந்தன. நவீன அய்ரோப்பா, அராபியர்களிடமிருந்து மருத்துவத்தையும் கணிதத்தையும் கற்றிருந்தது. மனிதனின் பார்வையை விசாலப்படுத்தியதும், அவனுக்கு இயற்கையின் இயந்திர விதிகளை எடுத்துக் காட்டியதும் வானவியலே ஆகும். இத்துறையை அராபியர்கள்தான் பற்றார்வத்தோடு வளமாக்கி இருந்தனர். வானவியல் ஆய்விற்கான புதிய கருவிகளின் துணையோடு அராபியர்கள் பூமியின் சுற்றளவு குறித்தும், கோள்களின் இடம், எண்ணிக்கை ஆகியன குறித்தும் மிகத் துல்லியமான அறிவைப் பெற்றிருந்தனர். அனைத்துக் கீழைத்தேய நாடுகளின் மதக்குருமார்களாலும் வருவது உரைக்கும் சோதிடக் கணிதமாகப் பேணி வளர்க்கப்பட்டு வந்த வானவியலானது, அராபியர் கரங்களில் தன் புராதன வடிவத்தை மீறி வளர்ச்சி பெற்றிருந்தது. அவர்கள் அதைத் துல்லியமான அறிவியலாக வளர்த்தியிருந்தார்கள். அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த **தியோபேந்தஸ்** என்பவர்தான் குறிகணிதத்தை (algebra) கண்டுபிடித்தார் என்ற போதிலும், அராபியர்களின் அறிவொளிக்காலம் வரையில்

* டிரேபர் – "அய்ரோப்பாவின் அறிவு வளர்ச்சி வரலாறு" தொகுதி I பக். 325.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது பொதுக் கல்வியில் இடம் பெறாமலேயே இருந்து வந்தது. உண்மையில் சொல்லப் போனால், இந்த அறிவியலின் பெயரே அதன் அராபிய மூலத்தை விளக்கி நிற்கும் சொல் வழக்காக இருக்கிறது. ஆனால், இதற்காக தாங்கள் கிரேக்க ஆசான்களுக்குக் கடன்பட்டிருப்பதை அராபியர்களே பணிவோடு ஒப்புக் கொண்டிருந்தார்கள். மருத்துவப் பயன்பாடுகளுக்காகத் தாவரவியல் படிக்கப்பட்டு வந்தது. இருப்பினும், **தியோஸ்கோரடஸ்** என்பவர் இரண்டாயிரம் தாவர வகைகளைக் கண்டுபிடித்த பின்புதான், இது ஒரு புதிய அறிவியலாகப் பிறப்பெடுத்தது. பண்டைய எகிப்து மதக்குருமார்கள் இரகசியமாகவும், ஆர்வத்தோடும் இரசவாதத்தைப்(alchemy) பாதுகாத்து வந்திருந்தனர். பாபிலோனில் இதை நடைமுறையில் பயன்படுத்தியும் வந்தனர். இதற்கு வெகு காலத்திற்குப் பின்புதான், இந்திய மருத்துவர்கள் வேதியியலின் அடிப்படைக்கூறுகளைப் பற்றித் தெரிந்து கொண்டனர். ஆனால், வேதியியல் அறிவியலானது தனது தோற்றத்திற்கும், தொடக்க கால வளர்ச்சிக்கும் அராபியர்களின் அயரா உழைப்பிற்குக் கடன் பட்டிருந்தது. " வடித்தெடுத்தலுக்காக ஒரு வடிகலனைக் கண்டுபிடித்ததும் அதற்குப் பெயரிட்டதும் இவர்கள்தான். இயற்கையின் மூன்று பெரும் பிரிவுகளுக்குட்பட்ட பொருட்களை இவர்கள் ஆய்வு செய்திருந்தனர். காரங்களுக்கும் அமிலங்களுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டுபிடிக்க முயற்சித்திருந்தனர். மதிப்பு வாய்ந்த தாதுப் பொருட்களை மென்மையான, நலம் தரும் மருந்தாக மாற்றியிருந்தனர்".*

அராபியர்கள் மருத்துவ அறிவியலில் மாபெரும் முன்னேற்றத்தைச் சாதித்திருந்தனர். கேலனின் போற்றத் தகுந்த சீடர்களாக **மேசுயாவும், ஜெப்பரும்** விளங்கி வந்தனர். தங்கள் மாபெரும் ஆசிரியரிடம் தாங்கள் கற்றுக் கொண்டிருந்த விசயங்களை இந்த இருவரும் மேலும் வளர்த்திச் சென்றனர். பத்தாம் நூற்றாண்டில் தொலைதூர பொக்கராவில் பிறந்து, அய்நூறு ஆண்டுகளுக்கு அய்ரோப்பாவில் மருத்துவ அறிவியலில் கேள்விக்கிடமில்லாமல் கொடிகட்டிப் பறந்து வந்தவர் **அவிசினா** ஆவார். பதினாறாம் நூற்றாண்டு முடிய **சேலர்மோ** பள்ளியானது, மருத்துவப் படிப்பிற்கான மையமாக அய்ரோப்பாவில் விளங்கி வந்தது. இப்பள்ளியைத் தோற்றுவித்ததற்கான பெருமை அராபியர்களையே சேரும். அப்பள்ளியில் அபிசினியாவின் பாடங்கள் கற்றுத் தரப்பட்டு வந்தன.

உற்று நோக்குவதன் மூலம் அறிவைச் சேகரித்துக் கொள்ளும் பற்றார்வமே அராபிய அறிஞர்களின் தனித்தன்மையான சிறப்பாக இருந்தது. வெற்று ஊகங்களில் இறுமாப்புக் கொள்வதை அவர்கள் ஒதுக்கித் தள்ளினார்கள். தங்களுக்குத் தெரிந்த விசயங்களின் அடிப்படை மீது உறுதியாக நின்று வந்தனர். மூத்தஅறிஞரான அவ்ரோஸிடமிருந்து வரும் பின்வரும் கருத்து அரேபிய அறிவின் மாபெரும் மேன்மையைத் தீர்மானகரமாக வெளிப்படுத்துகிறது : " தத்துவவாதிகளின் ஆய்வுப்பார்வையில் மதத்தின் சிறப்பம்சமாகத் தெரிவது இறைவனை மேன்மைப்படுத்தும் வழிபாட்டு முறைகளல்ல; இறைவனைப் பற்றியும் அவரது எதார்த்தத்தைப் பற்றியும் அறிவதற்கு இட்டுச்செல்லும் அவரது நூல்களைக் குறித்த அறிவே போற்றுதற்குரியதாகும். அதுவே இறைவனின் பார்வையில்

www.tamilarangam.net

மேலான செயலாகும். தவறானதும், பயனற்ற வரம்பு மீறிய செயலுமான வரி விதித்தலே மிக இழிவான செயலாகும். இந்த வழிபாட்டு முறையை மேற்கொள்ள முயற்சிப்பவர்களே மதங்களிலேயே தூய்மையான இந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆவார்கள்."இம்மாதிரியான சமய-மறுப்புக் கருத்துக்களை - அவை பணிவான சொற்களில் இருந்திருந்தபோதிலும்- பிரச்சாரம் செய்ததை அனுமதித்த ஒரு மதத்திற்குப் பொறுமையற்ற பண்பும், மதவெறியும் அடித்தளமாக இருந்திருக்க முடியாது. இந்தப் பன்முகத்தன்மையான பார்வைக்காக தத்துவவாதி நிச்சயமாக மதக்குருவின் கோபத்திற்கு இரையாயிருந்தார். ஆனால், முசுலீம்களைக் காட்டிலும் கிறித்துவ மதக்குருக்களே அதிகக் கோபம் கொண்டிருந்தனர்.

ஒரு குறுகிய கால நாடு கடத்தலுக்குப் பிறகு அவ்ரோஸ், அன்டாலூசியா சுல்தானின் அமைச்சரவையில் மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டிருந்தார். இசுலாமிய நாடுகளில் அவரது புத்தகங்களுக்கு விதித்திருந்த தடை விலக்கப்பட்டிருந்தது. ஆனால் இலத்தீன் மொழி பெயர்ப்புகளில் முன்னர் குறிப்பிட்டிருந்த பக்கங்களும் அதனையொத்த சில பக்கங்களும் அகற்றப்பட்டிருந்தது. அய்ரோப்பாவில் பன்னிரெண்டாம், பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளின்போது செயல்பட்டுவந்த கிறித்துவ-விரோத (heretic) இயக்கங்கள் தங்களுக்கான ஊக்கத்தை, ஒடுக்கப்பட்டிருந்த இந்த அரபுத் தத்துவவாதியின் போதனைகளிலிருந்து தான் பெற்றிருந்தன. மத்திய காலம் முழுக்கவும், அய்ரோப்பாவை ஆன்மீக அடிமைத்தனத்தில் வைத்திருந்த கத்தோலிக்க மதத்தின் அடித்தளத்தை இந்த கிறித்துவ-விரோத இயக்கங்கள்தான் உலுக்கிக் காட்டின. பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி, நவீன அறிவொளிக் காலம் வரையிலும், மிரண்டு போயிருந்த கிறித்துவத்தின் புனிதக் கண்கள் அவ்ரோஸின் கொள்கைகளை கிறித்துவ-விரோதக் கருத்துக்களோடு ஒப்புமை செய்தே பாவித்து வந்தது. காரணமின்றி அது இப்படிச் செய்யவில்லை. மேலே எடுத்துக்காட்டியுள்ள மேற்கோளானது, இறையியலின் குருட்டுக் கோட்பாடுகளின் அதிகாரத்தினால் விசுவாசம் எனப் புனிதப்படுத்தப்பட்டிருந்த நற்பண்பு என மேன்மைப்படுத்தப் பட்டிருந்த அறியாமை என்ற குப்பையிலிருந்து, பகுத்தறிவு விடைபெற்றுக் கொண்ட உறுதியான திருப்பு முனையை எடுத்துக் காட்டுகிறது.

உண்மையை அறிந்து கொள்வதற்கான நிச்சயமான வழியாயிருந்த தொகுப்பாய்வு முறையின் அடிப்படைக் கோட்பாட்டை அவ்ரோஸ் விவரித்திருந்தார். பரம்பொருள் குறித்த முற்கோள்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மனிதன் தனது செயல்பாடுகளின் மூலம் - அதாவது அனுபவ அறிவின் மூலம் - தனது யதார்த்தத்தில் வைத்து தன்னை அறியத் தொடங்கினால், தெய்வக் கருத்து மேலும், மேலும் சுருங்கி இறுதியில் அது ஒன்றுமில்லாமல் போகும் வரை சுருங்கிக் கொண்டே இருக்கும். தனது இருப்பு குறித்து மனிதனால் நடத்திக் காட்டப்படக் கூடிய யதார்த்தம் இது ஒன்றே. இறைவன் குறித்த அறிவுத்தேடலை மட்டுமே முன்னிறுத்தியுள்ள ஒரு மதமானது, மதம் என்ற போர்வையின் கீழ் மனிதக்கருத்தியலின் மாபெரும் முன்னேற்றத்தையே நிச்சயமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதிபலிக்கிறது. மாபெரும் மதங்களின் வரிசையில் இறுதியாகத் தோன்றிய இசுலாமே மாபெரும் மதமாக இருந்தது. அந்த வகையில் இது அனைத்து மதங்களின் அடிப்படையை அழித்திருந்தது. அதன் வரலாற்று முக்கியத்துவத்தின் சாரமே இதுதான்.

எகிப்தியர்கள். அசீரியர்கள், யூதர்கள் பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோரின் பண்டைய பண்பாடுகள் தோற்றம் பெற்று, மோதலுக்குள்ளாகி வீழ்ச்சியுற்ற அதே வரலாற்று நிலப்பகுதிகள் தான் இசுலாமின் மையமாகவும் அராபியர்களின் அறிவுத் தேடலின் மையமாகவும் இருந்தன. அந்தப் பண்டைய பண்பாடுகளின் சாதகமான பலன்கள் தான் அராபியப் பண்பாட்டை உருவாக்கியிருந்தன. முகம்மதுவின் தனிச் சிறப்பான ஓரிறைக் கோட்பாடானது அந்தப் பண்டைய மக்களின் அடிப்படை மதக் கோட்பாடுகளைத் தன்வசம் எடுத்துக் கொண்டது. அராபியத் தத்துவவாதிகள் தான் முதன்முதலாக அனைத்து மதங்களின் பொதுவான விழுமியங்களை சுவீகரித்திருந்தனர். இதற்கான பெருமை அவர்களுக்கு மட்டுமே உரித்தானது. வாழ்க்கை இயற்கை குறித்த மாபெரும் மர்மங்களைப் புரிந்து கொள்ள மனிதச் சிந்தனை எடுத்துக் கொண்ட எண்ணற்ற முயற்சிகளின் வெளிப்பாடே இந்த மதங்கள் என்ற உறுதியான கருத்தை இவர்கள் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல, இவர்கள் மேலும் ஒரு படி சென்று பகுத்தறிவிற்கு இணக்கமாக எடுக்கப்படும் முயற்சிகள், மேன்மையானவை, உன்னதமானவை என்ற கருத்தையும் உறுதியாக முன்வைத்திருந்தார்கள். மதம் குறித்த இந்தப் பகுத்தறிவுவாதக் கருத்து அவ்ரோஸின் சிந்தனையில் மிக உயரிய தெளிவை எட்டியிருந்தது.

இவ்வாறு நவீனப் பண்பாட்டின் அடித்தளத்திற்கு ஏதென்ஸ், அலெக்சாண்டிரியா பகுதி ஞானிகள் கையளித்திருந்த அருமதிப்பு வாய்ந்த அனுபூதியியல் (metaphysics), அறிவியல் போதனைகளோடு அராபியர்களும் சுயமாகத் தங்கள் பங்காக சில விசயங்களைப் பங்களித்திருந்தனர்.அதில் ஒன்று அய்யுறவுவாதம்* (Scepticism) என அழைக்கப்படுகிறது.அனைத்து மத விசுவாசங்களையும் கரைத்து ஒழித்து விடும் வல்லமை வாய்ந்தது இது. எதையும் எளிதில் நம்பிவிடும் மனப்போக்கை, திறனாய்வுப் பார்வை மறுத்த அக்கணமே, மனித வளர்ச்சி குறித்த பார்வைப் பரப்பில் ஒரு புதிய ஒளி வீசத்தொடங்கிவிட்டது. **"மூன்று வஞ்சகர்கள்"** என்ற பெயரில், ஆசிரியர் பெயரில்லாமல் வெளியிடப்பட்டிருந்த ஆர்வத்தைத் தூண்டியிருந்த ஒரு புத்தகம், அய்ரோப்பா அய்யுறவுவாதத்தின் தொடக்க கால வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தது. இந்த இழிவான புத்தகத்தை எழுதியதற்கான நற்பெயர் கிறித்துவத் திருச்சபையின் நம்பிக்கையோடு முரண்பாடு கொண்டிருந்த கிறித்துவப்பேரரசர் **பிரெடரிக் பார்பரோஸாவுக்கோ** அல்லது முசுலீம் தத்துவவாதியான **அவ்ரோஸிக்கோ** உரித்தாக்கப்பட்டிருந்தது.

---

*அய்யுறவுவாதம்:- இது சமய நம்பிக்கைகள்,கோட்பாடுகள் மீது அய்யம் கொள்வது. இதை அவநம்பிக்கைவாதம் என்றும் சொல்வர். (மொர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோசஸ், யேசு, முகம்மது ஆகிய மூவரையே அது வஞ்சகர்கள் எனக் குறிப்பிட்டிருந்தது. இப்புத்தகத்தை எழுதியதாக அய்யப்பட்ட இருவரில் ஒருவர் கிறித்துவர். மற்றவரோ முசுலீம். நிச்சயமாக மதம் வீழ்ச்சியடைந்து கிடந்த மோசமான காலம்தான் இது.

பதிமூன்றாவது நூற்றாண்டிற்கு முன்னரே, அய்யுறவுவாதம் இருந்திருக்கிறது. ஆனால், அது உண்மையான அவநம்பிக்கைவாதமாக இருக்கவில்லை. ஆகவே, இந்தக் கோட்பாடு விவாதிக்கப்பட்டிருக்கலாம் அல்லது மறுத்தொதுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், கிறித்துவ விசுவாசத்தின் அடித்தளத்தை இது என்றுமே அசைத்ததில்லை. அனைத்து மதங்களுக்கும் ஒரு பொதுவான அடித்தளம் உண்டு என்ற கருத்து தோன்றிய பின்புதான் அந்த அடித்தளம் தாக்குதலுக்குள்ளானது. அனைத்து மதங்களும் சாராம்சத்தில் ஒன்றுதான் என்பது நிச்சயமாகி விட்டபின், ஒவ்வொரு மதமும் தங்களின் குறிப்பான கோட்பாடுகளையும் மதக் கட்டளைகளையும் கைவிட்டுவிட வேண்டும். ஏனெனில், அவை மனித குலத்தின் ஆன்மீக ஒற்றுமைக்குப் பெருங்கேடு விளைவிக்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. ஆனால், போதனைகளையும் சமயக் கோட்பாடுகளையும் கைவிட்ட பின், மதத்திற்கு நிற்கக் காலில்லாமல் போய்விடும். மதம் பற்றிய அறிவு ரீதியான விளக்கமே அதன் அழிவிற்குக் காரணமாக அமைந்து விடும். அனைத்து மதங்களின் பொதுவான அடிப்படை என்ற புரட்சிகரக் கருத்தானது முதன்முதலாக அராபியச் சிந்தனையாளர்களின் மனதில்தான் கருக் கொண்டது.

அராபியர்களின் அறிவொளிக் காலம் அவ்ரோஸிடம்தான் தன் உச்சத்தை எட்டியிருந்தது என்ற போதிலும் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதிமூன்றாம் நூற்றாண்டு வரை செழித்தோங்கியிருந்த மாபெரும் சிந்தனையாளர்கள் அறிஞர்களின் நீண்ட மரபுத் தொடர்ச்சியில் அவர்தான் இறுதியானவராகவும் உன்னதமானவராகவும் இடம் பிடித்திருந்தார். இவர்களில் மிகப் பிரபலமாயிருந்த ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் முன்வைத்த கோட்பாடுகளின் அடிப்படைகள் குறித்து ஒரு சுருக்கமான விளக்கத்தை முன்வைப்பது அவசியமாக இருக்கிறது. ஏனெனில் அப்பொழுதுதான் அதன் புரட்சிகர முக்கியத்துவம் குறித்த சில கருத்துக்கள் நமக்குக் கிடைக்கும். இவர்கள் தங்கள் கருத்துக்களுக்காக, இசுலாம் மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குக் கடன் பட்டிருந்தார்கள். அது மட்டுமல்ல, "இறைவனின் வாள்" சாதித்திருந்த தலைசுற்ற வைத்த வெற்றிகள் தான் இதைச் சாத்தியமாக்கியிருந்தது.

ஆன்மீக ஒற்றுமையின் பிரதிபலிப்பாகத் தங்களது நிலப்பகுதிகளை ஒற்றுமைப்படுத்திய பின்பும், அதன் தொடர் விளைவாகத் தோன்றிய பொருளாதாரச் செழுமைக்குப் பின்பும், புதிய இசுலாமிய தேசமானது (அறிவு) சிந்தனைப் பண்பாட்டு வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்திருந்தது. ஒரு சில நூற்றாண்டுகளாக அது மற்றவர்களிடமிருந்து குறிப்பாகப் பண்டையக் கிரேக்கர்களிடமிருந்து பணிவோடு கற்று வந்தது. இதன் மூலம் தன்னை வளப்படுத்திக் கொண்ட இது, ஒவ்வொரு அறிவுத் துறையிலும், சுதந்திரமான, சுயமான சிந்தனைகளை உருவாக்கத் தொடங்கியது.

www.tamilarangam.net

மாபெரும் அரபுத் தத்துவவாதிகளில் **அல்கண்டி**தான் முதலில் தோன்றியவர். சுதந்திரச் சிந்தனை கொண்டிருந்த அப்பாசித்திஸ்களின் தலைநகரில் இவர் பிரபலமானவராக இருந்தார். தத்துவம் கணிதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; அதாவது, அது தன் பயனற்ற ஊகங்களைக் கைகழுவிவிட வேண்டும்; தூலமான உண்மைகள், நிலைநிறுத்தப்பட்ட விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த துல்லியமான பகுத்தறிவானது, அருவமான சிந்தனைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்; அப்பொழுதுதான் அய்யத்திற்கிடமில்லாத முடிவுகளைப் பெறமுடியும் என இவர் சொல்லியிருந்தார். இந்தக் கருத்துக்களுக்காகத்தான் அவர், ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் திடீரெனப் புகழ் உச்சியை எட்டியிருந்தார். நவீனத் தத்துவத்தின் முன்னோடி என்ற முறையில் இவர் பிரான்சிஸ் பேகன், தெகார்த்தே ஆகியோருக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முந்தியவர் என்ற மாபெரும் தனிச் சிறப்பைப் பெற்றிருந்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அராபிய ஞானி கற்றுத் தந்த விசயங்களிலிருந்து இன்றும் கூட எண்ணற்ற "தத்துவவாதிகளும், அறிஞர்களும்" பலனைப் பெற்று வருகின்றனர்.

அடுத்துக் குறிப்பிடப்பட வேண்டிய **அல்பராபி** இதற்கு அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்து வந்தவர். டமாஸ்கஸிலும், பாக்தாதிலும் கல்வி கற்பித்து வந்தவர். அரிஸ்டாட்டில் மீதான இவரது கருத்துரைகள் பல நூற்றாண்டுகளுக்கு அதிகாரப்பூர்வமான புத்தகமாகப் பயிலப்பட்டு வந்தது. மருத்துவ அறிவியலிலும் இவர் சாதனையாளராக விளங்கியிருந்தார். ரோஜர்பேகன் இவரிடமிருந்துதான் கணிதத்தைக் கற்றிருந்தார்.

பத்தாம் நூற்றாண்டின் பின்பகுதியில் **அவிசீனா** தோன்றினார். இலாபம் கொழிக்கும் வணிகத்தில் ஈடுபட்டிருந்த பொக்கராவைச் சேர்ந்த ஒரு செல்வந்த நிலக்கிழார் குடும்பத்தைச் சேர்ந்த இவர் கணிதம், இயற்பியல் துறைகளில் இவர் பல புத்தகங்களை எழுதியிருந்த போதிலும், மருத்துவ அறிவியலுக்கு இவர் அளித்திருந்த பங்களிப்புக் காரணமாகவே இவர் பெயர் வரலாற்றில் இடம் பெற்றிருந்தது. புகழ் பெற்ற மருத்துவப் பள்ளியான சேலர்மோ, இவர் நினைவிற்கு ஒரு நினைவுச் சின்னமாக விளங்கி வந்தது. பதினாறாம் நூற்றாண்டு வரை அய்ரோப்பா முழுக்கவும், இவரது எழுத்துக்கள்தான் மருத்துவப் பாடப் புத்தகங்களாகப் பயிலப்பட்டு வந்தன.மதப்புனிதத்தை கண்டனம் செய்து வந்த அவிசீனாவின் கருத்துக்களினால் (profanity) மனம் புண்பட்டிருந்த இமாம்களின் நிர்பந்தங்களைச் சுதந்திரச்சிந்தனையாளயராக விளங்கிய பொக்காரா பகுதி அமீரால்கூட எதிர்த்து நிற்க முடியவில்லை. அந்த அளவிற்கு இந்த மாபெரும் மருத்துவத் தத்துவவாதியின் கருத்துக்கள் மிக மிக வைதீகத்தன்மையற்றதாக (unorthodox) இருந்தன. தனது புரவலரின் அமைச்சரவையிலிருந்து விலகிய இவர் அராபியப் பேரரசு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மருத்துவத்தைக் கற்றத் தந்தார். பல்வேறு கல்விப் பதவிகளில் அமர்ந்து தத்துவத்தைப் போதனை செய்து வந்தார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த **அல் ஹசன்**, மாபெரும் கல்வியாளர்கள் மத்தியில் அனைத்துக் காலங்களுக்குமாக தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர். ஒளியியல் (optics) குறித்த துறைதான் இவரின் சிறப்புப் பாடமாக இருந்தது. கிரேக்கர்களிடமிருந்து இதைக் கற்றறிந்த இவர், அவர்களைக் காட்டிலும் இத்துறையில் முன்னே சென்றிருந்தார். கண்களில் இருந்து ஒளிக் கதிர்கள் வருகின்றன என்ற கிரேக்கர்களின் தவறான கருத்தை இவர் நேர்ப்படுத்தினார். உடல் உறுப்பியல், கணிதவியல் சிந்தனைகளை முன்வைத்து, பார்க்கப்படும் பொருளிளிருந்து ஒளிக்கதிர்கள் வந்து நம் விழித்திரையில் வந்து மோதுகின்றன என்பதை மெய்பித்துக் காட்டினார். இந்த அரபு முன்னோடியிடமிருந்துதான் ஒளியியல் குறித்த தனது கருத்துக்களை **கெப்லர்** கடன் பெற்றிருந்தார் என்ற நம்பிக்கை பல அறிவியல் வரலாற்றாசிரியர்களிடையே பொதுவாக நிலவி வருகிறது.

இதே நூற்றாண்டில் , அண்டாலூசியன் வணிகரின் மகனான **அல்கஜாலி** என்பவர் வாழ்ந்து வந்தார். உண்மையின் தகுதியை சுய-உணர்வு என்பதாகச் சுருக்கியதில் இவர் தெக்கார்த்தேவுக்கு முன்னவராக விளங்கினார். பண்டைய அய்யுறவுவாதத்திற்கும் நவீன அய்யுறவுவாதத்திற்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்துவதில் முனைப்புக் காட்டி வந்தார். தத்துவத்திற்கு இவர் ஆற்றியுள்ள மறக்கமுடியாத பங்களிப்பை அவர் சொந்தச் சொற்களில் சொல்வதே சிறப்பானதாக இருக்கும்:

> "மதத்திலிருந்து எனக்கு எந்த நிறைவும் (திருப்தி) கிடைக்காததால், இறுதியாக நான் அனைத்து அதிகாரபூர்வக் கருத்துக்களையும் கைவிட உறுதி பூண்டேன். அய்யப்பட முடியாத குழந்தைப் பருவ காலத்திலிருந்து என்னிடம் சிறிது சிறிதாகப் புகட்டுப்பட்ட வந்த அனைத்துக் கருத்துக்களிலிருந்து விலகுவிடவும் உறுதி பூண்டேன். பொருட்களின் உண்மையை அறிந்து கொள்வதே என் எளிய நோக்கமாகும். அறிவு என்றால் என்ன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இது எனக்கு இன்றியமையாததாகவும் இருந்தது. நாம் அறிந்து கொள்ள விரும்பும் பொருள் குறித்து தரும் எந்தவொரு அய்யத்திற்கும் இடம்தராததோடு அதன் மூலம் எதிர்காலத்திலும் அப்பொருள் குறித்து எந்தவொரு தவறான கருத்தும், ஊகமும் எழ முடியாத அளவிற்கு விளக்கத்தைத் தரும் ஒன்றுதான் நிச்சயமான அறிவாகும் என எனக்கு இப்போது தெளிவாகத் தெரிகிறது. பத்து என்பது மூன்றைவிடப் பெரியது என நான் ஒருமுறை ஏற்றுக் கொண்டால் போதுமானது. யாராவது வந்து என்னிடம் "பத்தைவிடமூன்றுதான் பெரியது; இதை மெய்ப்பிப்பதற்காக நான் இந்தத் தடியைப் பாம்பாக மாற்றிக் காட்டுகிறேன்," எனச் சொல்லி, அவ்வாறே அந்த அதிசயத்தைச் செய்து காட்டினாலும் கூட, அவரது தவறு குறித்த எனது முடிவு மாறாமலேயே இருக்கும். அவரது சூழ்ச்சி அவரது திறமையின் மீது ஒரு வியப்பை வேண்டுமானால் உருவாக்கியிருக்கலாம். ஆனால், எனது அறிவின் மீது நான் அய்யப்பட மாட்டேன்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு முசுலீம் கல்விமானால் சொல்லப்பட்ட – துல்லியமான அறிவைப் பெறும் முறை குறித்த ஒரு கோட்பாடு – அன்று போலவே இன்றும் சரியானதாக இருக்கிறது. ஒப்பீட்டளவில் இந்தியர்கள் மத்தியில் இன்றும் கூட இத்தகைய அறிவியல் பார்வை மிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் இந்த நாட்களிலும் கூட, இவர்கள் மாயச் செயல்களையும், ஆன்மிகப் போலித்தனத்தையும் நம்பி வருகிறார்கள். அறிவியல் அறிவின் நம்பகத்தன்மைக்கு இவை தீவிரமான சவாலாக இருக்கின்றன என அவற்றிற்கு நற்பெயரையும் தந்து வருகின்றனர்.

அனுபவ அடிப்படையிலும், மறுக்கமுடியாத விதிகளின் அடிப்படையிலும் நெறிப்படுத்தப்படாத அறிவு, கணிதத் துல்லியத்தைப் பெறவே முடியாது என அல்கஜலி கருத்துக் கொண்டிருந்தார். அவசியமான உண்மையின் மூலமும் அதாவது தற்செயல் நிகழ்வுகளின் மூலமும், புலனுணர்வின் மூலமுமே மாற்ற முடியாத மெய்ம்மையை உணர்ந்தறிய முடியும். சிந்தனை அல்லது தன்னுணர்வானது புலனுணர்வின் பிழையற்ற தன்மையே சரி பார்க்கும் நீதிபதியாக இருப்பதை அவர் கண்டறிந்தார். பொதுவாக இசுலாமிய மதம் சகிப்புத் தன்மையற்றும், வெறியுணர்வோடும் இருந்ததாக நம்பப்பட்ட ஒரு சூழலில் இத்தகைய தனித்துவமான சிந்தனைத் துணிவைக் கண்டு ஒருவர் வியப்படையக்கூடும். இசுலாமிய உலகெங்கும் அல்கஜலியின் காலத்திலேயே அவரது அய்யுறவுவாதம் ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளப்பட்டது. எழுநூறுஆண்டுகளுக்குமுன் அராபியத் தத்துவவாதி கூறியதற்கு மேல் அதிகமாக எதையும் நவீன அய்யுறவுவாதத்தின் தந்தையான ஹியூம் கூறி விடவில்லையென பிரான்சைச் சேர்ந்த புகழ்பெற்ற கிழக்குலக ஆய்வாளர் ரெனான் கூறிய கருத்திலிருந்து தத்துவ வரலாற்றில் அவர் பெற்றிருக்கும் இடம் குறித்து தெரிந்து கொள்ளலாம். ஊக ஆய்வுச் சிந்தனையின் அனைத்து வேர்களையும் வெட்டியெறிந்த – "அனைத்தையும் உடைத்தெறியும் விமர்சனத் தத்துவமான" – காண்ட்டின் தத்துவத்துக்குத் தூண்டுகோலாக ஹியூம் தத்துவமே இருந்தது என்பதை நாம் நினைவு கூறும்போது அல்கஜலியின் கருத்துக்களுக்குள்ள வரலாற்று முக்கியத்துவத்தின் வலிமையை' மதிப்பிட முடியும். அல்கஜலியின் கருத்துக்கள் காலத்தால் முந்தியவை. சோதனை அறிவியல் அப்போது சாத்தியமாக இருக்கவில்லை என்பதை அவர் கண்டார். தொழில் நுட்பம் இன்னமும் தோன்றாத நிலையில் அல்லது குழந்தைப் பருவத்தில் இருந்தது. பொருட்களின் இயல்பு தத்துவவாதிகள் விரும்பும் விதத்தில் கணித ரீதியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தது. அதனால் அல்கஜலி தனது பிற்காலத்தில் மாயாவாதத்தில் வீழ்ந்தார். ஆனால், காண்ட்டின் வீழ்ச்சியோடு ஒப்பிடும்போது இவரின் வீழ்ச்சி இழிவானதல்ல. அராபியச் சிந்தனையாளரின் வானளாவப் பறக்கும் ஆன்மாவின் துணிவு மிக்க சிறகுகளை புறவயக் குறைபாடுகள் பிடுங்கி எறிந்தன. அதே சமயம் காண்ட்டின் விமர்சன மேதமை ஒருதலைச்சார்பாக அகவயத்துள் மூழ்கிப்போனது.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்த அபுபக்கர் தான் விண்ணுலகக் கோள்களின் இடம் குறித்த தாலமியின் கருத்தை நிராகரித்த

www.tamilarangam.net

முதல் வானவியலாளர் ஆவார். கோள்களின் அமைப்பு, விண்ணுலக இயக்கம் குறித்த இவரது கண்டுபிடிப்புகள் தான் பின்னர் ஜியோர்ட் நோ புருனோ, **கலிலியோ, கோபர்நிகஸ்** ஆகியோரால் வளர்த்தப் பட்டு மாபெரும் கண்டு பிடிப்புகளுக்குக் காரணமாய் இருந்தது. "அவரது அமைப்பு முறையில், அனைத்து இயக்கங்களும் சரிப ார்க்கப்பட்டிருந்தன. ஆகவே, எந்தத் தவறும் நிகழ வாய்ப்பில்லாமல் இருந்தது" எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது. தனது கோட்பாடு ஒரு முழுமையான ஆய்வாக வெளிவருவதற்கு முன்னரே அவர் இறந்து விட்டார். அவரது மாணவரான **அல் பெட்ராகியஸ்** அனைத்து விண்கோள்களும் முறையாக இயங்கி வருகின்றன என்ற இவரது கோட்பாட்டை பிரபலப்படுத்தியிருந்தார். மத்திய காலம் முழுக்கவும், வானவியல் அறிவுக்கு ஒரு மாபெரும் பங்களிப்பாக இருந்ததாக இந்த அனுமானம் மதிக்கப்பட்டு வந்தது. இந்த முசுலீம் தத்துவவாதியின் கோட்பாடுகள், பிரபஞ்சம் குறித்த பைபிளின் கருத்துக்களை நிலைகுலையச் செய்திருந்ததோடு, கிறித்துவத்துறவிகள் மத்தியிலும் ஊடுருவி இருந்தது. **ரோஜர் பேக்கன்** மட்டுமல்ல; அவரின் முக்கியமான எதிரியான **ஆல்பர்ட்ஸ் மேக்னஸ்லனும்** கூட வானவியலில் பெட்ராகியஸ் ஆற்றிய பணிக்காக தாங்கள் அவருக்கு நன்றிக் கடன் பட்டிருந்ததை ஒப்புக் கொண்டிருந்தார். விண்கோள்களின் இயக்கம் குறித்த அபுபக்கரின் கருத்துக்களைத் தான் **அல் பெட்ராக்கியஸ்** கையாண்டிருந்தார்.

மாபெரும் அராபியச் சிந்தனையாளர்களில் இறுதியாக வந்தவரும், மாபெரும் சிந்தனையாளருமான அவ்ரோஸின் தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்து ஏற்கனவே ஒரு சுருக்கமான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இசுலாமியப் பண்பாட்டின் வரலாற்றுத் திருப்புமுனைக் காலத்தில் அவர் வாழ்ந்து வந்தார். பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் இந்த வளர்ச்சி உச்சத்தை எட்டியிருந்தது. இந்த வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ள பிற்போக்குச் சக்திகள் தங்களது வலிமையை ஒன்று திரட்டி வந்தன. இசுலாமியப் பண்பாடு ஏற்கனவே சரியத் தொடங்கி விட்டது.

நாடோடி மக்களின் எளிமையான மத விசுவாசம் அனுமதித்திருந்த சிந்தனைச் சுதந்திரமானது வானாளாவிய எல்லையைத்தொட்டு, இறுதியாக "விசுவாசப்படைத் தளபதிகளின்" (கலீபாக்கள்) மண்ணுலக நலன்களோடு மோதத் துவங்கிவிட்டது. அய்நூறு ஆண்டுக் காலத்தில் மிக அற்புதமான வளர்ச்சியை எட்டியிருந்த இசுலாமியச் சிந்தனையின் உறுதியான பயன்களை பகுத்தறிவே உண்மையை அறிவதற்கான ஒரே வழி என்ற உன்னதமான சூத்திரமாக அவ்ரோஸால் சுருக்கி வரைந்திருந்தார். இம்மாதிரியான மத-விரோதக் கருத்துக்களைப் பரப்புபவர்கள் நரகத் தீயில் எரிக்கப்படுவார்கள் என ஒரு அரசு ஆணையை வெளியிட வேண்டியளவிற்கு கொர்டாவோ சுல்தானான **அல்மசூர்** அவர்களுக்கு மதகுருமார்கள் நெருக்கடி தந்திருந்தனர். மனிதகுல முன்னேற்றத்தின் வலிமையான நெம்புகோலாக இருந்த இசுலாமானது பிற்போக்குத்தனம், சகிப்பின்மை, அறியாமை, தப்பெண்ணங்கள் ஆகியவற்றின் கருவியாக மாறிவிட்டதற்கு இசுலாமின் உன்னதமான பண்புகள் மீதான இந்தக் கண்டனமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடையாளமாக விளங்குகிறது. இரண்டு பேரரசுகளின் சூழ்ந்துவந்த அழிவிலிருந்தும் இரண்டு மதங்களின் குருட்டுத்தனமான இருளிலிருந்தும், பண்டையப் பண்பாடுகளின் மதிப்பு வாய்ந்த மரபுச் செல்வங்களைக் காப்பாற்றித் தந்த தன் வரலாற்றுப் பாத்திரத்தைச் செய்து முடித்து விட்ட இசுலாமானது, தனது உண்மையான சுயத்திற்குத் தானே துரோகம் செய்ததோடு, துருக்கியக் காட்டுமிராண்டித் தனத்திற்கும், மங்கோலிய நாடோடிக் கூட்டத்தாரின் கொள்ளைச் செயல்களுக்குமான கேடு கெட்ட பதாகையாக மாறியிருந்தது.

இசுலாம் தன்னைத்தானே கைவிட்டுவிட்டது. பல நூற்றாண்டு காலம் சுதந்திரச் சிந்தனையின் தாயகமாக விளங்கி வந்த கோர்டோவா அமைச்சரவையிலிருந்து அவ்ரோஸ் துரத்தப்பட்டார். அவரது புத்தகங்கள் தீயில் வீசப்பட்டன. உண்மையான தீயில் அல்ல; மாறாக, மதக்குருமார்களின் மிகக் கடுமையான வெறுப்பு என்ற தீக்கிரையாயின. பகுத்தறிவானது மத–விரோதக் கருத்தாக அடையாளம் காணப்பட்டது. அவ்ரோஸ், அவரது ஆசிரியர் அரிஸ்டாட்டில் ஆகிய பெயர்களே கூட வெறுக்கப்பட்டன. நாத்திகத்தையும், சமய – அவமதிப்பையும் தீய ஒழுக்கத்தையும் காப்பதற்கே தத்துவம் துணைபோகிறது என ஒரு வைதீக முசுலீம் கருதுமளவிற்குக் காலப் போக்கில் பிற்போக்குச் சக்திகள் முழுமையாக வெற்றியடைந்திருந்தன. அய்நூறு ஆண்டுகாலம், மனத்தை ஈர்க்கும் விதத்தில் அராபியர்களால் உயர்த்திப் பிடிக்கப்பட்டு மிக உறுதியாக முன்னெடுக்கப்பட்டிருந்த ஆன்மீக முன்னேற்றத்தின் தரத்தை, முட்டாள்தனமான மதவெறியின் சீற்றம் தாழ்த்தியும், காலில் போட்டு மிதித்ததும் உண்மைதான் என்ற போதிலும் இசுலாமிற்கு முன்னர் கிறித்துவத்தின் பக்தி விசுவாசமும் மூடநம்பிக்கையும் செய்திருந்த நாசத்தின் அளவிற்கு, இசுலாம் நாசம் செய்து விடவில்லை. அவ்ரோஸ் அவரது சொந்த மக்களாலேயே கைவிடப்பட்டிருந்தார். எதிர்காலத்திற்கு உரியவர்கள் தான் அவரை மீண்டும் அரியணை ஏற்ற வேண்டும். பன்னிரெண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே விசுவாசத்திற்கும் X பகுத்தறிவிற்கும், அறியாமையின் கொடுங்கோன்மைக்கும் X சிந்தனைச் சுதந்திரத்திற்கும் இடையில் நடந்து வந்த கடுமையான சண்டைக்கு – அய்ரோப்பாவைக் கதிகலக்கியதும், கத்தோலிக்கக் கிறித்துவத்தின் அடித்தளத்தை உலுக்கியதுமான அந்தச் சண்டைக்கு – ஊக்கம் தந்ததே அராபியச் சிந்தனையாளர்களின் போதனைகள்தான். அவ்ரோஸும், அவரின் சித்தாந்தமும் அய்ரோப்பாவின் அறிவியல் சிந்தனையை நானூறு ஆண்டு காலம் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ❐

www.tamilarangam.net

# இசுலாமும் இந்தியாவும்

இந்தியாவிற்குள் இசுலாம் நுழைந்த தருணத்தில் அது தன் முற்போக்குப் பாத்திரத்தைச் செய்து முடித்திருந்தது. கல்வியறிவும், பண்பாடும் கொண்டு விளங்கிய அராபியர்களிடமிருந்து அதன் தலைமை பறிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கூட, அதன் துவக்க காலப் புரட்சிகரக் கோட்பாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் கொடியில் பொறிக்கப்பட்டே இருந்தது. பாரசீக, கிறித்துவ நாடுகளில் நடந்ததைப் போலவே, இந்தியாவின் விசயத்திலும் உள்நாட்டுக் காரணிகள் தான் முசுலீம் படையெடுப்பை எளிதாக்கியிருந்தன என்பதை வரலாறு குறித்த விமர்சனப் பூர்வமான ஆய்வு வெளிப்படுத்தலாம். வெற்றி கொள்ளப்பட்ட மக்களின் செயலூக்கமான ஆதரவு இல்லையென்றாலும் கூட அவர்களின் அனுதாபத்தையும் மௌனமான சம்மதிப்பையும் பெறாமல் ஒரு நீண்ட வரலாறும், பணடையப் பண்பாடும் கொண்ட மாபெரும் மக்கள் திரளை ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு அவ்வளவு எளிதில் அடிபணிய வைத்துவிட முடியாது. பௌத்தப்புரட்சியை, பார்ப்பனிய வைதீகம் வெற்றி கொண்டிருந்ததால், பதினொன்றாம் பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் எண்ணற்ற மத அதிருப்தியாளர்கள் தோன்றியிருக்க வேண்டும். இவர்கள் தான் இசுலாமின் நற்செய்தியை ஆர்வத்தோடு வரவேற்றிருக்கக் கூடும்.

பார்ப்பனிய ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்குள்ளாகியிருந்த ஜாட்டுகள் இன்னும் இதர விவசாயச் சாதிகளின் உதவியோடு தான் முகம்மது பின் காசிம் சிந்துப் பகுதியை வெற்றி கண்டார். இந்த நாட்டை வெற்றி கொண்ட இவர் தொடக்க கால அரபுப் படையெடுப்பாளர்களின் கொள்கையையே இங்கும் கடைப்பிடித்து வந்தார்:

> "பார்ப்பனர்களை நம்பிக்கைக்குரியவர்களாகக் கொண்டு, நாட்டு மக்களை சாந்தப்படுத்த அவர்களைப் பணியிலமர்த்திக் கொண்டார். தங்களது கோவில்களைச் சீர்படுத்திக் கொள்ளவும், முன்னைப் போலவே தங்கள் சொந்த மதத்தை வழிபட்டுக் கொள்ளவும் அவர்களுக்கு அனுமதி அளித்தார். வரி வசூலிப்பதை அவர்களிடம் ஒப்படைத்திருந்தார். உள்ளூர் நிர்வாகத்தின் மரபுகள் தொடர அவர்களைப் பணியிலமர்த்தியிருந்தார்."*

பார்ப்பனர்கள் கூட – அவர்களில் ஒரு சிலர் எந்த நிலையிலும் – மிலேச்சர்கள் பக்கம் சாய அணியமாய் இருந்தார்கள் என்பதால் நிச்சயம் நாட்டின் நிலைமைகள் சுமுகமாய் இருந்திருக்க முடியாது. நாட்டில் ஏற்பட்டிருந்த சிதைவும்

---

* எலியட் : "இந்திய வரலாறு"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழப்பமும் செல்வந்தர்களைக்கூட பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளியிருந்தது. எதிர்ப்புரட்சியின் விளைவுகள் வழக்கமாக இதுவாகத்தான் இருக்கும். சக்திகளின் கூட்டணியை வைத்து ஒரு புரட்சி தோற்கடிக்கப்படலாம். ஆனால், வெற்றியடைந்த பிற்போக்குச் சக்திகள் அந்த வெற்றியைக் கொண்டு புரட்சிக்குக் காரணமாயிருந்த சமூக முரண்பாட்டுக்கான காரணிகளை நீக்கும் பணியைச் செய்துவிட முடியாது, இந்தியாவில், பௌத்தப் புரட்சி தோற்கடிக்கப்படவில்லை. மாறாக, அது தன்னுள் பலவீனங்களைக் கொண்டிருந்ததால், தவறாக முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். புரட்சியை வெற்றிக்குக் கொண்டு செல்லுமளவிற்கு சமூகச்சக்திகள் போதுமான அளவு பக்குவமில்லாமல் இருந்தன. இதன் விளைவாக பௌத்தத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, மோசமான பொருளாதாரச் சீரழிவு, அரசியல் ஒடுக்கு முறை, அறிவு ஜீவிகளின் அராஜகம், ஆன்மீகக் குழப்பம் ஆகிய சிக்கல்களில் நாடு வீழ்ந்து கிடந்தது. நடைமுறையில், முழுச் சமூகமும், இந்த அவலமான சீரழிவிலும், சிதைவிலும் பங்கெடுத்திருந்தது. இதனால்தான், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு அரசியல் சமத்துவம் வழங்கவில்லையென்றாலும், சமூகச் சமத்துவம் வழங்கிய இசுலாமியக் கொடியின் கீழ் உடனடியாக அணி திரண்டனர். அது மட்டுமல்ல, மேல்தட்டு வர்க்கங்கள் கூட, தன்னல நோக்கங்களுக்காக அந்நிய ஆக்கிரமிப்பிற்கு ஊழியம் செய்ய முன்வந்தனர். மக்கள் விரக்தியின் விளிம்பில் நிற்க மேல்தட்டு வர்க்கமோ முழுக்கவும் சீரழிந்த நிலையில் இருந்ததையே இது எடுத்துக் காட்டுகிறது.

பண்டைய இந்துப் பண்பாட்டின் உறுதியான ஆர்வலரான ஹேவல் முசுலீம்கள் மீது அனுதாபமோ அல்லது அவர்கள்பால் இரக்கமோ காட்டாதவர். இந்தியாவில் இசுலாம் பரவியது குறித்து அவர் முன்வைத்துள்ள சுவையான சான்று பின்வருமாறு :

> "இசுலாம் மதத்தைத் தழுவிக் கொண்டவர்களுக்கு, நீதிமன்றத்தில், ஒரு முசுலீமுக்குக் கிடைத்த அனைத்து உரிமைகளும் கிடைத்து வந்தன. அங்கு நீதிமன்றங்களில் அராபியச் சட்டங்களையோ, பழக்க வழக்கங்களையோ அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. குர்–ஆனே அனைத்து வழக்குகளையும் தீர்மானித்து வந்தது. மதமாற்றம் என்ற இந்த வழிமுறையானது இந்துச் சமூகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களிடையே குறிப்பாக, பார்ப்பனியத்தின் கடுமையான விதிமுறைகளால் "அசுத்தமான வர்க்கங்கள்" எனக் கருதப்பட்டு வந்த மக்களிடையே வலுவான பாதிப்பைச் செலுத்தி வந்தது.*

பார்ப்பனியச் சட்டங்களின் மிகச் சிறந்த பண்புகளின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த ஒருவரின் புகழ்ச்சியான மதிப்பீடு அல்ல இது. எப்படியிருந்த போதிலும், முகம்மதியர்களின் படையெடுப்பின் போது, இந்தியாவில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் இந்துச் சட்டங்கள் மீதோ, பார்ப்பனிய வைதீகத்தின்

---

* ஹேவல் – "இந்தியாவில் ஆரிய ஆட்சி".



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரபுகள் மீதோ விசுவாசம் கொள்வதற்கு எந்தச் சிறு காரணமும் இல்லாமல் இருந்தது. இந்தப் பாரம்பரியத்தைக் கைகழுவிவிட்டு, இந்துப் பிற்போக்குச் சக்திகளின் ஒடுக்கு முறைக்கு எதிராகத் தங்களுக்குப் பாதுகாப்புத் தர முன்வந்த இசுலாமின் சமத்துவச் சட்டங்களை ஏற்றுக் கொள்ள அம்மக்கள் அணியமாயிருந்தனர்.

அராபிய இறைத்தூதரின் போதனைகளின் ஆன்மீக மதிப்பீடுகளைக் கண்டனம் செய்த ஹேவல், அதே சமயத்தில் இந்தியாவில் அப்போதனைகள் பரவியது குறித்து ஒரு மிக முக்கியமான கருத்தையும் சொல்லியிருக்கிறார் அதுபின்வருமாறு : "இசுலாமின் தத்துவம் அல்ல; மாறாக, அதன் சமூகவியல் திட்டமே இந்தியாவில் அதற்கு எண்ணற்ற ஆதரவாளர்களை வெற்றி கொள்ளக் காரணமாக இருந்திருக்கிறது." நிச்சயமாக, மக்களைப் பொறுத்த அளவில், தத்துவம் அவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. தங்களின் தற்போதைய வாழ்க்கைச் சூழலைக் காட்டிலும், சற்று மேம்பட்ட சூழலை முன்வைத்த ஒரு "சமூகவியல் திட்டமே" அவர்களின் கவனத்தை எப்போதுமே ஈர்த்து வந்தது. ஒரு மோசமான தத்துவம் – இன்னும் சரியாகச் சொல்வதானால் வாழ்க்கை குறித்த ஒரு பிற்போக்குத் தனமான பார்வையானது – ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு சமூகவியல் திட்டத்தோடு ஒத்துப் போக முடியாது. இசுலாமின் சமூகவியல் திட்டம் இந்திய மக்களின் ஆதரவைப் பெற்றிருந்ததென்றால் அதற்குக் காரணம் அத்திட்டத்தின் பின்னால் இருந்த தத்துவமே ஆகும். சமூகக் குழப்பத்திற்குக் காரணமாயிருந்த இந்துத் தத்துவத்தைக் காட்டிலும், அக்குழப்பத்திலிருந்து மீண்டெழ இந்திய மக்களுக்கு ஒரு வழியைக் காட்டிய இசுலாமின் தத்துவம் சிறந்ததாகக் கருதப்பட்டது. மேற்சொல்லியுள்ள கருத்தின் மூலம், பதிமூன்று பதினான்காம் நூற்றாண்டுகளின்போது, இசுலாம் இந்தியாவில் வெற்றிகண்ட தருணத்தில் , அது (இசுலாம்) தன் சமூகப் புரட்சிகரப் பாத்திரத்தை முழுதும் இழந்து விடவில்லை என்றும், அதன் சமூக–புரட்சிகரப் பண்பின் காரணமாகவே அது இந்தியாவில் ஆழமாக தன் வேரைப் பாய்ச்சியிருந்தது என்றும் ஹேவல் ஒப்புக் கொண்டிருக்கிறார். இன்னும் துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் இந்துப் பழமைவாதத்தோடு ஒப்பிடும்போது, இசுலாம் அதன் நசிந்த சீரழிவுக் காலத்திலும் கூட ஆன்மீக, கருத்தியல், சமூக முன்னேற்றத்தை பிரதிநிதிப்படுத்தி வந்தது.

இந்தோ– அய்ரோப்பியப் பண்பாட்டின் புகழ்பாடிகளில் ஹேவல் பிரபலமானவர். மனிதனின் ஆக்கபூர்வமான சிந்தனையின் விளைவே இந்துப் பண்பாடு என்ற கருத்துக் கொண்டவர். மறுபுறம் இவர் முசுலீம்களைக் கடுமையாக வெறுத்து வந்தவர். இவரின் கருத்துக்களை, இந்துக்களுக்கு எதிரான கருத்துக்கள் என நிராகரித்து விட முடியாது, உண்மையில் சொல்லப் போனால், இவரின் சாய்வு எல்லாம் முழுக்கவும் இந்துக்களின் பக்கம்தான். இந்தியாவில் கடந்த காலத்தில் நடந்திருந்த நிகழ்ச்சிகள் மீது இவரைப் போன்ற வரலாற்றாசிரியர்களே மனக்குறைகள் கொண்டிருந்தார்கள் என்றால், உண்மையில், நிலைமைகள் மிகத் துயரமானவையாகவே இருந்தன எனச் சொல்லலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" இந்தியாவில் இசுலாம் அடைந்த வெற்றிக்கு புறக்காரணங்களைப் பொறுப்பாக்க முடியாது. ஹர்சரின் இறப்பிற்குப் பிறகு உருவாக்கப்பட்டிருந்த ஆரியவர்த்தத்தின் அரசியல் சீரழிவே இதற்கு முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது.. தன் இறை நம்பிக்கையை உண்மையாகப் பின்பற்றியவர்களுக்கு... சமமான ஆன்மீகத் தகுதியை வழங்கிய.... இறைத்தூதரின் சமூகத் திட்டமோ, இசுலாமை ஒரு அரசியல், சமூகக் கட்டளைகளாக உருவாக்கியிருந்தது. அதற்கு ஒரு தலையாய இலட்சியப் பணியைக் கையளித்திருந்தது... உலகத்தை உள்ளது உள்ளபடியே ஏற்றுக் கொள்ளும் ஒரு சராசரி மனித மனத்திற்குப் போதுமான மகிழ்ச்சியைத் தரும், ஒரு வாழ்க்கை முறை இசுலாமிடம் இருந்தது. . வட இந்தியாவின் அரசியல் உட்பூசல்களுக்கு வீரியமான காரணமாகவிருந்த பௌத்தத் தத்துவத்திற்கும் வைதீகப் பார்ப்பனியத்திற்கும் இடையிலான மோதல் உச்சத்திலிருந்த காலத்தில்தான், இசுலாம் தனது அரசியல் வலிமையின் உச்சத்தை எட்டியிருந்தது."*

ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின்போது மன்னர் ஹர்சவர்த்தனர் மாண்டு போனார். இதனால் இந்தியாவில் அரசியல் பிளவு ஏற்படத் தொடங்கியது. இதற்கு இணையாக இசுலாம் எழுச்சி இடம் பெற்றிருந்தது. ஒரு மன்னன் எவ்வளவுதான் உன்னதமானவனாக இருந்தபோதிலும், அவனது மரணம் வரலாற்றின் திருப்பு முனையாக இருக்க முடியாது. பல நூற்றாண்டுகளாக இந்தப் போக்கு (சிதைவு) நீடித்து வந்திருக்கிறது. ஒரு குறுகிய காலத்திற்குப் பௌத்தப் புரட்சி இப்போக்கைத் தடுத்து நிறுத்தியிருந்தது. ஆனால், அதன் தோல்வி, இப்போக்கை உக்கிரப்படுத்தி அழுத்தம் தந்து விரைவுபடுத்திவிட்டது. உண்மையில், அங்கு கிறித்துவ மதகுருமார்கள் நடந்து கொண்டதைப் போலவே, இங்கும், பௌத்தத் துறவிகளின் சீரழிவும், அதன் சிதைவும், இந்தியச் சமூகம் முழுவதையும் பாதித்திருந்தது. முகலீம் படையெடுப்பிற்கு இப்பாதிப்பு மிகப்பெரும் உதவியாய் அமைந்து விட்டது.

கஜினி முகம்மதுவின் படையெடுப்புகளைப் பற்றிச் சொல்லும்போது ஹேவல் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

அவரது ஆயுதங்களின் நிலையான வெற்றி அவர் கௌரவத்திற்கு அளவற்ற பெருமை சேர்த்தது. போரிடுவதையே ஒரு மதமாகவும் போர்க்களத்தில் பெறும் வெற்றியையே மிக உன்னத ஊக்கமாகவும் கருதிவந்த வடமேற்கு சத்திரிய வர்க்கத்திலிருந்து, எண்ணற்ற ஆதரவாளர்களை இசுலாமிற்குக் கொண்டு வந்தது." *

நினைவுக்கெட்டாத நாட்களிலிருந்து இந்தியர்கள் வணங்கிவந்த புனிதத் தலங்களின் தெய்விகத் தன்மை மீது கஜினியின் வீரச் செயல்கள் தடுமாற வைக்கும் ஒரு தாக்குதலைத் தொடுத்திருந்தன. இதன் விளைவாக அந்தப் புனிதத் தலங்களில் வழிபாடு மூலம் வெளிப்பட்டு வந்த மத உணர்வுகளும், அந்தப் புனிதத் தலங்களில்

* அதே நூல்

www.tamilarangam.net

குடிகொண்டிருந்த தெய்வங்கள் மீது (மக்கள்) வைத்திருந்த பக்தியும், கடுமையான அதிர்ச்சிக்கும் தவிர்க்கவியலாத குலைவுக்கும் ஆட்பட்டன. இம்மாதிரியான ஒரு சூழலில், கோழைத்தனத்தைக் காட்டிய தெய்வங்கள் மீது கொண்டிருந்த பக்தியைக் கைவிட்டு விட்டு அதைவிட வலிமையான ஒரு தெய்வத்தின் மீது பக்தியை வைக்கும்படி, "மத உணர்ச்சிகளும், ஆன்மீக உள்ளுணர்வுகளும் " மக்களைத் தூண்டிவிட்டன. இந்தப் புதிய தெய்வத்தின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்குப் பரிசாக மக்களுக்கு மாபெரும் பயன்கள் கிடைத்திருந்தது. பற்பல ஆண்டுகளாக தனேஸ்வரம், மதுரா, சோமநாதபுரம் ஆகிய புகழ்பெற்ற கோயில்களில் உள்ள கடவுள்களின் இயற்கையை மீறிய வல்லமை மீது லட்சக்கணக்கான மக்கள் நம்பிக்கை கொண்டு இருந்தனர். இந்தச் சக்தி வாய்ந்த தெய்வங்கள் பாதுகாப்புத் தந்து வருவதாக, அக்கோவில்களின் பூசாரிகள் போலித்தனமாகச் சொல்லி வந்ததை நம்பிய மக்கள், அத்தெய்வங்களுக்கு அளித்து வந்த காணிக்கைகள் மூலம், அக்கோவில் பூசாரிகள் கொழுத்த செல்வத்தைத் திரட்டியிருந்தனர். மத–விரோத (infidel) ஆக்கிரமிப்பாளர் ஒருவரது குரூரத் தாக்குதலால், அந்தப் போற்றுதலுக்குரிய பக்தியும் மரபுகளும், மணல்வீட்டைப்போல திடீரெனச் சரிந்துவிட்டன. கஜினியின் படைகள், கோவிலை நெருங்கியபோது,தெய்வத்தின் கோபத்தீ ஆக்கிரமிப்பாளர்களை விழுங்கிவிடும் என பூசாரிகள் மக்களிடம் சொல்லியிருந்தனர். மக்கள் அந்த அதிசயம் நிகழப்போகிறது என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தார். ஆனால், அம்மாதிரியான அதிசயம் ஏதும் நிகழவில்லை. உண்மையில்சொல்லப் போனால், ஆக்கிரமிப்பாளனின் கடவுள்தான் அதிசயம் நிகழ்த்தியிருந்தது. அதிசயங்களைச் சொல்லி விசுவாசத்தை வளர்த்திருந்ததால் அதைவிடப் பெரிய அதிசயம் நிகழும்போது விசுவாசம் மாறுவது அவசியமாக இருந்தது. மதத்தின் அனைத்து மரபு விதிகளின் அடிப்படையில் வைத்து முடிவு செய்தால், அந்த நெருக்கடியான தருணத்தில் இசுலாத்தைத் தழுவிய மக்கள், மிகுந்த மதப்பற்றுக் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் மீது நடைபெற்ற முசுலீம் படையெடுப்பிற்கான அகக்காரணங்களையும் புறக்காரணங்களையும் ஒரு தீவிர ஆய்விற்கு உட்படுத்துவது இன்றைக்கு நடைமுறையில் மதிப்பு வாய்ந்த ஒரு செயலாக அமையும். ஒரு வைதீக இந்து தன் பக்கத்தில் வாழ்ந்து வரும் முசுலீமை ஒரு தாழ்வான மனிதனாகப் பார்ப்பதற்குக் காரணமாக இருந்து வரும் தப்பெண்ணங்களை அகற்ற இது உதவும். இந்துக்கள் தாங்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் தப்பெண்ணங்களிலிருந்து விடுதலை பெற்றால் , முசுலீம் படையெடுப்பின் ஆக்கபூர்வமான விளைவுகளை ஆதரிக்கக் கூடிய ஒரு நிலைக்கு வந்து விடுவார்கள். அதுவே வென்றவர்களின் மீது வெல்லப்பட்டவர்கள் வெறுப்பின்றி வாழும்படி செய்யும். வரலாறு குறித்த உணர்ச்சி வெறியற்ற புரிந்துணர்வின் மூலமாக அணுகுமுறையில் ஒரு தீவிரமான மாற்றத்தைக் கொண்டு வராமல் வகுப்புவாதச் சிக்கலை என்றுமே தீர்க்க முடியாது. பண்டையப் பண்பாடு நிலைகுலைந்து போனதால் உருவான குழப்பத்திலிருந்து இந்தியச்சமூகத்தை மீட்டெடுக்க முசுலீம்கள் செலுத்திய பங்களிப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்துக்கள் பாராட்டாத வரை முசுலீம்களை இந்திய நாட்டின் பிரிக்க முடியாத பகுதியாக அவர்கள் ஏற்றுக் கொள்வது என்பது நடக்க முடியாத ஒரு செயலாகவே இருக்கும். இதற்கும் மேலாக, இந்தியாவில் முசுலீம்களின் வெற்றிகரமான வருகை குறித்த ஒரு சரியான புரிதல் மூலம் கிடைக்கும், வரலாறு குறித்த முறையான அறிவும், புரிதலும், நமது கெடுவாய்ப்பான சூழலுக்கான ஆழமான காரணங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் அதனைக் களைந்தெறியவும் நமக்கு உதவியாக இருக்கும்.

மறுபுறம், இன்று சில முசுலீம்கள் தாங்கள் கொண்டிருக்கும் மத விசுவாசத்தின் மூலம், தங்கள் மதம் வரலாற்று அரங்கில் ஆற்றியிருந்த மேன்மையான பாத்திரம் குறித்து உணர்வு பெற்றுக் கொள்ளக்கூடும். பெரும்பாலான முசுலீம்கள் அராபியர்களின் பகுத்தறிவுவாதத்தையும் அய்யுறவுவாதத்தையும் கைவிட்டதோடு குர்–ஆனிலிருந்து பிரிந்து சென்ற திரிபாகவே கருதி அதை மறுத்து வருகின்றனர். இசுலாம் வளர்ச்சியின் பிற்காலப் பகுதியில் தோன்றியிருந்த பிற்போக்கு மதத் தலைவர்களைக் காட்டிலும் அல்லது இசுலாத்திற்கு மதம் மாறியிருந்த தார்த்தாரியர்களின் காட்டுமிராண்டித் தனமான மதவெறியைக் காட்டிலும் இசுலாம் மதத்தின் சொந்த வைதீகத் தன்மையற்ற தாராளப் பண்பையும் அதன் மதவெறியின்மையையும் அராபியத் தத்துவவாதிகள் தெளிவாக விளக்கியதன். காரணமாகவே வரலாற்றில் அது ஒரு மறக்கமுடியாத இடத்தைப் பிடிக்க முடிந்தது. இசுலாம், இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்னமே அது தன் முற்போக்குப் பாத்திரத்தைச் செய்து முடித்திருந்தது. சிந்து–கங்கை நதிக்கரையோரங்களில் இசுலாமின் கொடியைப் பறக்க விட்டது புரட்சிகரமான அராபிய நாயகர்கள் அல்ல. மாறாக, இசுலாமிற்கு மதம் மாறியிருந்தவர்களும், ஆடம்பர வாழ்க்கையில் சீரழிந்து கிடந்தவர்களுமான பாரசீகர்களும், மத்தியஆசியப் பகுதியைச் சேர்ந்த காட்டுமிராண்டிகளுமே ஆவர். முகம்மது நபிகளின் நினைவிற்குச் சின்னமாக விளங்கி வந்த அரபுப் பேரரசை இந்த இருவருமே கவிழ்த்து விட்டனர். பௌத்தப் புரட்சியைத் தூக்கியெறிந்து விட்டு, அதன் விளைவாக, இந்தியச் சமூகத்தை ஒரு குழப்பத்தில் ஆழ்த்தியிருந்த பார்ப்பனியப் பிற்போக்குச்சக்திகளுக்கு பலியாயிருந்த லட்சக்கணக்கான மக்கள் இசுலாமின் நம்பிக்கைச் செய்தியையும், விடுதலையையும் வரவேற்றனர். அராபிய நாயகர்களிடம் குடி கொண்டிருந்த பெருந்தன்மை சகிப்புத்தன்மை, தாராளவாதம் ஆகிய பண்புகளை, பாரசீகர்களோ அல்லது முகலாயப் படையெடுப்பாளர்களோ முற்றிலும் இழந்துவிட வில்லை. ஒப்பீட்டளவில், ஒரு சிறு கொள்ளைக் கூட்ட ஆக்கிரமிப்பாளர்கள் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வந்து இந்த பரந்த நாட்டை வெற்றி கொண்டு இங்கு நீண்ட காலத்திற்கு ஆட்சி நடத்தியதோடு ஆயிரக் கணக்கான மக்களை தங்கள் மதத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்திய சமூகத்தின் குறிப்பிட்ட சில புறத் தேவைகளை நிறைவு செய்திருக்கிறார்கள் என்பதை மெய்ப்பிக்க இந்த உண்மையே போதுமானது. இசுலாமுக்குச் சொந்தமாயிருந்த புரட்சிகரமான உணர்ச்சி வேகத்தைப் பிற்போக்குச் சக்திகள் பெருமளவுக்கு வலுக்குன்றச் செய்து விட்டன என்ற போதிலும் , இன்றும் கூட இந்துச்சமூகத்தின் மீது இசுலாம் குறிப்பிட்ட புரட்சிகரப் பாதிப்பைச் செலுத்தி வருகிறது.

www.tamilarangam.net

இந்தியாவில் முகம்மதியர்களின் ஆட்சி அதிகாரம் வலுப்பட்டதற்குப் படையெடுப்பாளர்களின் ஆயுத வன்முறை மட்டுமே காரணமாக இல்லை. இசுலாமிய நம்பிக்கைகளைப் பிரச்சாரம் செய்ததும் அதன் மதச் சட்டங்களின் முற்போக்கு முக்கியத்துவமுமே, இந்தியாவில் முகம்மதியர்களின் அதிகாரம் உறுதிப்பட காரணங்களாக இருந்திருக்கின்றன.

கடுமையான முசுலீம் – எதிர்ப்பு வெறி கொண்ட ஹேவலே கூட வெறுப்போடு ஒரு விசயத்தை ஒப்புக் கொள்கிறார். அது பின் வருமாறு :

> " இந்துச் சமுக வாழ்வின் மீது முசுலீம்களின் அரசியல் கோட்பாடு செலுத்திய பாதிப்புகள் இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்தன. ஒன்று, அது சாதி அமைப்பின் உக்கிரத்தை அதிகப்படுத்தி, அதற்கு எதிராக ஒரு கலகத்தைத் தட்டி எழுப்பியது. பெடோயின்களுக்கு (Bedoins)* அது காட்டியிருந்த மனதைக் கவரும் மயக்கத்தைப் போலவே இந்துச்சமுகத்தின் அடித்தட்டு மக்களுக்கும் எதிர்காலம் குறித்து ஒரு கவர்ச்சியை அது காட்டியிருந்தது... இசுலாம் சூத்திரனை ஒரு சுதந்திர மனிதனாக்கி அவனை உள்ளார்ந்த விதத்தில் பார்ப்பனர்களின் எசமானனாக மாற்றியிருந்தது. அய்ரோப்பிய மறுமலர்ச்சியைப் போலவே, இது அறிவு ஊற்றுக் களை கிளறியிருந்தது. பல வலிமையான மனிதர்களை உருவாக்கியது. இதில் சிலர் தங்கள் சுயமான மேதமையை வெளிப்படுத்தியிருந்தார்கள். மறுமலர்ச்சியைப் போலவே இதுவும் சாராம்சத்தில் ஒரு நகர வழிபாடாக இருந்தது. நாடோடிகளை அவர்கள் கூடாரத்திலிருந்து வெளிக் கொண்டு வந்தது. சூத்திரனை கிராமத்திலிருந்து வெளிக்கொண்டு வந்தது. வாழ்க்கையில் முழு இன்பக் கிளர்ச்சி கொண்ட ஒரு மனிதகுல வகையை இது வளர்த்தியிருந்தது. **

மேற்கண்ட மிகத் தெளிவான கருத்தோடு ஒரு விசயத்தை மட்டும் சேர்த்திக் கொள்ளலாம். பார்ப்பனிய வைதீகத்திற்கு எதிராக ஒரு பிரபலமான கலகத்தை உண்டாக்கியிருந்த கபீர், நானக், துக்காராம், சைதன்யர் இன்ன பிற சீர்திருத்தக்காரர்களின் எழுச்சிக்கு முகம்மதியர்களின் படையெடுப்பு நிலைநாட்டியிருந்த சமுகப் பாதிப்புகளே பெருமளவிற்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

வரலாறு குறித்த இத்தகைய எதார்த்தமான ஆய்வு நோக்கில் பார்த்தால் முசுலீம்களின் மதம், பண்பாடு குறித்த இந்துக்களின் அகந்தை கொண்ட பார்வை ஒரு அபத்தமே எனத் தெரிய வரும். இந்தப் பார்வை வரலாற்றை அவமதித்து வருகிறது. நமது நாட்டின் அரசியல் எதிர்காலத்திற்கு ஊறுவிளைவித்து வருகிறது. முசுலீம்களிடமிருந்து கற்றுக் கொண்ட அய்ரோப்பா, நவீனப் பண்பாட்டின் தலைவனாக மாறிவிட்டது. இன்றும் கூட, அதன் தலைசிறந்த புதல்வர்கள்

* பெடோயின்கள் : பாலைவன அராபிய நாடோடிகள் (மொர்)

* * அதே நூல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களது முந்திய நன்றிக் கடனுக்காக வெட்கப்படுவதில்லை. வாய்ப்புக் கேடாக இசுலாமின் பண்பாட்டு மரபிலிருந்து இந்தியா முழுமையாக நன்மை பெற முடியாமல் இருக்கிறது. காரணம், அதற்கான சிறப்புத்தகுதியை அது இன்னும் பெறவில்லை. ஒரு தாமதமான மறுமலர்ச்சியின் வேதனையான இந்தத் தருணத்தில் , இந்துக்கள் முசுலீம்கள் ஆகிய இருதரப்பாருமே, மனிதகுல வரலாற்றின் மறக்க முடியாத அந்த அத்தியாயங்களிலிருந்து லாபகரமான ஊக்கத்தைப் பெற முடியும். மனிதகுலப் பண்பாட்டிற்கு இசுலாம் அளித்த பங்களிப்பு குறித்த அறிவும், அந்தப் பங்களிப்பின் வரலாற்று மதிப்பு குறித்த முறையான மதிப்பீடும் இந்துக்களை உலுக்கி தன்னகங்கார தன்னலத்திலிருந்து அவர்களை விடுவிக்கும்; இன்றைய முசுலீம்களிடமுள்ள குறுகிய சிந்தனையை நேர்ப்படுத்தி, அவர்கள் போதனை செய்து வரும் (மத) விசுவாசத்தின் உண்மையான உயிர்நாடியோடு அவர்களை நேருக்கு நேர் சந்திக்க வைக்கும்.

❒ ❒ ❒

www.tamilarangam.net

# எமது வெளியீடுகள்

| | | ரூ.பை |
|---|---|---|
| இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம் | *எம்.என்.ராய்* | 25.00 |
| பாசிசம் | " | 35.00 |
| காசுமீரின் தொடரும் துயரம் | | 60.00 |
| சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும் | *பிளேவியா அக்னீஸ்* | 40.00 |
| அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்... | *ஷீலா ரௌபாத்தம்* | 40.00 |
| தான் பிரின்: தொடரும் பயணம் | *பா.ராமசாமி* | 50.00 |
| பெரியார் : ஆகஸ்ட் 15 | *எஸ்.வி.ராஜதுரை* | 225.00 |
| பெரியார் : சுயமரியாதை - சமதர்மம் | " | 250.00 |
| ஆகஸ்ட் 15 : இன்ப நாள் துக்க நாள் (பதிப்பாசிரியர்) | " | 30.00 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப் படைப்புகள் | *மாஓ சேதுங்* | 175.00 |
| மார்க்சியம் - பெண்ணியம் உறவும் முரணும் | *வெ.கோவிந்தசாமி - நடராஜ்* | 100.00 |
| கவர்ன்மெண்ட் பிராமணன் | *அரவிந்த மாளகத்தி* | 45.00 |
| பின்னை நவீனத்துவம் கோட்பாடுகளும், தமிழ்ச்சூழலும் | *தி.க. நடராசன் - அ.ராமசாமி* | 55.00 |
| அறம் / அதிகாரம் | *ராஜ் கௌதமன்* | 75.00 |
| பொய் + அபத்தம் = உண்மை | " | 32.00 |
| பின் நவீனத்துவம் இலக்கியம் அரசியல் | *அ.மார்க்ஸ்* | 35.00 |
| மார்க்சியத்தின் பெயரால்... | " | 25.00 |
| உரையாடல் தொடர்கிறது | *ரவிக்குமார்* | 30.00 |
| குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம் | *அ.மார்க்ஸ் - கோ.கேசவன்* | 20.00 |
| இந்து சட்டத் தொகுப்பு: மாயையும் எதார்த்தமும் | *மது கிஷ்வர்* | 20.00 |
| புதியதோர் உலகம் | *கோவிந்தன்* | 70.00 |
| கிளுக்கி | *பாப்லோ அறிவுக்குயில்* | 30.00 |
| தாய் மண் | *விழி.பா. இதயவேந்தன்* | 20.00 |
| மரணத்துள் வாழ்வோம் | (ஈழத்துக் கவிதைகள்) | 75.00 |

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE

இசுலாமை இன்று ''சர்வதேசப் பயங்கரவாதமாக'' அமெரிக்கா முன்னிறுத்தி வருகிறது. இந்தியாவிலும் இந்துத்துவா சக்திகள் இசுலாமியரை எதிரியாகக் காட்டி வருகின்றன. சராசரி மனிதனிலிருந்து, ''அறிவுஜீவிகள்'' வரை இசுலாம் குறித்தும், இசுலாமியர்கள் குறித்தும் தவறான தப்பெண்ணங்களே நிலவிவருகின்றன. இசுலாமியர் குறித்து ஒரு பொய்யான பொதுப்புத்தி மக்களிடையே நிலவிவருகிறது. இசுலாம் - எதிர்ப்புச் சக்திகள் இந்தப் பொதுப்புத்தியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. இசுலாமியர்கள் குறித்த தவறான எண்ணங்களைப் போக்குவது இன்று சனநாயகவாதிகளின் முக்கியக் கடமைகளில் ஒன்று.

இசுலாம் தோன்றியதின் சமூகப் பின்னணி, அதன் வரலாற்றுப் பங்களிப்பு ஆகியன குறித்து இந்நூல் வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துரைக்கிறது. இசுலாம் குறித்து இசுலாம் - அல்லாதவர்கள் மத்தியில் நிலவிவரும் தவறான கருத்துக்களை மாற்றாமல், அடிப்படையில் ஒரு சமூக நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியாது என இந்நூல் ஆசிரியர் உறுதியாகக் கருதுகிறார். அந்த வகையில் இந்துக்கள் மத்தியில் நிலவிவரும் தப்பெண்ணங்களை நீக்க இந்நூல் பெருமளவு உதவும்.

விடியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்